31 MAR 1958

குறளும், கீதையும்.

இயற்றியவர்,

கா. துப்புசாமிக்கவுண்டர்.

- G.D.S -

உ

ஆதிபகவன் துணை.

குறளும் கீதையும்.

★

இதில் 47 குறட்பாக்களுக்கு 70 கீதா சுலோகங்களை
உவமை காட்டி இயற்றப்பெற்றது.

★

இயற்றியவர் :

கா. குப்புசாமிக் கவுண்டர்,

மானுப்பட்டி. P. O.

உடுமலைத் தாலூகா. கோவை ஜில்லா

பதிப்பகம் :

கோபால் மின்சார அச்சகம், உடுமலை.

குறளும் கீதையும்

(முதற் பதிப்பு)

★

இப்பதிப்பை வெளியிடப் பொருளுதவியவர்:

திண்டுக்கல், சௌந்திரராஜா மில்ஸ் மேனேஜிங் டைரக்டர்

அன்புச் செல்வர்.

கணபதிபாளையம் ஜி. டி. நாராயணசாமி நாயுடு அவர்கள்

ஃ ஃ

பதிப்புரிமை ஆசிரியருக்கே.

விலை ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:

எம். ஜெ. தண்டபாணி,

காந்தி நினைவு மன்றம்,

மானுப்பட்டி P.O.

உடுமலை Tk. கோவை Dt.

1953.

அன்பர்கட்கோர் வேண்டுகோள்.

"உலகில் ஒருவன் நன்மைசெய்ய அறிந்திருந்தும் அதைச் செய்யாமல் விடுவானாயின், அது அவனுக்குப் பாவம்" என்பது எல்லாமத சித்தாந்தமும் ஆகும். இதையே, "சொல் வன்மை யுண்டெனிற் கொன்னே விடுத்தொழிதல் செய்ந்நன்றிகோறலின் வேறல்ல" எனக் குமரகுருபரசுவாமிகளும் கூறினார். இவ்வுபதேச வாக்கியங்களால் நாம் உணரவேண்டுவது யாதெனில், உண்மை ஞான முணர்ந்த மெய்யுணர்வுடையார், "யான்பெற்ற வின்பம் பெறுக இவ்வையம்" என்ற காருண்ய உணர்ச்சியுடன், ஆன்ம விவேகமின்றிய பாமர மக்களை அறியாமையினின்றும் நீக்கி, தெய்விகப் பற்றையும், நம் சமய நம்பிக்கையையும், ஆன்மநேய ஒருமைப் பாட்டையும், அறவொழுக்கத்தையும் உணரும்படி போதித்து, அவர்களைச் சன்மார்க்க நெறியிற் பயிலச் செய்து, இம்மை, மறுமையிலும் இன்ப வாழ்வைப் பெறத் தகுதியுடையராகச் செய்வதுவே மக்கட்குச் செய்யும் நற்பணியாமென்பது வியாசர்போன்ற தீர்க்கதரிசிகளின் அறிவுரையாகும்.

மற்றும், உலகில் தோன்றியுள்ள பல மதங்களின் சித்தாந்தங்களையும் தன்னுள் அடக்கியும், 'ஒவ்வொரு சீவான்மாவும் கடவுட்டன்மையுடனேயே உற்பவித்துள்ளது' என்ற அரிய தத்துவ ஞானமார்க்கத்தையும் புகட்டும் பழமையாகிய நம் சமய மரபினில் தோன்றிய நம் சமயத்தவரிற் பலர், நம் சமயத்தின் உண்மைத் தத்துவங்களை உணராமல், அதனை இழித்துக் கூறவும் ஒழித்துக்கட்டவும் முற்பட்டுள்ளனர். இது, பிறமதத்தவர்கள் நம் சமயத்தை இழிவுபடுத்துவதற்குச் சாதகமான செயலாகும். இவ்விளைவுக்குக் காரணம், நம் சமயத்தின் பேரால் நடைபெற்றுவரும் பொரு

ஊற்ற போலிச் சடங்குகளும், மனக்கசப்பான சமயப் பிணக்குகளும், சமய உண்மைகளை மக்களுக்குச் சரிவர உணரச் செய்யாததுமேயாகும்.

இக்குறைபாடுகள்நீங்கி, நம் சமயத்தவர்கள் ஆன்மீகத் துறையில் முன்னேற்ற மடைந்து தெய்வீகப் பற்றும் சமய நம்பிக்கையும் உடையராகச் செய்யவேண்டின், கடல் போன்று விரிந்துள்ள நம் சமயத்தின் உண்மைத் தத்துவங் களைக்காலத்திற்கேற்றவாறு தொகுத்து, சிறுசிறுபகுதிகளாக வெளியிட்டு, யாவரும் உணரும்படி உணர்த்தினால்தான் நம் நாட்டு இளைஞர்கள் நம் சமயத்தை ஆதரிக்க முன்வந்து நம் சுதந்திர நாட்டைச் சிறப்படையச் செய்வார்கள் என்ற நம்பிக்கையுடனேயே, "**குறளும், கீதையும்**" என்ற இவ் வாராய்ச்சி நூல் வெளியிடலானதேயன்றி, எனது கல்விப் புலமையினாலன்று என்பதைக் கடலனைய கல்வி மிகுந்த புல வர் பெருமக்களுக்கு நினைப்பூட்டுகிறேன்.

மேலும், இம்முயற்சியில் அறிவாற்றல்களின் மிக்க அன்பர்கள் யாவரும்சூழ்மி, நம் சமய வேதாந்த சித்தாந்தங் களில் உள்ளடங்கியுள்ள உயரிய கருத்துக்களை யாவருக்கும் விளங்கும்படி உணர்த்தி, நம்நாட்டு இளைஞர்களைத் தெய்வ சம்பத்துடையவர்களாகவும், சமரச சன்மார்க்க வீரர்களா கவும், இல்லற ஞானியர்களாகவும் விளங்கச்செய்து, வள்ளு வர் வகுத்த 'வாழ்வாங்கு வாழும்' அறவாழ்வு பெறுதற் கான அருள்நெறி முறையைப் புகட்டியருளத் தெய்வப் புலமைமிக்க பண்டிதர்களும், வள்ளற்றன்மை வாய்ந்த அறி வின்மிக்க செல்வர்களும் தயங்காது முன்வந்து பணியாற்ற வேண்டுகிறேன்.

நன்றி அறிவிப்பு.

இவ்வுயரிய சன்மார்க்கப் பணியில் என் உளத்தில் தோன்றாத் துணையாய் நின்று தூண்டிய **எல்லாம் வல்ல இறைவனை** எனது திரிகரண சுத்தியுடன் வணங்கு கின்றேன்.

மற்றும், இந்நூலைக் கண்ணுற்றதும் சிரமத்தைப் பொருட்படுத்தாது மதிப்புரைகள் வழங்கிய **ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதியார்** அவர்களுக்கும், **ஸ்ரீ சுவாமி சித்பவானந்த அடிகளார்** அவர்களுக்கும், கனம் முதன் மந்திரி **ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார்** அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னும், இந்நூலின் கையெழுத்துப் பிரதியைக் கண்டு மகிழ்ச்சியுடன் பதிப்பிக்க முன்வந்துதவிய சன்மார்க்க சீலர் கணபதிபாளையம் **உயர்திரு ஜி. டி. நாராயணசாமி நாயுடு** அவர்களுக்கும், பதிப்பிற்குப் போய்வர வாகனவசதிக்கும் நூலின் அரங்கேற்றத்திற்கும் உதவி யளிக்க முன்வந்த அன்புச் செல்வர் பொள்ளாச்சி **ஸ்ரீ நா. மகாலிங்கம் B.Sc., A.M.I.E., M.L.A.,** அவர்களுக்கும், குறட்பாக்களின் விரிவுரை உதாரணங்களைப் பரிசீலனை செய்துதவிய பேரூர் சாந்தலிங்கசுவாமிமடம் சிவத்திரு வித்வான் **இராமசாமி அடிகளார்** அவர்களுக்கும், கீதா சுலோகங்களைச் சரிபார்த்துதவிய உடுமலை வழக்கறிஞர் **உயர்திரு S. கிருஷ்ண ராவ் M. A., B. L.,** அவர்களுக்கும், இலக்கண வழுவின்றி வாக்கியங்களைத் திருத்தியுதவிய தமிழ்ப் புலமை வல்லுநர் மானுப்பட்டி உயர்திரு **கு. வெங்கடசாமி** அவர்களுக்கும், இவ்வாராய்ச்சிக்குத் துணையிருந்து எழுதிப் (Proof) பிழைதிருத்தி பதிப்புக்கு உதவிபுரிந்த எழுத்தாளர் **உயர்திரு எம். ஜெ. தண்டபாணி** அவர்களுக்கும், இந்நூலைத் தகுந்த முறையில் பதிப்பித்து உதவிய **உடுமலை கோபால் மின்சார அச்சகத்தாருக்கும்** என் உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கா. கு.

அரிய புகழுரைகள்.

ஓம்.

யோக ஸமாஜம்,
வடலூர்.
25—10—53.

அன்பீர்,

தாங்கள் தொகுத்த **"குறளும் கீதையும்"** *என்ற ஆராய்ச்சி நூலைக்கண்டு மகிழ்ச்சியடைந்தேன். சுவாமி சித்பவானந்தரின் கீதையுரையும், பரிமேலழகரின் குறளுரையும் இந்நூலின் உள்ளத்துடிப்புகளாக விளங்குகின்றன.*

தமிழின் உயிர், குறள்; சமஸ்கிருதத்தின் உயிர், கீதை. இரண்டும் அறவிளக்கின் இரு சுடர்களாகும். இரண்டும் வாழ்விற்கு நல்வழிகாட்டும் நல்லாசான்போலும்.

தங்கள் தொகுப்பு மிக நன்றாயிருக்கிறது. அவாவும், பகையும், நாத்திகத் தடிப்பும் போர்புரியும் இந்நாட்களில் தங்களைப்போன்ற கடவுளன்பரும், சன்மார்க்க நேயரும் நாட்டிற்கு அணிகலமாவார்.

இன்பமே சூழ்க! எல்லாரும் வாழ்க!

சுத்தானந்தபாரதி.

CHIEF MINISTER OF MADRAS.

FORT ST. GEORGE
MADRAS.
27—10—53.

நூல் மிக்க நல்லநூல். காரியத்தை ஆண்டவனை நம்பிச் செய்யுங்கள்.

இராஜகோபாலாச்சாரி.

ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம்,

திருப்பராய்த்துறை போஸ்ட்,
எலமனூர் ஸ்டேஷன்,
திருச்சிராப்பள்ளி 7–11–'53.

"நரிகள் வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்து வருகின்றன. ஆயினும், அவையாவும் ஒரே பாங்கில் சத்தமிடுகின்றன. சான்றோர் கருத்துக்களும் அத்தகையவைகளாம். இடத்தாலும், காலத்தாலும், மொழியாலும் அவர்கள் பிளவுபட்டிருப்பினும், மேலாம் கருத்துக்களை விளக்குதலில் அவர்களுக்கிடையில் பிளவு இல்லை"–இங்ஙனம் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் பகர்ந்துள்ளார்.

திரு. கா. குப்புசாமிக் கவுண்டர் இயற்றியுள்ள **"குறளும், கீதையும்"** என்னும் நூல் இவ்வுண்மையை நன்கு நிரூபிக்கிறது. அவர் வெளியிட்டுள்ள நூலில் 47-குறள்கள் ஆராய்ச்சிக்கு எடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் அடங்கியுள்ள கருத்துக்களுக்கு ஒப்பும் உவமையும் காட்டுதற்கு பகவத்கீதையினின்றும் எழுபது சுலோகங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அடிப்படைக் கோட்பாடுகளில் சாஸ்திரங்களுக்கிடையில் முரண்பாடுகள் இல்லை என்பதற்கு இந்நூல் தக்க சான்றாகும். இரண்டு பெரிய நூல்களைச் சீர்தூக்கி ஆராய்தற்கும் இது நன்கு பயன்படும். அரிய கருத்துக்களை ஆழ்ந்து சிந்திப்பதற்கும் இது உதவும். தமிழ் மக்கள் இதை நன்கு பயன்படுத்துவார்களாக.

சித்பவானந்த.

ஓம்.

ஆதிபகவன் துணை.

குறளும் கீதையும்.

தோற்றுவாய்.

உலகில் எல்லாம் வல்ல இறைவன் திருவிளையாடல் போன்ற நடைமுறையில், நிற்பன நடப்பனவாகிய சீவ ராசிகள் பல வேறுபாடுகளுடன் தோன்றி நின்று மறைவதையும், வாழ்நாளில் ஏற்படும் இன்ப துன்பங்களையும், மக்களாகிய நாம் கண்டுணர்ந்தும் அனுபவித்தும் வருகிறோம். அன்றியும், அதன் காரணத்தை உணரவும், அதினின்று விடுதலைபெற வழியுண்டா வென்பதை ஆராய்ந் துணரவும், பகுத்தறிவால் நாம் தூண்டப்படுகிறோம்.

குருகுலக் கல்வியின் நன்மைகள்.

இவ்வித ஆராய்ச்சிகளில் முற்பட்ட நம் மூதாதையரா கிய பல பேரறிவாளர்களால், நீண்டகால அனுபவங்கொண்டு பல அறிவு நூல்கள் உண்டாயின; பின்பு பல மதங்களாகப் பிரிந்தன; பின்பு பேரின்ப வாழ்விற்குரிய பல மேலான கொள்கைகளைக் கைப்பற்றி, அதன் நிமித்தமாக அக்காலத் திய இளைஞர்கள் அக்காலத்திற்கேற்பக் குருகுல முறையில் கல்வி பயின்றும், ஆசிரிய மாணவ முறை வழுவாது, அவராசிபெற்று நூற்பொருளை யுணர்ந்தும், குருகுல வாசத் தால் தேகாரோக்கியமும், தீர்க்காயுளும், அறிவுத் திடனும் பொருந்தி, மனோ வியாகூலமின்றி உலகில் 'வாழ்வாங்கு வாழும்' நெறியுணர்ந்து, தெய்வ சம்மதமான இல்வாழ்க்கை நடாத்தி இம்மையிற் புகழும், மறுமையில் பேரின்ப வாழ்வும் பெற்றுள்ளார்கள் எனப் பிரமாண நூல்களும் பழங்கதை களும் கூறுகின்றன.

இவ்விதப் புனித வாழ்க்கைமுறையானது, நாளடைவில் குறைந்துவந்ததுடன், இடைக்காலத்தில் உண்டான அன்னியர் ஆட்சியினாலும், அவர்களின் மத போதனையினாலும், நம் உயரிய குருகுல வாசமுறையில் போதிக்கும் சமயபோதனையின்றி, அன்னிய மத போதனையின் வசப்பட்டதினால், நம் இளைஞர்களிடையே நம் நாட்டுக்கொவ்வாத சீர்கேடான பழக்க வழக்கங்கள் குடிபுகுந்து, நம் புராதனக் குருகுல ஒழுக்க நடை முறையானது மாறுபட்டு, 'நம் அரிய சமய நெறிகள் நம் நாட்டுக்கு வேண்டுவதில்லை' என்ற அளவுக்கு இன்றைய வாலிபர்களிற் சிலர் மனம் மாறுதலடைந்துள்ளனர்! இது, நம் நாட்டில் குருகுல முறையில் போதிக்கும் கல்விமுறை யில்லாமையே காரணமாகும்.

ஆயினும், நம் முன்னோர்களான தீர்க்கதரிசிகளால் ஏற்படுத்திய குருகுல முறையானது, அழிந்து விடாது; நன்மையான கொள்கைகள் என்றும் அழியாததுமாகும். அவை இக்காலத்தும் காலத்துக்கேற்ற மாறுதல்களுடன் சிற்சில இடங்களில் நடைபெற்று வருகின்றன; நாளடைவில் நம் சுதந்திரநாட்டில் முன்னேற்றமடைவதற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன.

ஆகவே, இன்றைய நிலையில் நம்நாடு மேன்மையுற்று முன்னேற்ற மடைந்து, மக்களிடையே சமாதான வாழ்வும், அறவொழுக்கமும் உண்டாக வேண்டின், நம் தெய்வப் புலவர் கூறிய குறளின் உபதேசத்தையும், ஸ்ரீ கண்ணன் காட்டிய வழியாகிய கீதையின் உபதேசத்தையும், மக்கள் கைக்கொண்டு, சாதி, சமய வாதங்களை விடுத்து, சகோதர பாவத்துடன் நல்வாழ்க்கை நடாத்துதலே, சன்மார்க்க நெறியின் தனிச்சிறப்பாம் என்பதை சமரச ஞானமுடைய பல பேரறிவாளர்கள் கருதுகின்றனர்.

மற்றும், தற்காலப் பேரறிஞர்களாகவும், ஞானமே திருமேனியாகவும், நம் தமிழன்னையின் தவப்புதல்வர்களாகவும் அவதாரம் செய்துள்ள **ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதியார்**

அவர்களும், **ஸ்ரீ சுவாமி சித்பவானந்த அடிகளார்** அவர்களும், மேற்கூறிய உண்மைத் தத்துவங்களை ஓயாது மக்களுக்கு உபதேச வாயிலாகவும், நூற்கள் வாயிலாகவும், மக்களிடையே எடுத்துக்கூறி தெய்வீக உணர்ச்சியை உண்டு செய்து வருகிறார்களென்பதூஉம் நம் தமிழ் நாட்டவர் யாவரும் அறிந்த உண்மையாகும்.

இதற்குச் சான்றாக ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரவர்கள் தாம் எழுதிய **"திருக்குறளின்பம்"** என்ற நூலில் "தேவரும் தெய்வநூலும்" என்ற முகவுரையில்: "நமது நாட்டின் பெருமை இரண்டு அற்புத நூற்களால் உலகளாவியது; ஒன்று கண்ணன் கீதை; மற்றொன்று வள்ளுவர் குறள். கீதை; போர்களத்தில் விசயன் சோர்வையகற்றி வீரப் பணியைக் கடவுட் பணியாகச் செய்யத்தூண்டியது. கண்ணன் விசயனுக்குச் சொன்னது, சஞ்சயன் கேட்டது; வியாசர் கவிதையாகத் தொடுத்து உலகிற்கு வழங்கியது குறள்; எளிய, தூய, இல்லற முனிவரால் அமைதியாக நீண்ட அனுபவங்கொண்டு இயற்றியருளப் பெற்றது. ஈரடிகளாலான இந்த இரண்டு நூல்களும் இறைவனடிபற்றிய அறவழி வாழ்வையே விளக்குகின்றன" என வலியுறுத்தினார். ஆகலின், மேற்கூறிய தெய்வத்தன்மை வாய்ந்த இரு நூற்களும், இவ்வுலக வாழ்வுக்குச் சாதகமான அறம் பொருள் இன்பத்தை இலக்கண வகையாலும், வீட்டு நெறியைத் துறவறம் முதலிய காரண வகையாகக் குறளில் கூறப்படுவதாலும், மறுமை யின்பத்துக்குச் சாதகமாகிய யோக ஞானப் பயிற்சிகளைக் கீதையில் கூறுவதாலும், இம்மை மறுமையாகிய இருமையிலும் இன்பத்தைப் பெற வேண்டியதே பகுத்தறிவுபெற்ற மனிதப் பிறவியின் சிறப்பியல்பாகுமென்பது நம் சமயநெறியின் உண்மைத் தத்துவமாவதால், இவ்வுயரிய நூற் பிரமாணங்களைத் தமது வாழ்க்கையில் பயன்படுத்திப் பிறவிப்பயனடைதலே நம் தமிழ் நாட்டு மக்களின் தலையாய கடனாகும்.

உலகைப்பற்றிய இருவித ஆராய்ச்சிகள்.

மற்றும், விஞ்ஞானம் மிகுந்த தற்கால உலக மக்களி டையே உலகைப்பற்றிய இருவித ஆராய்ச்சிகள் நிலவுகின் றன! அவற்றுள் ஒன்று: "உலகம் இயற்கையாலேயே இயங்குகின்றது....இதற்கு ஒரு கடவுள் வேண்டுவதில்லை" எனவும், "மக்களின் பகுத்தறிவால் எல்லாம் சாதித்துவிட லாம்" எனவும், ஒருசாரார் நிச்சயிக்கின்றனர். மற்றும், தெய் விக ஆற்றல் வாய்ந்த நம் முன்னோர்கள் கூறிய நூற்பிரமா ணத்திலும், கடவுளுண்மையிலும், சமயப் பற்றிலும் உறுதி கொண்ட பண்டிதர்கள்: "இயற்கை சடப்பொருள்; அது தானாக இயங்குதல் செய்யாது" எனவும், இரும்பானது தானாகத் தொழிற்படாமல் காந்தத்தின் முன்பு தொழிற்படு வதுபோல, எல்லாம்வல்ல சக்திமானாகிய இறைவன் சன் னதியில் இவ்வுலகம் தொழிற்படுகிறதெனவும், தார்க்கீக முறையிலும், நூற்பிரமாணத்துடனும் நிச்சயித்துக் கூறு கிறார்கள். அவற்றுள்:—

"அவனன்றி ஓரணுவும் அசையாது" எனத்தாயுமானாரும்,
"ஆதிபகவன் முதற்றேயுலகு" எனத் தெய்வப் புலவரும்,
"அந்தமாதி என்மனார் புலவர்" என மெய்கண்டதேவரும்,
"கரந்த சில்லிடந்தொறும் இடந்திகழ் பொருள்தொறும்
கரந்தெங்கும் பறந்துளன்" என நம்மாழ்வாரும்,

தங்கள் புனித வாக்குகளால் கடவுளின் இயல்பை உணர்த் தினார்கள்.

அறவாழ்வதுவே பெருவாழ்வாகும்.

மற்றும், உலக ஆராய்ச்சியை யார் யார் எவ்வாறு கொள்ளினுங் கொள்ளுக. இன்னும் பல சமயத்தவர்களும் எவ்வாறு நிச்சயித்தாலும் சரியே; உலகில் சமாதான வாழ்க் கையை மக்களிடையே நிலைபெறச் செய்யவேண்டுமாயின், தங்கள் தங்கள் வாழ்க்கை நடைமுறையானது தீர்க்க தரிசிகள் கூறும் அறவொழுக்கத்தைப் பின்பற்றியதாய் அமையவேண்டும் என்பதை மட்டும் மறந்துவிடலாகாது. இது எல்லா மக்களுக்கும், எல்லாச் சமயத்தவருக்கும்

பொது நியதியாகும். எக்காரணத்தைக் கொண்டும் அறவொழுக்கத்தைப் புறக்கணித்து மாறுபட்டு நடப்பவர்கள், தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக் கொண்டவர்கள் ஆவார்கள்

இவ்வுண்மையைத் தெய்வப்புலவர் :

"அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு" எனக் குறளிலும்,

கம்பர்:

"இறத்தலும் பிறத்தல்தானு மென்பனவிரண்டும் யாண்டும்
திறத்துளி நோக்கிற் செய்தவினை தரத்தெரிந்தவன்றே
புறத்தினி யுரைப்பதென்னோ பூவின்மேற் புனிதற் கேனும்
அறத்தின திறுதிவாழ்நாட் கிறுதியஃ துறுதியென்ப"

என இராமாயணத்திலும், கூறினார்கள்.

அன்றியும், நம் புண்ணிய பூமியாகிய பாரத நாட்டின் அருந்தவத்தாலுதித்த மகான்களும், தீர்க்க தரிசிகளும், பல தெய்விகப் புலவர்களும், தங்கள் அரிய ஞான விஞ்ஞான ஆராய்ச்சிகளினால் பல அற நூல்களின் தொகுதிகளையும், ஞான நூல்களையும், மக்களுக்காக ஏற்படுத்தியதன் காரணங்களையும் ஆராயின், அது அவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காகவோ அல்லது இன்ப வாழ்வைக் கருதியோ செய்யப்படவில்லை யென்பதூஉம், தங்களுக்குப் பின்வரும் சந்ததியார்களின் நல்வாழ்வைக் கருதியும், முடிவில் மக்களுக்கு ஏற்படும் 'மரணவத்தை' என்ற கொடிய துன்பத்தினின்றும் தப்பி சீவன் நற்கதியடைவதற்கேயாம்' என்ற பேருண்மையை, அறிவுடைப் பெருமக்கள்யாவரும் உணர்வார்கள்.

மரணத்தின் இயல்பு.

உலகில் மரணமானது எவ்வகைப்பட்ட திடம்பொருந்தியவர்களையும் திடுக்குற்று மனக்கலக்கம் ஏற்படுத்துவதா

கிய பெருந்துன்பமாகும். அது ஒவ்வொருவருக்கும், தவராத தும், தவிர்க்கமுடியாததும், பரிகாரமின்றியதுமான 'புரட்சிகரமான மாறுபாட்டை' உடையது! அதுபண்டித பாமரர்களையும், அரிய ஞான, விஞ்ஞான வாதிகளையும், முடிசார்ந்த மன்னர்களையும், மற்று முள்ளவர்களையும் முடிவில் 'ஒருபிடி சாம்பலாக'ச் செய்துவிடுகின்றது; எப்படிப்பட்டவர்களையும் கூற்றுவன் தப்பவிடுவதில்லை! ஆதலால், கோவில்களும், மடங்களும், உபநிடதங்களும், தத்துவ ஆராய்ச்சிகளும், தவங்களும், விரதங்களும், 'இம்மரணத்தினின்றும் தப்பி சீவன் இன்பநிலை யடைவதற்கேயாம்' என்பதை, நுண்ணறிவால் நோக்குறின் உண்மை புலனாகும்.

அன்றியும், 'மக்கள் நல்வழிப் படுவதற்கு மரணமே மருத்துவன் போன்று உபகரிக்கின்றது' என்பதை,

"ஓங்கு மாசையாம் பாசத்தா லுறப்பிணிப் புண்டு
வீங்கு முள்ளுணவதின் வழியோடியே மெலிந்து
தாங்கு செய்கையான் மனமிகச் சலிப்பவர்க்கன்றோ
தீங்கு மேவிய மரணந்தான் சிறப்பது சகத்தில்"—

அதாவது, 'உலக ஆசாபாசங்களால் பலவிதமாகிய மனக்கலக்கத்தை யடைந்து துன்புறு நீரார்க்கு, மரணம் அத்துன்பங்களினின்றும் விடுதலையளிக்கின்றது, என்பது பொருள்.

இதை—ஒவ்வொருவரும் 'தனக்கு மரணம் உண்டென்பதை மறத்தல் கூடாது' என்பதை,

"இறப்பெனு மெய்ம்மையை இம்மையா வர்க்கும்
மறப்பெனு மதனின்மேற் கேடுமற்றுண்டோ?"
எனக் கம்பரும்,

"தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டிர் ஆற்றுப் பாலகர்
முதியோ ரென்னுன் இளையோ ரென்னுன்
கொடுந் தொழிலாளன் கொற்றனன் குவிப்பவிவ்

வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ?" என "மணிமேகலா" காவியத்திலும், மரணத்தை முன்னிலைப்படுத்தியே அறமார்க்கத்தைப் போதிக்கின்றன.

மரணத்தைத் தாண்டும் விதிகள்.

ஆயின், 'மக்களால் மரணத்தைத் தாண்ட முடியுமா?' வென்றால், 'முடியும்' என்பதைப் பல நூல்களின்வாயிலாகப், பலசாதனங்களையும், பல உபாயங்களையும், மெய்யறிவுணர்ந்த நம் சமயப் பெரியார்கள் கூறியுள்ளார்கள். அவை:—

"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு" எனத் தெய்வப்புலவரும்,

"அல்லார்ந்த மேனியொடு குண்டுகட் பிறையெயிற்
றந்தகாநீயொரு பகட்டாற் பகட்டுவதடாதடா நின்
காசுமேற் செல்லாதடா" எனத் தாயுமானாரும்,

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யென்னாளுந் துன்ப மில்லை" என அப்பரும்,

"நாளென்செயும் வினைதா னென்செயும் நமைநாடிவந்த
கோளென்செயுங் கொடுங்கூற் றென்செயுங் குமரேசனிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டொடு சண்முகமும்
தோளுங் கடம்புமென் கண்ணெதிரேவந்து தோன்றிடவே"
என அருணகிரி நாதரும்,

"நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்தன்பே!
நிறைந்து நிறைந் தூற்றெழுங் கண்ணீரதனு லுடம்பு

நினைந்து நினைந்து அருளமுதே! நன்னிதியே! ஞான
நடத்தரசே! என்னுரிமை நாயகனே! யென்று
வனைந்து வனைந்தேத்துதும் யாம் வம்மின் உலகியலீர்!
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்!
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியம் சொல்கின்
றேன்"

என இராமலிங்க வள்ளலாரும்,

தங்கள் தெய்வீக உணர்ச்சிமிக்க அருள் வாக்குகளால் மரணத்தைத் தாண்டுவதற்கான வழிவகைகளைக் காட்டினார்கள்.

ஆகில், உலகில் ஒருவனும் இறவாமல் இருப்பதை யாண்டும் காணவில்லை யாதலால், 'மரணத்தைத் தாண்டியது எங்ஙனம்?' என்ற வினா எழுவது இயல்பு! இதற்கு விடை காண வேண்டின், நம் சமயத்தின் உட்கருத்தை யறிதல் வேண்டும். இது, உயரிய உபநிடத வேதாந்தங்களின் முடிவான உபதேச வாக்கியங்களில் காணலாகும். அவற்றைச் சிறிது ஆராய்வாம்:

"மரணம்" என்ற வாக்கியம், உடம்பினின்றும் உயிர் பிரிவதைக் குறிக்கின்றது. ஆயினும், அது 'மரணநிலை, அமுதநிலை' என்ற இரண்டு விதத்தில் உயிர் நீங்குவதாகப் பாகு படுத்தி நூல்கள் கூறுகின்றன.

அவற்றுள் மரண நிலையாவது, இருள்சேர்ந்த இருவினைகளால் வருகின்ற — தனம், மனைவி, புத்திரன்-என்ற மூன்று விதமான சம்பந்தங்களை 'மூவேடணை' எனக் கூறுகிறார்கள். அப் பாசத்தினால் ஒவ்வொருவரும் கட்டுண்டுகிடக் கிறார்கள்! மனம் அந்த ஆசாபாசங்களில் அழுந்தித் துன்பமடையுந் தருணத்தில் உயிர் பிரிவதை 'மரணநிலை' யென்றும், மனம் இம் மூன்று பாசங்களின்றும் விடுபட்டு உப சாந்தமடைந்த ஞான நிலையில் உயிர் பிரிவதை 'இன்ப மயமான அமுதநிலை' எனவும், மரண நிலையில் உயிர் விடுபட்டவர்கள் எமவாதனை யடைந்து திரும்பவும் பிறப்பை யடைந்து துன்பப்படுகிறார்களெனவும், அமுத நிலையில் உயிர் விடுபட்ட முக்த சீவர்கள் இன்பமயமான தெய்வீகத் தன்மை யடைந்து மர

ணத்தைக் கடந்து விடுகிறார்களெனவும், கேனோபநிடதம் 2-வது மந்திரத்திலும், கீதை 2-15-லும், 13-12-லும் கூறப் படுகின்றன.

மற்றும், "உலகில் உயிர் வாழும்போதே மரணத்தைக் கடந்து விடலாம்" என்றும் நூற்பிரமாணங்கள் கூறுகின் றன. அவற்றுள்,

"நன்றாய்ஞானங்கடந்துபோய் நல்லிந்திரிய மெல்லா மீர்த்
தொன்றாய்க்கிடந் தவரும்பெருப்பா ழுலப்பிலதனை யுணர்ந்துணர்ந்து
சென்றாங்கின்ப துன்பங்கள் செற்றுக்களைந்து பசை யற்றால்
அன்றேயப் போதேவீடு அதுவேவீடு வீடாமே"

எனத் 'திருவாய் மொழி'யிலும்,

ஞானமடைந்த பொழுதிலிவன் நல்வீடுற்றானென்மன மிறந்தோன்"

என வாசிஷ்டத்திலும்,

"எப்போது மனிதன் புத்தியில் பற்றியுள்ள எல்லா ஆசைகளையும் உயிர் வாழும்போதே நீக்கி விடுகிறானோ, அப்போதே மனிதன் மரண மற்றவனாகிறான்". எனக் கடோப நிடதம் 2-6-15வது மந்திர வாக்கியம் கூறுவதா லும் மரணத்தைத் தாண்டும் விதம் அறியப்படுகிறது.

இவ்வாறுள்ள நம் தத்துவ தார்சிகளின் வழி முறைகளை விடுத்து, 'பிறப்பு, இறப்பு, இன்ப துன்பங்களுக்குக் காரண மாகிய விருப்பு, வெறுப்பின் வசப்பட்ட மாந்தர்கள் தங்கள் துன்பம் நீங்குவதற்கும், இன்பமடைவதற்குமாகிய முயற் சிகளில் தங்கள் ஆயுட்காலமுழுதும் சிந்தனையிலும், செயலி லும் ஈடுபட்டு வருந்தி உழைத்துக் கால முடிவான மரணத் தருவாயில் மனம் எந்த சிந்தனையில் பற்றுக்கொண்டு விடுகி றதோ, அதற்கேற்றபடி மறுபிறப்பை யடைகிறார்கள்'

எனக் கீதையிலும், மற்றும் வேதாந்த, சித்தாந்த, நூற்களாலும் அறியலாம்.

சோகமும் மோகமும் துன்பத்தின் காரணம்.

மற்றும், உலக மக்களைப் பற்றியுள்ள தீராத் தொல்லைகளாகிய "சோகம், மோகம்" என்ற கொடிய துன்பங்கள் உலகத்தையே ஆட்டி வைத்துக்கொண்டிருக்கின்றன. உதாரணமாக: ஒருவன், தன்னிடமுள்ள ஒரு பிரியமான பொருளை இழந்து விடுவானாயின், அந்த சோகத்தால் சில சமயம் புத்தி மாறுபட்டமும் ஏற்பட்டு அவன் நலிவை அடைகிறான். மற்றும், அன்னியர்கட் குரித்தாகிய பொருளைத் தனக்கு வேண்டுமென்று மோகமடைவதால், அப்பொருளின் நிமித்தம் அவனுக்கு அழிவும் ஏற்பட்டுவிடுகிறது. உதாரணமாக: பெண் மோகத்தால் இராவணனும், மண் மோகத்தால் துரியோதனாதியரும் கிளைகளோடு மாண்டு மடிந்த "பாரத, இராமாயண" காவியங்களே இதற்குச் சான்றாகும்.

இவ்வித சோக, மோகங்கள் கர்மத்தின் உற்பத்தி காரணமெனவும், அஞ்ஞானத்தால் உண்டாகிய தெனவும், 'பரமான்ம தத்துவத்தை மெய்யறிவால் அனுபவ வாயிலாக உணர்ந்த பின்புதான், இந்த சோக மோகங்கள் நீங்கி சுகத்தை யடைகிறான்' என்பதாக ஈசாவாஸ்ய உபநிடம் 7-வது மந்திரத்தின் சங்கரபாடியம் கூறுகிறது.
இதை,

"அன்னவிசாரம் அதுவே விசாரம் அதுவொழிந்தால்
சொர்னவிசாரம் தொலையா விசாரம்!" என சோகத்தின் இயல்பைப் பட்டினத்தடிகளும்,

"ஆசைக்கோ ரளவில்லை அகிலமெல்லாங் கட்டி
யாளினுங்கடன் மீதிலே ஆணைசெலவே நினைவர்" என மோகத்தால் ஏற்படும் நிரப்பமுடியாத ஆக்கிரமிப்புக் குணத்தைத் தாயுமானாரும் விளக்கிப் போந்தனர்.

இவ்வாறுள்ள சோகமும், மோகமும் பல இழிந்த குணங்களாக மக்களிடம் பெருகி, பலவிதத்திலும் பகைமையை உண்டாக்கி, இன்றைய உலகம் அளவிறந்த அல்லலுக்குள்ளாகி அவதியுறுவதைக் கண்கூடாக அறிந்து வருகிறோம்.

இவ்வாறு அறிநெறிக்கு மாறான தீய செயல்களை விடுத்து, "தீதொழிய நன்மை செயல்" என்ற பாவின்படி நன்மார்க்கத்தைக் கைக்கொண்டு, சோகமோகமற்ற சமத்துவமான இன்ப வாழ்க்கை நடாத்தி, காமக் குரோதங்களினின்றும் விடுபட்டு, மனிதப்பிறப்பின் பயனாகிய பேரின்ப வாழ்வைப் பெறுவதுவே பகுத்தறிவுபெற்ற மானிடப் பிறவியின் சிறப்பியல்பாமென்பது, மெய்யறிவுடைய நம் முன்னோர்கள் காட்டியுள்ள சன்மார்க்க வழியாகும்!

இவ்வாறு நம் முன்னோர்கள் காட்டியுள்ள உண்மை ஞான மார்க்கத்தை விடுத்துப் பலநூல்கள் கற்றுப் பெரும் புலவனாகி விடுவதாலும், மிகுந்த திரவியக்குவியலைச் சேர்த்து சுகபோக மனுபவிப்பதாலும், விஞ்ஞானமுறையில் பல அற்புதக் கருவிகளை உண்டாக்கி விடுவதாலும், தாங்கள் பிறவிப் பயனை அடைந்தவர்களாகப் பெருமிதங்கொள்ளல் பயனற்றதாகும்.

கல்வி.

எவ்வாறெனின், கல்வியானது பயிற்சியாலுண்டாவது. இது:

"சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்" என்பதால்,

'மனதின் பழக்கத்தால் உண்டாவது கல்வி' எனப் பெறப் படுகிறது. அது அறவொழுக்கத்தையும், ஞான உணர்ச்சியையும் உண்டு செய்யுமாயின், 'ஞானக் கல்வி' யென்ற பொருளில் மக்களின் நன்மைக்குக் காரணமாகிறது. ஞானத்தோடு பொருந்தாத வெறும் 'உலகக் கல்வி' யாயிருப்

பின், அக்கல்வி செருக்கை விளைவித்து நல்வாழ்வுக்குப் பயன் படாமல்ப் போய்விடுகிறது.

இதை:

"அலகுசால் கற்பின் அறிவு நூல்கல்லா
துலகநூ லோதுவ தெல்லாங் கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டுதடு மாற்றம்
போஒந் துணையறி வாரில்" என நாலடியாரிலும்,
"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ
நற்றாடொழா அரெனின்" எனக் குறளிலும்,
"கல்வியென்னும் பல்கடற் பிழைத்தும்" எனத்
திருவாசகத்திலும் கூறுவதால், கல்வியின் இயல்பு அளவிடப் படுகிறது.

செல்வம்.

இனி, "செல்வமும் செருக்கை விளைவிக்கும் சுபாவமுடையது!" என்பதைக் கம்பர்:

"அறம்நிறம்பிய அருளுடை யருந்தவர்க் கேனும்
பெறலருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்"

என இலக்கணம் கூறுகிறார். 'செல்வ முடையவர்களுக்குச் சிறந்த அறிவும், சமாதான சித்தமும் இருந்தால்தான் அச் செல்வத்தைச் சரியாக நிர்வகிக்க முடியுமெனவும், இல்லையேல், அது பல தீமைக் குணங்களைப் பெருக்கி நல்வாழ்வைக் கெடுத்து விடுகிறது' என்ற பொருள் சித்திக்கிறது. உதாரணமாக: இதைத் "தைத்திரீய உபநிடத"த்தில் "ஸமேந்த்ரோ மேதயாஸ் புருணோது ததோமே ஸ்ரீயம் ஆவஹ"—"சிறந்த மேதைக்குணம் இல்லாதவனிடத்துச் செல்வம் மிகுந்திருப்பின், அது அவனுக்கு அளவிறந்த துன்பத்தை உண்டாக்குகிறது" என்பதாக ஸ்ரீ சங்கராச்சாரியார் பொருள் கூறுகிறார். மற்றும், "செல்வமென்னும் அல்லிற் பிழைத்தும்" என்ற மாணிக்கவாசகர் வாக்காலும், செல்வத்தின் இயல்பு தெரியவருகிறது.

விஞ்ஞானம்.

இனி, விஞ்ஞானத்தால் உலக மக்களுக்கு வேண்டிய உபகரணங்களை உண்டாக்கிப் பல நன்மைகளுக்குப் பயன் படுத்துவது உண்மையேயாகும்; இதை யாரும் மறுக்க முடியாது. என்றாலும், அதன் நன்மைக்கேற்ற அளவு தீமைக்கும் பயன் படுவதை மக்கள் உணர்ந்துதான் வருகிறார்கள். அது ஒருமுறையில் மக்களுக்கு அளவுகடந்த நன்மைகளை அளித்து வருகிறது; அதே சமயம் மற்றொரு முறையில் அளவுகடந்த நாசத்தையும் விளைவிக்கக் காரணமாக இருக்கிறது!

உதாரணமாக: "உலகில் மக்களால் ஆரம்பமாகச் செய்யப்படும் எந்தத் தொழிலிலும் நன்மைக் கேற்றவளவு தீமையும் உடன்கூடியே நடைபெறுகிறதே தவிர, தீமை கலவாத நன்மைதரும் செயல் உலகில் ஒரு காரியத்திலும் இல்லை" என்ற பொருளில், வெகு காலத்திற்கு முன்னமேயே கீதை: 18—48 சுலோகத்தில்

"ஸஹஜம் கர்மகௌந்தேய நதோஷம பிநத்யஜேத்
ஸர்வாரம் பாஹிதோஷேண துமேநாக்னிரி வாவ்ருதா:"

எனக் கூறுகிறது. மற்றும், **சுவாமி விவேகாந்தரும்** அமெரிக்கா சர்வசமய மகாநாட்டில்-1893ம் ஆண்டில்-ஆற்றிய சொற்பொழிவில், "உண்மை ஞானத்தாலன்றி விஞ்ஞான அறிவைக்கொண்டு முத்தி யின்பத்தை யடையமுடியாது" என்று, முதிர்ந்த விஞ்ஞானிகளின் முன்னிலையில் எடுத்தியம்பி வெற்றியடைந்து வந்ததினாலும், விஞ்ஞானத்தின் இயல்பும் அளவிடப்படுகின்றது.

ஆதலால், உயர்பிறப்பை யடைந்த மக்கட் பிறவியினர்கள் "அறம் பொருளின்பம் வீடடைதனூற்பயனே" என்ற சூத்திரப்படி, புருட சாதனமாகிய 'அறம், பொருள், இன்பம், வீடு' என்ற நான்கு சாதனங்களிலும் சிறந்த சாதனமாகிய வீட்டு நெறியைக் கைக்கொண்டு, பிறவிப் பிணியை அறுத்து நற்கதியடைய முயலும் ஆத்மஞான வாழ்க்கை

யுடையவர்களே, பகுத்தறிவு பெற்ற மேலோர்களாகின்றனர் கள் என்பது கருத்து.

சமரச ஞானமே சன்மார்க்க மாகும்.

மேலும், அறிவிற் சிறந்த பகுத்தறிவு பெற்றவர்களாகிய நாம், சுயநலங்கருதாது "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்ற தாயுமானர் வாக்குப்படி, உலகமக்களின் நன்மையை வளர்க்கும் சமத்துவ நெறியைக் கைக்கொண்டு, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் சகோதர பாவத்துடன் ஒன்றி வாழ்ந்து, "என் குலம் உயர்ந்தது, உன் குலம் தாழ்ந்தது" என்ற சாதி பேதங்களாலும், "என் தெய்வம் உயர்ந்தது, உன் தெய்வம் தாழ்ந்தது" எனச் சமய பேதங்களாலும் வாதுபுரிந்து வாணாளை வீணாக்காமல், சன்மார்க்க நெறியில் வாழ்க்கையைப் பயன்படுத்த வேண்டும் என்பதை,

"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே யபிமானித் தலைகின்ற வுலகீர்
அலைந்தலைந்து வீணேநீ ரழிவ தழகலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தரவர் தாமே
வீதியிலே யருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றே னுமையே"

என்ற இராமலிங்க வள்ளலாரின் அருள் வாக்குப்படி, "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற சமரச சன்மார்க்க நெறியைக் கைக்கொண்டு, ஒற்றுமையுடன் வாழ்ந்து, நம் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை 'வானுறையும் தெய்வத்துள் ஒன்றாக வைத்தெண்ணும்படி' உயரச்செய்வதுவே ஒவ்வொரு அறிஞர்களின் கடமையுமாகும்.

நூற்பிரமாணமே வாழ்க்கையின் குறிக்கோள்.

இவ்விதமாக வாழ்க்கைத் தரம் உயருவதற்கு, வினையினீங்கி விளங்கிய அறிவினை யுடையோரால் ஏற்படுத்திய

நூற்பிரமாணங்களே உறுதுணையாகும். இதை நம் இந்தியப் பெண்மணி ஸ்ரீமதி **விஜயலட்சுமி பண்டிட்** அவர்கள், சமீப காலத்துக்குமுன் அமெரிக்கா கொலம்பியா சர்வகலா சாலையில் ஆற்றிய சொற்பொழிவில் "நூற்பிரமாணமும் ஆன்மீக உணர்ச்சியும் இல்லாத எந்நாடும் முன்னேற்ற மடைவதில்லை" எனக் கூறியதும் தக்க சான்ருகும்.

ஆதலால், மக்களுக்கு சாதி, சமய, பேதமின்றி சமத்துவமான நெறி முறைகளைப் போதிக்கும் தெய்வ நூற்களாகிய **"குறளும், கீதையும்"** நமது வாழ்க்கைக்கு உற்ற நற்றுணையாகும் என்பது தற்கால உலக அறிஞர்களின் உபதேசமாகும். அன்றியும்; நூலறிவுப் பிரமாணத்தை ஆதாரமாகக்கொண்டு எக்காரியம் செய்யினும், அவைகள் மக்களுக்கு நன்மை பயக்கின்றன வென்றும், நூற்பிரமாணத்துக்கு மாறுபட்டு ஆசையால் செய்யும் எந்தச் செயலும் 'இம்மை, மறுமை' என்ற இரண்டிலும் யாதொரு நன்மையும் அடைவிப்பதில்லை யெனவும், கீ: 16—23ல் விளக்கிக் கூறப்படுகிறது. மேலும், நூற்பிரமாண நியதிக்கு மாருக எதேச்சையாலாகிய ஆணவத்தால் நிறுவும் எந்த அரசியலும், எந்தக் கட்சிகளும், சமுதாயக் கொள்கைகளும் சிலநாள் முன்னேறுவதுபோலத் தோற்றப்படினும், பின்பு சிலநாளில் வீழ்ச்சியுற்று இருந்த இடந்தெரியாமல் மறைந்து விடுகின்றன என்ற பொது உண்மையை, முன்னுள்ள காவியங்களிலும், உலக சரித்திரவாயிலாகவும்; கண்கூடாகவும் அறிந்து வருகிருேம்.

ஆகவே, உலகில் முடிவாக நாம் அறியவேண்டிய உண்மை யாதெனில், 'சத்யமேவ ஜயதே" என்ற முண்டக உபநிடத வாக்கியப்படி, 'எப்போதும் சத்தியமே வெற்றியடைகிறது' என்பது உண்மையாவதால், எங்கு,எந்த அரசியலில், எந்தக் கட்சியின் சார்பில், எந்தச் சமுதாயக் கொள்கையில் உண்மையும் நீதியும் நிலைபெற்று நிற்கின்றனவோ, அங்குதான் முடிவான வெற்றியும், மேலான நன்மையும், நிலையான செல்வமும், தெய்வீக அருளும் உண்டாகின்றன, வென்பது, கீதை முதலாகவுள்ள எல்லா வேதாந்த நூற்களின் முடிபுமாகும்,

ஆதலால், உலக மக்கள் அனைவருக்கும் பொது நூலாக வும், சினேக பாவத்துடன் நல்வாழ்க்கை வாழ்வதற்கு வழி காட்டியாகவும் உள்ள தெய்வப் புலவர் இயற்றிய தமிழ் வேதமாகிய குறளில் உள்ள சில பாக்களுக்கு, சமயப் பொது நூலாகவும், எல்லா உபநிஷத்துகளின் சாரமாகவும், பல அறிவுடைப் பெருமக்கள் கைக்கொண்டு நன்மையடைந் துள்ளதும், ஸ்ரீ கண்ணன்காட்டிய வழியாகியதுமான கீதை யிலுள்ள சிற்சில பொருளொற்றுமையுடைய சுலோகங் களை, ஸ்ரீமத் சங்கராச்சாரியார்; ஸ்ரீமத் இராமானுசாச்சா ரியார்; ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் ஆகிய மேலோர்களின் விளக்கவுரைகளுடன் எடுத்துக்காட்டி ஓர் ஆராய்ச்சிநூலாக வெளியிடப்பட்டுள்ளமையால், நூலாராய்ச்சியில் வாய்ப்புப் பெறாத சாதாரண மக்களும் கண்டுணர்ந்து, நம் சமய உண்மை நெறிகளைச் சிறிது அறிந்துகொள்வார்களெனவும், மற்றும், நம் சமயத்தவர்கள் நல்வாழ்வு வாழ்வதற்கும், ஆன்மநேய உணர்ச்சி மேலோங்குவதற்கும், சமரச சன் மார்க்கம் தழைப்பதற்கும் உற்ற நற்றுணையாகுமெனா என் சிற்றறிவுக்கெட்டியதால்தான், **“குறளும், கீதையும்”** என்ற இச்சிறு ஆராய்ச்சி நூல் வெளியிடலானது. இதிலுள்ள சில குறட்பாக்களுக்கு பரிமேலழகர் உரையுடன் உபநிட தங்களிலும், சைவ, வைணவ, சமய நூல்களிலும், பட்டினத் தடிகள் போன்ற உண்மைத் துறவிகளின் பாடல்களினின் றும் மேற்கோள்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆகவே, இதில் குறைபாடுகள் பல இருக்கக்கூடும். ‘இல்லை’ யென்று கூற நான் துணியவில்லை; அதற்காக நான் தளர்ச்சியடையவும் இல்லை! ஏனெனில், குற்றங்களை நீக்கிக் குணத்தைக் கொள்ளுவதும், குறைபாடு காணின் அதை எடுத்துக்காட்டித் திருத்திக் கொடுப்பதும் ‘விவேகிகளின் கடமை’ என்ற நம்பிக்கையே யாகும். மேலும், இதிலுள்ள குறைபாடுகளை எடுத்துத் திருத்தி யமைத்து உபகரிக்கும் அருளறம்பூண்ட மெய்யடியார்களுக்கு, எனது மனப்பூர்வ மான வணக்கத்தைச் செலுத்துவேன் என்பதையும் தெரி வித்துக்கொள்ளுகிறேன்.

கா. குப்புசாமிக் கவுண்டர்,
மானுப்பட்டி.

நூல் அட்டவணை

குறள் எண்		பக்கம்	கீதை எண்: அ-சு		பக்கம்
1	அகரமுதல	1	10-33	அக்ஷராணா	3
3	மலர்மிசை	4	18-61	ஈஸ்வர	8
			''-62	தமேவ	''
11	வானின்று	9	3-14	அன்னாத்	9
			''-15	கர்மப்ரஹ்ம	10
27	சுவையொளி	11	2-14	மாத்ராஸ்	12
28	நிறைமொழி	12	3-21	யத்யதா	13
34	மனத்துக்கண்	14	2-55	ப்ரஜஹாதி	15
35	அழுக்காறவா	16	16- 4	தம்போ	16
103	பயன்றூக்கார்	17	3-19	தஸ்மாத	19
			,,-20	கர்மணைவ	,,
116	கெடுவல்யா	20	2-62	த்யாயதோ	21
			,,-63	க்ரோதாத்	,,
124	நிலையிற்றிரியா	23	14-23	உதாசீன	25
			,,-24	ஸமது:க	,,
			,,-25	மானாபமான	,,
126	ஒருமையுள்	25	5-58	யதாஸம்	26
237	புகழ்பட	27	2-35	பயத்ரணா	29
			,, 36	அவாச்ய	,,
261	உற்றநோய்	30	5-23	சக்னோதி	31
			12-13	அத்வேஷ்டா	,,
			,,-14	ஸந்துஷ்ட:	,,
278	மனத்தது	32	3—6	கர்மேந்த்	33
291	வாய்மை	34	17-15	அனுத்வேக	35
331	நில்லாத	36	18-31	யயாதர்ம	38
			''-32	அதர்மம்	''
338	குடம்பை	39	2-22	வாஸாம்ஸி	41
339	உறங்குவது	41	2-27	ஜாதஸ்ய	45
341	யாதனின்	45	5-21	பாஹ்யஸ்	47
			''-22	யேஹிஸம்	''
343	அடல்	48	6-24	ஸங்கல்ப	51
			''-25	சனை: சனை	''
346	யானென	52	2-71	விஹாய	54

351	பொருளல்ல	55	2-16	நாஸதோ	57
352	இருள் நீங்கி	58	4-19	யஸ்ய	60
353	ஐயத்தினீங்கி	61	4-40	அஜ்ஞச்சா	62
			5-25	லபந்தே	63
354	ஐயுணர்	63	2-59	விஷயா வி	64
355	எப்பொருள்	65	13-27	ஸமம்	67
			,,-28	ஸமம்பச்யன்	,,
356	கற்றீண்டு	68	4-35	யத்ஜ்ஞாத்	69
358	பிறப்பென்னும்	70	5-16	ஜ்ஞானேன	73
			,,-17	தத்புத்த	,,
360	காமம்வெகுளி	74	16-21	த்ரிவிதம்	74
361	அவாவென்ப	76	3-37	காமஏஷ்	77
363	வேண்டாமை	78	12-16	அனபேக்ஷ	79
370	ஆராவியற்கை	80	2-70	ஆபூர்யமா	82
373	நுண்ணிய	83	3-33	ஸத்ருசம்	86
374	இருவேறு	87	3—3	லோகேஸ்	94
422	சென்றவிடத்	95	2-67	இந்த்ரியாணி	96
			,,-68	தஸ்மாத்	97
426	எவ்வதுறைவ	97	3-25	ஸக்தா	99
			,,-26	ந புத்தி	,,
457	மனநல	100	17-16	மனப்ரசாத	103
505	பெருமைக்கு	103	6—5	உத்தரேதா	105
			,,—6	பந்துராத்	,,
605	நெடுநீர்	106	18-28	அயுக்த	107
616	முயற்சி	108	3—8	நியதம்	110
619	தெய்வத்தா	111	2-40	நெஹா	112
636	மதி நுட்பம்	112	16-23	ய: சாஸ்த்ர	115
			'' -24	தஸ்மாச்	,,
669	துன்பமுற	115	18-37	யத்ததக்ரே	117
850	உலகத்தா	117	16—8	அசத்ய	119
			,,—9	ஏதாந்த்	,,
			,,-10	காமமாச்	,,
			,,-16	அநேகசித்த	,,
969	மயிர்நீப்பின்	120	2-34	அகீர்த்திஞ்	123
978	பணியுமா	124	16—3	தேஜ: க்ஷமாத்	125
			,,-17	ஆத்மஸம்பா	126
999	நகல்வல்ல	126	2-69	யாநிசா	127

ஓம்.

குறளும் கீதையும்.

கடவுள் வாழ்த்து.

குறள் 1: அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

(பொருள்) எழுத்தெல்லாம் அகரத்தை முதலாக உடையன. அதுபோல, உலகம், கடவுளை முதலாக உடைத்து.

இது தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத்தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான முற்று முணர்தலானுங்கொள்க. தமிழெழுத்துக்கேயன்றி வடவெழுத்திற்கும்—மற்றும் எல்லா மொழிகளின் எழுத்துக்களுக்கும்—முதலாதல் நோக்கி, "எழுத்தெல்லா" மென்றார்.

(பரிமேலழகர்)

(விரிவுரை:) அகர ஒலியானது ஆதிநாதமென்று, நூல்கள் புகழ்ந்து கூறுகின்றன. உலகில் தோன்றும் ஒலியின் ஓசைகளும், வாக்கியங்களும், பசு, பட்சி, மனிதன், காற்று, நெருப்பு, தண்ணீர் முதலியவற்றினின்றும் உண்டாகும் பல ஓசைகளும், அகர ஒலியை முதலாகக் கொண்டே உண்டாகின்றன. அகர ஒலியில்லாமல் ஒரு எழுத்துச் சொற்களும் தோன்றுவதில்லை, என்பதை, "அக்கரங்களின்றும் அகரவுயிரின்றேல்" என்ற 'சித்தாந்த நூற்பிரமாணத்தா' லறியலாம்.

மற்றும், எல்லா வாக்கியார்த்தங்களுக்கும் தோற்றுவாய், 'ஓம்' என்னும் ஓங்காரமாகும். இது நம் முன்னோர்கள்கண்ட உண்மையாகும். அவற்றுள், 'அ, உ, ம்' என்னும் மூன்று ஒலிகள் சேர்ந்து இசைப்பதே ஓங்காரமாகும். அம்மூன்றினுள்ளும், அகரமே முதல்ஒலியாகநின்று உச்சரிப்பை உண்டாக்குவதாலும், அகரமே மற்ற எழுத்துக்களெல்லாம் ஆவதற்கு 'மூலகாரண' மென்பதும், பொருந்தும்.

உலகம் ஆதி பகவன் முதற்றே – உலகம் ஆதிபகவனை முதலாகவுடையது. 'உலகம்' என்பது எல்லா உலகங்களையும் எல்லா உயிர் வர்க்கங்களையும் குறித்த ஓர் சொல்லாகும். அதுவே, "உலகம் பலவிதம்" என்ற பழமொழியாகவும் வழங்கிவருகிறது. 'ஆதிபகவன்' என்னும் முழுமுதற் கடவுள், கண்ணாற்காணவும் மனதால் எண்ணவும் முடியாத ஓர் பொருளாகும்! அது தனக்கோர் ஆதியின்றி, எல்லா உலகுகளும், எல்லா உயிர்களும் தோன்றி நின்று ஒடுங்குவதற்குத்தானே ஆதியாய் நிற்றலால், "உலகம், ஆதிபகவனை முதலாக உடையது" என்று கூறினர். இவ்வுண்மையை, "அந்தமாதி என்மனார் புலவர்" என்ற சிவஞானபோத வாக்கியமே, சான்றாக நின்று விளக்குகிறது.

ஆகில், 'கண்ணாற் காணப்படாமலும், மனதால்நினைக்க முடியாமலும் உள்ள ஓர் பொருளின் தன்மையை எவ்வாறு காணமுடியும்? அவ்வாராய்ச்சி பயனுடையதா?' என்பதையும் மக்கள் சிந்திக்கத்தான் செய்வார்கள்.

உதாரணம்:- மக்கள் உயிர் உள்ள பொழுது உலகில் நடமாடுகிறார்கள். ஆனால், உயிரை நாம் கண்ணாற் காணவில்லை! என்றாலும், எறும்பு முதல் யானை ஈறாகிய எல்லா உயிர் உடம்புகளும், 'உயிர் இருப்பதாலேயே நடமாடுகின்றன' என்னும் பிரமாணத்தால், உடம்பு நடமாடுதல் கொண்டு- 'உயிர் ஒன்று உண்டு' என்று நிச்சயித்தல் போல மிகப் பெரிதான இவ்வுலகமும், 'எல்லாம் வல்ல சக்தியையுடைய ஓர் முழுமுதற் பொருளால்தான் நடைபெறுகிறது' என்ற நிச்சயத்தை விளக்குவான் வேண்டி, "காணப்பட்ட

உலகத்தைக் கொண்டு காணப்படாத கடவுட்கு உண்மை கூற வேண்டுதலின், 'ஆதிபகவன் முதற்றேயுலகு' என உலகின்மேல் வைத்து கூறினாரேனும், உலகிற்கு முதல் 'ஆ தி ப க வ ன்' எனக் கொள்க" என (பரிமேலழகர்) நிச்சயித்துக் கூறினார்.

இம்முதற் குறட்பாவுக்கு ஒப்புவமையாக, பகவத்கீதா சுலோகம் வருமாறு: பகவத்கீதை 10-வது அத்தியாயம், 33-வது சுலோகம்:—

அக்ஷராணு மகாரோऽஸ்மி த்வந்த்வ: ஸாமாஸிகஸ்ய ச,
அஹமேவாக்ஷய: காலோ தாதாஹம் விச்வதோமுக:,,

பொருள்:— எழுத்துக்களுள் நான் அகரமாக இருக்கிறேன். நாதப்பிரம்மமே அகரமாகத் துலங்குகிறது. பிறகு அது வெவ்வேறு விதங்களாகப் பரிணமித்து மற்ற எழுத்துக்களாகின்றன. வடமொழிச் சொற்கள், கூட்டுச் சொற்களாக அமைதற்குச் சில முறைகள் இருக்கின்றன. பதங்களை ஒன்றோடொன்று சேர்த்து ஒரேபதமாக்குவதற்கு 'ஸமாஸம்' என்று பெயர். அவைகளுள் இரண்டு சொற்கள் சேர்ந்து கூட்டுச் சொல் ஆனபிறகு, இரண்டும் சமமான முக்கியத்துவம் வகிப்பது எதுவோ அது 'துவந்துவஸமாஸம்.' அது மற்றைய கூட்டுச் சொற்களைக் காட்டிலும் சிறப்புடையதென்பதால், 'துவந்துவஸமாஸமாகவும் இருக்கிறேன்' என்றும் கூறினார். 'ஓயாத காலமும் நானே!' ஒரு கணமென்னும் பெயருடைய பிரசித்தமான காலநுட்பமானது, கணவடிவாய் இடையறாது செல்லுகின்ற எல்லையில்லாக் காலம். அதி நுட்பமான மிகச் சிறிய பொழுதைக் கணமென்பது அல்லது காலத்திற்குக் காலமாகிய பரமேஸ்வரன் என்றாவது கொள்க, ஆகையால் சர்வேஸ்வரனே நாசமற்ற காலமாகிறான். (சங்கரர்.)

தாதா! அவன் ஒருவனே பல்கோடி உருவங்களாகப் பரிணமித்து, ஒவ்வொரு வடிவத்தின் மூலம் ஒவ்வொருவிதக் கர்மபலனை அனுபவித்து வருகிறான். அவன் எங்கும் நிறைந்திருந்து எண்ணரிய முகங்களை உடைத்தாயிருந்து, வினைப்பயனை வழங்கி வருதல் இயற்கையில் நாம் யாண்டும் காணும் காட்சியாகும். — சு. சித்பவானந்தா.

3. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

(பொ-ள்:) மலரின்கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச்சேர்ந்தார், எல்லா உலகிற்கும்மேலாய வீட்டுலகின் கண் அழிவின்றி வாழ்வர்.

அன்பால் நினைவாரது உள்ளக்கமலத்தில், அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேரலின், 'ஏகினான்' என இறந்த காலத்தாற் கூறினார் – பரிமேலழகர்.

அன்பால் நினைந்து பக்தியுடன் வணங்குபவரிடத்தில் மட்டும் 'கடவுள் இருக்கிறார்!' என்ற பொருளில் .. கடவுளை நினையாத மற்றவர்களின் உள்ளத்தில் 'கடவுள் வசிப்பதில்லையா?' என்ற வினா எழுகின்றது! எவ்வாறெனில், "நிற்பன – நடப்பனவாகிய உயிருள்ள எல்லாப் பொருள்களிலும் இறைவன் உறைந்துநின்று, 'சூத்திரக் கயிற்றால் பொம்மைகளை ஆட்டுவிப்பது' போல, கர்மானுசாரத்திற்குத் தக்கவாறாக உள்ளிருந்து நடத்திவைக்கிறான்." என்று உபநிஷத்துக்களும், புராண இதிகாசங்களும், தோத்திரப்பாக்களும் கூறுகின்றன.

உதாரணமாக:- "எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும் இலகுமுயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்" என
(திருமந்திரத்திலும்)

"விறகிற்றீயினன் பாலிற் படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" என ...
(தேவாரத்திலும்)

"மனனக மலமற மலர்மிசை யெழுதரும்
மனனுணர் வளவிலன்" என.... (திருவாய்மொழியிலும்)

"மன்னுயிற் சோதியே வடிவம் யாவுமாய்த்
துன்னுவ தப்பொருள் தொழுதிறைஞ்சுவாம்"
என... (ஞானவாசிஷ்டத்திலும்)

"தேர்ச்சக்கரத்தின் மத்தியில் 'ஆரக்கால்கள்கூடுவதைப் போன்று, எல்லா நாடி நரம்புகளும் கூடுகின்ற இதய மத்தியில் கடவுள் வசிக்கிறார்." என....
(முண்டகோபநிடதத்திலும்)

"எல்லாருடைய ஹ்ருதய கமலத்திலும் நான்வசிக்கிறேன்!" என ... (கீதை: 15-15 லும்....).

இவ்வாறு இன்னும் அனேக நூல்கள் கூறவும், "அன்பர்களிடத்தில் மாத்திரம் கடவுள் வசிக்கிறார்" என்ற பரிமேலழகர் உரையை, ஆராய்ந்து உணர்வது நம் கடமை யாகும்.

அவை யாதெனில்:- கடவுள் எல்லாருடைய இருதய கமலத்திலும் ஒரேமாதிரியாக இருப்பினும், உயர்ந்த பக்தி யாலும், யோக ஞானங்களாலும், தமது ஆத்ம தரிசனத் தாலும் முயலும் நல்லறிவுடையோர், தமது உள்ளக் கமலத்தில் உறையும் பரமான்ம சொரூபத்தை உணர்ந்து, தரிசன மாத்திரத்தால் அக் கடவுளின் அனுக்கிரகம் பெற்று, அஞ்ஞானத்தால் உண்டாகிய ஆகாமிய சஞ்சித கர்மக் கூட்டுறவை நசிப்பித்து, பிறப்பின் பயனாகிய வீட்டின்ப மடைந்து, சீவனுக்கு, என்றும் அழியாத நித்தியஇன்பத்தை அடையப் பெறுகிறார்கள்.

இவ்வுண்மையை உணராமல், அஞ்ஞானத்தாலுண் டாகிய 'மாயை' யின் வசத்தால்சிக்குண்டு, உலக அநித்திய சுகபோகங்களின் மீதுள்ள பற்றுக்களால், தம் உள்ளக் கமலத்தில் 'அந்தர்யாமி' யாக நிலவும் பரமனை அறியாமல் தங்கள் வாழ் நாட்களை வீணுக்கும் பகுத்தறிவின்றியவர்க ளிடத்திலிருக்கும் கடவுள் தத்துவம், இருந்தும் 'இல்லாத தாகின்றது.' கடவுளின் அருள் அவர்களுக்கு இல்லாததால், பிரகிருதியின் வசத்தால் சிக்குண்டு 'பிறப்பு இறப்பு' என்னும் துன்பங்களில் உழல்கிறார்கள்.

இவ்வுண்மையை "ஈசாவாஸ்ய உபநிடதம்" 3—வது மந்திர வாக்கியமும் கூறுகின்றது. அவை வருமாறு:-

"எந்த மனிதர்கள் தம் உள்ளத்தில் வசிக்கும் ஆன்ம தத்துவத்தை அறியாதவர்களாய் — உலக பாசத்தில் ஒன்றிய ஒரு காரணத்தாலேயே ஆத்மஹத்தி செய்தவர்களாகிறார்களோ — அந்த ஆத்மாவை, அறியாத அஞ்ஞானிகள் 'ஆத்மாவைக் கொன்றவர்கள்' ஆகிறார்கள். ஆதலால் அவர்கள், அந்தகாரமான இருள்நிறைந்த நரக உலகங்களில் மறைப்புண்டு கிடந்து வருந்துகிறார்கள்."

இக்காரணங்களினால்தான், "அன்பர்களின் உள்ளக் கமலத்தில் கடவுள் வசிக்கிறார்!" என்று பரிமேலழகர் கூறிய வாக்கியம் பொருத்தமாகிறது.

இவ்வாறு இன்னும் பல நூல்களும், பல மதங்களின் தாத்பரியமும் 'இறைவன் உள்ளக்கமலத்தில்இருப்பதாகவே' பிரமாணமாக எடுத்துக் கூறுவதால், உலகிலுள்ள பல வேறுபட்ட மத வாதிகளும் — கடவுட் கொள்கையில் பல விதமான நிச்சயத்தைக்கொண்டிருப்பினும்-தெய்வப் புலவர் மட்டும் ஒரு மதத்தையும் தழுவாமல்-பல மதங்கள், தங்கள் தங்கள் தெய்வங்களே பெரிதென எண்ணிக்கொண்ட போதிலும் — "இதயத்தில் வசிக்கும் பரமான்ம தத்துவம் ஒரே கடவுள்தான்!" என்று, மதபேதமில்லாமல் 'மலர்மிசை யேகினான்' என, பொதுப்படக் கூறினார்.

இனி, "மாணடி சேர்ந்தார்" என்ற வாக்கியத்தை ஆராய்வாம்:-

இது கடவுளின் வழிபாடாகும். கடவுளின் வழிபாடுகளையும் பலவிதமாக மக்களால் செய்யப்படுகின்றன.

அவை வருமாறு:-

"ஈதலறம் தீவினைவிட் டீட்டல் பொருள் எஞ்ஞான்றும்,
காதலிருவர் கருத்தொருமித் — தாதரவு
பட்டதே யின்பம் பரனை நினைந்திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு" — ஔவையார்.

பொருள்:- மக்கள் நல்வாழ்க்கை வாழ்வதற்கு சாதகமாக அமைந்த சாதனங்கள், 'அறம், பொருள், இன்பம், வீடு' என்னும் நான்கேயாகும். அவற்றுள் முத்தி விருப்பமுடையவர்கள், முதல் மூன்று சாதனங்களையும் மனத்தால் நீக்கி கடவுளிடம் மாருத பக்தியைச் செலுத்துதல் ஔவையாரின் இறைவழிபாடாகும்.

'எண்ணுரு யாவும் இறையுருவாமென எண்ணி வழிபடல் ஈசன் நற்பூசையாம்' உலக மக்கள் யாவரையும் ஈஸ்வர சொரூபமாகப் பாவித்து அவர்களுக்கு நன்மை செய்வதே 'கடவுள் பூசை'யாகும்.

—ரமணரின் இறைவழிபாடு.

"நடமாடுங் கோயில் நம்பற் கொன்றீயிற்
படமாடக் கோயிற் பரமர்க்கஃ தாமே"

பொருள்:- 'நடமாடும் கோயில்களாக' விளங்கும் உலக மக்களுக்குச் செய்யும் நன்மையே, கடவுளுக்குப் பிரியமாகும். —திருமூலர் இறைவழிபாடு.

"ஆரூ ரிலிங்கிருக்க அவ்வூர்த் திருநாளென்
றூரூராய்ச் சென்றங் குழலுவீர்—நேரே
உளக்குறிப்பை நாடாத ஊமர்காள் நீவிர்
விளக்கிருக்கத் தீத் தேடுவீர்!"

பொருள்:- தமது உள்ளத்தில் வசிக்கும் பரமனை அறிவதைவிடுத்து, ஊர்ஊராய்ச் சென்று தேடியலைபவர்களை 'ஊமர்காள்' எனக்கூறுகிருர்-பட்டினத்தடிகள். ஆகையால், ஒவ்வொருவரும் தன்னுள் இருக்கும் கடவுள் தத்துவத்தை அறிவதே மேலான வழிபாடாகும் —பட்டினத்தடிகள்.

அன்னமய சரீரத்தில், ஹிருதய கமலச் சித்திரத்தில் பிரகாசரூபமாக விளங்கும் பரமாத்மாவை தெரிசித்தவுடன், எல்லா மாயாபந்தங்களும் நீங்கி முத்தியடைகிருன்.

—முண்டகோபநிடதம்: 2, 2, 7.

...இவ்வாறு பலவிதமாகவுள்ள தெய்வவழிபாடுகளின் கொள்கைகளையெல்லாம் திரட்டி, "மாணடி சேர்ந்தார்" என, பொதுப்படக் கூறினர்.

"நிலமிசை நீடு வாழ்வார்!"

"இறைவனின் அருள்நெறிபூண்ட அன்பர்கள், எல்லா உலகிற்கு மேலாய வீட்டுலகின் கண் எப்போதும் நித்திய மாய், அழிவின்றி வாழ்வர்!" என, வீட்டினது இலக்கணத்தையும் எல்லா மதங்களின் சார்பாகவும் பொது வகையாற் கூறியதும் பொருத்தமானதே.

இனி, கீதையிலுள்ள இரு சுலோகங்கள் வருமாறு:-
கீ 18- 61-

ஈஸ்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசேர்ஜுந திஷ்டதி'
ப்ராமயன் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா"
"18—62...
தமேவ சரணங் கச்ச ஸர்வபாவேந பாரத'
தத் ப்ரஸாதாத்பராம் சாந்திம் ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி சாச்வதம்

பொருள்:- அர்ஜுனு! தேகமாகிய யந்திரத்தில் ஏற்றி வைக்கப்பட்ட 'பொம்மைகள்' போன்ற எல்லாப் பிராணிகளையும் மாயா சக்தியினல் ஆட்டிவைத்துக்கொண்டு, ஈஸ்வரன் எல்லாப் பிராணிகளுடைய இதயத்துள்ளும் வசிக்கிருன்.

பாரதா! எவ்வகையிலும் அவனையே சரணடைவாய். அவனருளால் ஒப்புயர்வற்ற சாந்தியையும் அழிவில்லாத பதவியையும் அடைவாய்.

எவ்வகையிலும் அவனையேதஞ்சமடைதல், சீவர்களின் செயற்கரிய செயலாகும். உடலையே தானெனஎண்ணுதல், தன்செயலுக்குத் தானே கருத்தாவென்று நினைத்தல்,' தனக்குமட்டும் தனிமதிப்பு உண்டு என்று எண்ணுதல்

-இவை யாவும் சீவாபிமானத்தை வளர்ப்பதால், இவைகள் தஞ்சமாகாது. சீவனுக்குச் சொந்தமாக சரீரம் கிடையாது. உடலங்கள்யாவும் பரமாத்மாவுக்குச்சொந்தம். சீவனுடைய செயல்களெல்லாம் ஈசுவரனது செயல்கள். ஈசனுக்கு அயலாக சீவர்கள் இல்லையென்ற இப்பேருணர்ச்சியானது, ஈசுவரனிடம் சரணடைவதாகும்.

—சு. சித்பவானந்தர்.

11: வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிர்த மென்றுணரற் பாற்று.

(பொ—ள்) மழை இடையறாது நிற்ப உலகம் நிலை பெற்று வருதலான், அம்மழைதான் உலகத்திற்கு அமிழ்த மென்றுணரும் பான்மையுடைத்து.

அமிழ்த முண்டார் சாவாது நிலைபெறுதலின் உலகத்தை நிலைபெறுத்துகின்றவானை அமிழ்தமென்றுணர்கவென்றார்—

— பரிமேலழகர்.

மழைக்கு 'வானமிழ்தம்' என்ற பெயருண்டு. மழை, உயிர்களின் சாக்காட்டைப் போக்கி அவைகளை வாழச் செய்வதால், மழை 'அமிழ்த' மாகின்றது. மற்றும், உயிர் உடலுடன்கூடி இன்புடன் இயங்குவது வாழ்வு. அவ் வாழ்வு மழையைப்பொறுத்து நிற்பது. ஓரறிவு முதல் ஆறறிவுவரை உள்ள எல்லாஉயிர்கட்கும் வாழ்வு நல்குதல் மழையாதலின், அது 'அமிழ்தம்' எனப்பட்டது.

—திரு: வி. க.

இனி கீதையிலுள்ள இரு சுலோகங்கள் வருமாறு:-

கீ. 3–14;

அன்னாத்பவந்தி பூதானி பர்ஜன்யா தன்னஸம்பவ:;
யஜ்ஞாத்பவதி பர்ஜன்யோ யஜ்ஞ: கர்மஸமுத்பவ:”

" 3– 15;

கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி ப்ரஹ்மாக்ஷரஸமு த்பவம்'
தஸ்மாத் ஸர்வகதம் ப்ரஹ்ம நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்டிதம்"

(பொ-ள்) பிராணிகள் உணவினின்று உண்டாகின்றன. மழையினின்று உணவு உண்டாகிறது. மழை, யஜ்ஞத்தினின்று உண்டாகிறது. யஜ்ஞத்திற்குப் பிறப்பிடம் கர்மம். கர்மம், வேதத்திலிருந்து உதித்ததென அறிக. வேதம், பரமாத்மாவினின்றும் வந்தது. ஆகையால், எங்கும் நிறைந்துள்ள வேதம், எப்போதும் யஜ்ஞத்தில் நிலைபெற்றுள்ளது.

ஒவ்வொருவரும், தம், தம் காரியங்களை முறைப்படி குறைவின்றி அறநெறிக்கு மாறுபடாமல் இயற்றின், அது 'யஜ்ஞ'மாக மாறுகிறது. பின்பு அதன் பலன், உலகில் மழையையும், மக்களுக்கு வேண்டிய நல் வாழ்வையும் அளிக்கிறது. உதாரணமாக: கடலில் உள்ள நீர் ஆவியாக மாறுகிறது. பின்பு அது மழையாகப் பெய்கிறது. ஆவி கண்ணுக்குத் தோன்றுவதில்லை. அதேபோன்று, அறமார்க்கத்தில் ஒழுகுபவர் நல்லோர் ஆகின்றனர். நல்லோராயுள்ளவர்கள் செய்யும் காரியங்கள் யாவும், யஜ்ஞங்களாக மாறுகின்றன. பின்பு அவர்கள் மழையை வேண்டுமென்று விரும்பினால் மழைவந்துவிடும். 'யஜ்ஞத்திலிருந்து மழை உண்டாகிறது' என்ற கோட்பாடு இதுவே.

வேதம் அல்லது பிரம்மா, முக்குண மயமாயுள்ள இயற்கையேயாம். தோன்றிய அனைத்தும் இயற்கையின் கூறுபாடுகளாகவும், அறிவுக் கடலாகவும் யாவற்றையும் விளக்குதலால், அதை 'எங்கும் நிறைபொருள்' என்னலாம். உலக முழுமையும் காரிய ரூபமாயிருப்பதால், கர்மம் இயற்கையினின்று உண்டாகிறது. அந்த இயற்கை பரமாத்மாவினின்று உண்டாகிறது – இவ்வாறு மக்கட்கு உண்டாகிய கர்மத்தை முறையுடன் செய்தால், அது யஜ்ஞமாகிறது. அங்ஙனம் அனைவரும் யஜ்ஞம் செய்தால், தொகைவினை மயமாயுள்ள இயற்கையே சிறப்புற்று

விளங்குகிறது. மக்கள் சற்கருமமான யஜ்ஞம் செய்கின்ற அளவு இயற்கை தெய்வத் தன்மை அடைகின்றது.

— சு. சித்பவாநந்தா.

27. சுவையொளி யூறோசை நாற்ற மென்றைந்தின் வகை தெரிவான் கட்டே யுலகு.

(பொ-ள்:) சுவையும், ஒளியும், ஊறும், ஓசையும், நாற்றமுமென்ற தன் மாத்திரைகளைந்தனது கூறுபாட்டையும், அறிவாலாராய்வான் கண்ணதே உலகம்.

அவற்றின் கூறுபாடாவன: பூதங்கட்கு முதலாகிய அவைதாமைந்தும், அவற்றின் கட்டோன்றிய அப்பூதங்களைந்தும், அவற்றின் கூருகிய ஞானேந்திரியங்களைந்தும், கன்மேந்திரியங்களைந்துமாக இருபதுமாம். 'வகைதெரிவான் கட்' டென, உடம்பொடு புணர்த்ததனுல், தெரிகின்ற புருடனும், அவன் றெரிதற்கருவியாகிய மான் அகங்கார மனங்களும், அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றும். — இது, தத்துவ ஆராய்ச்சியாகும் — பரிமேலழகர்.

(வி-ரை) மனிதன் மேன்மையடைவதற்கு, இத்தத்துவ ஆராய்ச்சியே சிறந்த சாதனமாக நூற்களில் கூறப்படுகின்றன. இவற்றல், 'அழியும் பொருள்கள் இவை' என்பதூஉம், 'நித்தியப்பொருள்கள் இவை' என்பதையும் விளக்கும் 'நித்திய அநித்தியப் பொருள்களின் விவேகமே,' சிறந்த ஞானசாதனமாகக் கூறப்படுகிறது. மனிதன் மேலோனுவதற்கு இந்தச்சாதனமே முதற்படியாகஉள்ளது. இதையே தத்துவ ஞானமார்க்க மெனவும், முத்திநெறிக்கு வழியெனவும் நூல்கள் கூறுகின்றன.

உலகம், ஐம்புலன் நுகர்ச்சியுள்ளடங்கியது. ஐம்புலனும், மனத்தினிடத்தி லடக்கம். உலக சுகதுக்கங்களும், அம்மனத்தினிடத்திலடங்கியுள்ளன. ஆதலால், மனதைவிட்டு வேறு சுகதுக்கங்கள் இல்லை. — ரமணமகரிஷி.

இனி கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:-

கீ: 2- 14.

மாத்ராஸ்பர்சாஸ்து கௌந்தேய சீதோஷ்ணஸுகது:கதா
ஆகமா பாயினோऽநித்யாஸ்தாம்ஸ்திதிக்ஷஸ்வ பாரத

(பொ-ள்:) குந்தியின் மகனான அர்ஜுனா! புலன்கள் தத்தம் விஷயங்களுடன் கூடும் நிலைகளே 'குளிர், வெப்பம், இன்பம், துன்பம்' எனும் உணர்ச்சிகளைத் தருகின்றன. அவை தோன்றி மறைபவை; - நிலையற்றவை. பரதவம்சத் தோனே! அவற்றைப் பொருத்துக்கொள்.

கண் முதலாகிய ஐம் பொறிகள், அதனதன் புலனாகிய ஐந்து விடயங்களிலும் சென்று உலாவுகின்றன. அதனால் உலகம் வேண்டப்படுபவைகளும், வேண்டப்படாதாவை களுமாகி இன்பதுன்பங்களை உண்டாக்குகின்றன. ஒரு சமயம் இன்பத்தைத் தருகிற அதே பொருள், மற்றொரு சமயத்தில் துன்பத்தைத் தருகிறது. உதாரணமாக: கோடை காலத்தில் வீசுகிற காற்று, மக்களுக்கு இன்பத்தை உண்டாக்குகிறது. அதே காற்றானது மற்றொரு சமயத்தில்-அதாவது பனிக்காலத்தில்—விஷக்காற்றாக மாறி, கொடிய சுரத்தை உண்டாக்குகின்றது. இதைப்போல மற்ற புலன்களாலும் இன்ப துன்பங்கள் உண்டாகின்றன. ஆதலால், இவை யாவும் அநித்தியமானவை. சீதோஷ்ண சுக துக்கங்களைப் பொறுத்துப் பழகுபவன், உறுதியைப் பெறுகிறான். இவைகளைப் பொறுத்துப் பழகுதல், 'திதிக்ஷை' என்னும் நல்வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனமாகிறது. அவன், ஞானத்துக்குத் 'தகுதி' யுடையவன் ஆகின்றான்.

—சு. சித்பவானந்தா.

28: நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

(பொ-ள்:) நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது பெருமையை, நிலவுலகின் கண் அவராணையாகச் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் காட்டும்.

'நிறைமொழி' என்பது அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும்மொழி; காட்டுதல்- பயனுணர்த்துதல். —பரிமேலழகர்.

நிறை மொழி எது? உண்மையால் நிறைந்த மொழி. அது, உண்மை நிறைந்த மனத்தினின்றும் வெளிவருவது. ஒருமையில் நின்று அடங்கிய மனத்தினின்றும் வாய் வழியாக வருவது நிறைமொழி. அதை, 'மந்திரமாக' மக்களால் கொள்ளப்படுகிறது. "நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப...." எனும் 'தொல்காப்பிய' சூத்திரமே, இக் குறளுக்குத் தாயகம் என்று கூறலாம். —திரு: வி. க.

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:-

ஸ். 3- 21-

யத்யதாசரதி ச்ரேஷ்ட்டஸ்தத்த தேவேதரோ ஜன:
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்த தனுவர்த்ததே

பொருள்:- பெரியோன் எதைத அனுஷ்டிக்கிருனே, அதையே ஏனைய ஜனங்களும் பின்பற்றுகின்றனர். அவன் எதை மதிப்புள்ளதாகச் செய்கிருனே, அதையே உலகமும் பின்பற்றுகிறது.

மனிதன் ஈசுவரானுக்கிரகத்தால் மேலோனுகிறுன். மேலோனிடம் ஈசுவர விபூதியும் மிகுதியாக மிளிர்கிறது. உலகிற்கு வழிகாட்டும் ஆசாரியனுக அமைந்திருப்பவனும் அவனே. அவன் செய்வதையே உலகம் முன்மாதிரியாக ஏற்றுக்கொள்கிறது. ஆதலால், அவனுடைய பொறுப்பு மிகப் பெரியது. உடலைவிட்டு உறுப்பொன்றை எப்படிப் பிரிக்க முடியாதோ, அப்படியே சமூகத்தை விட்டு மனிதனும் பிரிந்திருப்பவன் அல்லன். ஆதலால்தான், அவனுடைய செயல்களெல்லாம் நல் மார்க்கத்திற் செல்பவர்களுக்கு எடுத்துக்காட்டாக அமைந்தாக வேண்டும். ஈஸ்வரன்

கொடுத்துள்ள பொறுப்பைப் புறக்கணிப்பது, ஈஸ்வரனையே புறக்கணிப்பதாகும்.

—சு. சித்பவாநந்தர்.

34: மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தற னாகுல நீர பிற.

(பொ-ள்) அறஞ்செய்வான் தன்மனத்தின் கண் குற்றமுடையன் அல்லனாக, அவ்வளவே அறமாவது. மற்றவை யெல்லாம் ஆரவாரத் தன்மையுடையன.

குற்றம், தீயன சிந்தித்தல், பிறர் புகழவேண்டிச் செய்வன வெல்லாம் ஆரவாரத்தின்பாற்பட்டமையின், 'ஆகுல நீர' வென்றார்.

—பரிமேலழகர்.

(வி-ரை) மனத்துக்கண் மாசிலனாதலென்பது, எந்த விதமான தீய எண்ணங்களும் மனதிற்குள் புகவொட்டாமல் விலக்கி மனம் பரிசுத்தமாக விருத்தலாகும். இது சிறந்த சாதனமுடையவர்களால்தான் இயலும். எவ்வாறெனின், மனது எப்பொழுதும் ஒரு பொருளை விடுத்து மற்றொரு பொருளைப் பற்றிக்கொண்டு சதா அலைந்துகொண்டிருப்பதுவே அதன் இயல்பாகும். அவ்வாறு செல்லும் மனத்தைத் தன் விவேக அறிவால் மாற்றினாலும், மற்றொரு விடயத்தைப் பற்றிக்கொண்டு அறிவை மயக்கி ஏதோ ஒரு பொருளில் பற்றுக்கொண்டு விடுகிறது. பின்பு அவ்விடயம் மனதில் பதிந்து விடுகிறது. அவ்வாறே பல விடயங்களைச் சேர்த்து ஒன்றுபடுத்தி விடுவதால், சிறந்த அறிவாளர்களும் அம்மனதின் வசப்பட்டு விடுகிறார்கள். பின்பு அம்மனதின் வழியே செல்லுவதன்றி, மனப்பரிசுத்தமான நற்காரியங்களைச்செய்து மனம் மாசின்றிய பரிசுத்த வாழ்க்கை நடாத்த இயலாமற்போய்விடுகிறது.

மேலும், இம்மனத்தூய்மை யடைவதையே உயர்ந்த வாழ்க்கையின் சாதனமாக எண்ணி, அறிவிற்சிறந்த நம்

முன்னோர்கள் அரும்பாடுபட்டு பல அறிவுநூல்களில் எழுதி வைத்துள்ளார்கள். 'மனத்தூய்மையடையாதவன் உலக ஆசாபாசங்களில் கட்டுண்டு அவதிப்படுகின்றான்' எனவும், அதினின்றும் தப்புவதையே உயர்ந்த சாதனமாகக்கொண்டு சிறந்த பேரறிவுடைய உத்தமர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் முயன்றுவது சாதன சித்திபெற வேண்டுமென்பதை,

"ஆயின்மிக்க அறிவோர் செயலெலாம்
நேயமிக்க மனத்தை நிறுத்தல்காண்"—எனவும்

"மனமொருத்தன் வசப்படு மேலவன்
பினைவருத்தும் பிறப்பை யடைந்திடான்
மனமொருத்தன் வசப்படா தோடுமேல்
நனிபிறப்பிடை நாளுஞ் சுழல்வனே"— என்று

மனத்தினது அரிய இயல்பை "பிரபுலிங்கலீலை"யில் சிவப்பிரகாசர் விளக்கிக் காட்டியுள்ளார்.

ஆதலால், அறவொழுக்கத்தில் வாழ விருப்பமுடைய அறிஞர்கள் மிக எச்சரிக்கையாக இருந்து தீய சிந்தனைகளை மனதிற் புகவொட்டாமல் நீக்கி, மனப் பரிசுத்தமடைவதுவே சிறந்த அறமாகும் என்பது, இக்குறட்பாவால் விளக்கமாகிறது.

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:-

கீ. 2– 55–

ப்ரஜஹாதி யதா காமான் ஸர்வான் பார்த்த மனோகதான்
ஆத்மன்யே வாத்மனா துஷ்ட: ஸ்திதப்ரஜ்ஞஸ்த தோச்யதே

பொருள்:- பார்த்தா! எப்பொழுது மனதிலடங்கிய ஆசைகளையெல்லாம் தூரத்தள்ளுகிறானோ – ஆத்மாவினிடத்திலேயே தானாகவே சந்துஷ்டி உள்ளவனாகவாகிறானோ— அப்போது 'நிலைத்த ஞானமுடையவன்' என்று சொல்லப்படுகிறான்.

எப்பொழுது ஒருவன், தன்மனதில் புகுந்துகிடக்கின்ற எல்லா ஆசைகளையும் முற்றிலும் விட்டொழிக்கிறானோ—உள்ளேயுள்ள ஆத்ம சொரூபத்திலேயே தானாகவே திருப்தியுள்ளவனாய், வெளிலாபங்களை வேண்டாதவனாய், பரமார்த்த தரிசனத்தாலாகிய 'அமிர்த ரஸம்' கிடைக்கப்பெற்றமையால் 'மற்றைய பொருள்கள் வேண்டாம்' என்ற எண்ணம் வந்தவனாய் இருக்கிறானோ—அப்பொழுது அவன், ஆத்மா அனாத்மாக்களின் ஆராய்ச்சியினாலாகிய ஞானம் நிலைத்தவன், 'வித்வான்' எனப்படுகிறான்.

—சங்கரர்.

35: அழுக்கா றவாவெகுளி யின்னாச் சொன்னான்கு மிழுக்கா வியன்ற தறம்.

(பொ-ள்:) பிறராக்கம் பொறாமையும், புலன்கண்மேற் செல்லுகின்ற அவாவும், அவை யேதுவாகப் பிறர்பால் வரும் வெகுளியும், அதுபற்றிவரும் கடுஞ்சொல்லுமாகிய இந்நான்கினையும் கடிந்து இடையறாது நடந்தது, 'அறம்' எனப்படும். — பரிமேலழகர்.

(வி-ரை:) இந்நான்கு தீய குணங்களும் மக்களின் மனதைக் குற்றமுடையனவாகச் செய்து, அறமார்க்கத்தை தவறிக் கீழான இழிந்த செயல்களில் தூண்டுகிறது. அதனால், அவர்கள் மனதில் அறம் விளங்குவதில்லை. அறவொழுக்கமுடையவரிடமே நல்ல எண்ணமும், நல்லசொல்லும், நல்ல செயலும் உண்டாகும். அதுவே, 'தெய்வீகத் தன்மை பொருந்திய நல்லற வாழ்க்கையை உண்டாக்கும்' என்பதூஉம், குறிப்பிடத்தக்கதாகும்.

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:-

கீ. 16- 4-

தம்போ தர்ப்போऽபிமானச் சக்ரோத: பாருஷ்யமேவ ச'
அஜ்ஞானஞ் சாபி ஜாதஸ்ய பார்த்த ஸம்பத மாஸுரீம்"

பொருள்:- அர்ஜுனா! இடம்பமும், இறுமாப்பும், தற்புகழ்ச்சியும் அவ்வாறே கோபமும், கடுஞ்சொல்லும்,

அறியாமையுமாகிய இவை யெல்லாம், அசுரசம்பத்துடன் கூடிப் பிறந்தவனுக்கு இயல்பாகின்றன.

'இடம்பம்' என்பது, தன்னை அளவுகடந்து பெருமைப் படுத்திக்கொள்ளல் ஆகும். 'தான் எல்லாரையும்விட உயர்ந்தவன்' என எண்ணிக்கொண்டு, வணக்கத்துக்குரிய நல்லோரிடத்தும் தற்பெருமைகாட்டிக்கொள்ளுதல், 'இறுமாப்பு' எனப்படுகிறது. தன்னையே எவ்விடத்தும் புகழ்ந்து பேசுதல், தற்புகழ்ச்சியாகும். சினத்துடன்கூடிய பார்வையும், சினந்து பேசுதலும், கோபமாகும். யாரையும் இகழ்ந்து பேசுதலும், பரிகாசம் செய்தலும், நாகரீகமற்ற முறையில் கடிந்து பேசுதலும், 'கடுஞ்சொல்' எனப்படுகிறது. இவற்றுடன் அறியாமையும் சேர்ந்துள்ளவன், 'அசுரப்பிறவி' எனப்படுகிருன்.

சு. சித்பவாநந்தா.

அறமார்க்கத்துக்குப் புறம்பான நான்கு குணங்களை, நாயனர் பகுத்துக்கூறினர். அதுபோன்றுள்ள குணங்களை, கண்ணபிரான் ஆறுவிதமாகப் பகுத்துக் கீதையில் கூறினர். அறவொழுக்கத்தில் வாழ்க்கை நடாத்த விரும்புபவர்கள், இத்தீய குணங்களை நீக்கி, நன்மையான குணங்களைக் கொண்டு தாங்கள் வாழவேண்டுமென்பதே கருத்து.

103. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது.

(பொ-ள்:) இவர்க்கு இன்னது செய்தால் இன்னது பயக்குமென்று ஆராய்தலிலராய்ச்செய்த ஈரமுடைமையை ஆராயின், அதனன்மை கடலினும் பெரிதாம்—பரிமேலழகர்

(வி-ரை:) இதுவே 'செய்யாமற்செய்த உதவி' யென்றும், 'காலத்தினுற்செய்த உதவி' என்றும் தெய்வப்புலவர் குறிப்பிடுகிருர். பயன் கருதாமல் தொழில்புரிந்து, உலக நன்மைக்கு உதவி செய்பவர்களுக்குத்தான் மன அழுக்குகள் நீங்கி விடுகின்றனவெனவும்; மக்களை நல்ல கதிக்குச்

செல்ல விடாமல் தடைப்படுத்துவனவாகிய குற்றங்கள் 'மலம், விக்ஷேபம், ஆவரணம்' என மூன்ருகும். இவற்றுள், மலதோடம் — நிட்காம்யமான கர்மங்கள் செய்வதாலும்; விக்ஷேபம்—ஈசுவர நாமோச்சரிப்பாலும்; ஆவரணம் — மெய்யறிவினலும் நீக்கப்படுகிறது என்பதாக ஞான நூல்கள் கூறுகின்றன. இப் பரிசுத்தமார்க்கத்துக்கு முதற்சாதனம் சித்த சுத்தியேயாகும். மனப் பரிசுத்தமில்லாதவன் எவ்வித உயர்ந்த நிலையிலிருந்தாலும், அவனல் ஒருவிதமான நன்மையும்உலகிற்குஏற்படுவதில்லை. அத்துடன்அவனுக்காதாரமான ஒரு நன்மையையும் அவனல் செய்துகொள்ள முடியாது. ஆனதால், ஒருவன் மனப் பரிசுத்தத்துடன் வாழுவதையே மிக மேலான சாதனமெனவும் அதனல் அவனுடைய மனோ சக்தி யதிகரிக்கின்றதெனவும், பின்பு அவன் ஆத்மஞானி யாகவிளங்குகிருன்; அதன் நிமித்தம், அவன் எண்ணியபடி 'காரியசித்தி யடைகிருன்' என்பதாக, "முண்டகோப நிடதம்" 3–1–10ல் கூறுகிறது.

பலனை விரும்பாமல், தனக்கும், உலகுக்கும் நன்மை தருவதாக உள்ள 'நிட்காமகரும'த்தையே, பகவான் பதினெட்டு அத்தியாயங்களிலும் ஆங்காங்கு குறிப்பிட்டுக் கூறுவதினலும், 'இதுவே கர்மயோக' மெனச் சிறப்பித்துக் கூறி மக்களை உயரச் செய்யும் 'கீதாசார்யனுடைய முக்கிய குறிக்கோள்' என்பதூஉம்; கீதையை உணர்ந்தவர்கள் கூறிய 'உண்மையாகு'மென்பதூஉம் இக்குறட்பாவால் நன்கு விளங்குகிறது.

இவ்வாறு பல மாதிரியாக கீதையிற் கூறிய உண்மைத் தத்துவமாகியதும், அர்ச்சுனன் கொண்ட மயக்கத்தை யகற்றுவதுமாகிய 'நிட்காம்யகர்மயோகத்தை', சுருக்கமாக "பயன்றூக்கார்செய்தவுதவி" என்று கூறி, ஒரு பாவால் சுருங்கச்சொல்லி விளக்கும் தெய்வீகத்திறன், தெய்வப் புலவருக்கே உரியதாகும். இதை, "கடுகைத் துளைத் தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்தகுறள்" என்ற இடைக்காடர் வாக்காலும், நாம் அறிகிருேம்.

இனி, கீதையிலுள்ள இரு சுலோகங்கள் வருமாறு:-

கீ: 3- 19-

தஸ்மாதஸக்த: ஸததம் கார்யம் கர்ம ஸமாசர
அஸக்தோ ஹ்யாசரன் கர்ம பரமாப்னோதி பூருஷ:

" : 3- 20-

கர்மணைவஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜனகாதய:
லோகஸங்க்ரஹமேவாபி ஸம்பச்யன் கர்த்துமர்ஹஸி

(பொருள்) (நீ கர்மம் செய்வதற்குஉரியவனாக இருக்கின்றாய்) ஆகையினாலே எப்பொழுதும் - க்ர்ம பலனில் ஆசையைவிட்டுச் செய்யவேண்டிய நித்திய கருமத்தைச் செவ்வையாகச் செய். ஏனெனில், பலனை விரும்பாமல் கருமம் செய்பவன் உத்தமமான உயர்நலத்தை எய்துகிறான். ஜனகன் முதலானோர்கள் கருமத்தாலேயே சித்திபெற்றார்களன்றோ! மேலும் உலகமக்கள் நல்வழிப்படுதலை விரும்பியும், நீ நிட்காமிய கருமத்தைச் செய்வதற்கே உரியவனாகின்றாய்.

ஓயாது ஹிருதயம் அடித்துக்கொண்டிருப்பதால், உயிர் வாழ்க்கை நன்கு நடைபெற்றுவருகிறது. ஆனால், ஹிருதயம் துடிப்பதில் மனிதன் கருத்தைச் செலுத்துவதில்லை. அது போன்று மனிதன் பல கருமங்களைப் பற்றற்றுச் செய்ய வேண்டும். பற்று நீங்குமளவு, மனோசாந்தி தானே உண்டாகிறது. ஆத்ம சொரூபத்தை அறிதலும், அத்தகைய மனதிற்கு எளிதாகின்றது. நல்ல தொழில் செய்யாமல் மனவமைதி பெறமுடியாது. நல்லறிவுடையோர் கருமத்தில் ஈடுபடுதலில், இன்னொரு சிறப்பு உண்டு! குருடன், குருடனுக்கு வழிகாட்ட முடியாது. கண்ணுடையவன்தான் கண்ணில்லாதவனைக் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு போகமுடியும் — ஞானக்கண் உள்ளவர்கள், காரியங்களைத் தவறுதலின்றிச் செய்ய வல்லவர் ஆவர். காரியங்களைச் செய்தே முன்னேற்றம் அடையவேண்டிய உலக மக்களை, நல்வழியில் நடாத்துதல் அவர்களுக்கு இயலும். ஆகவே, அப்பொறுப்பை எண்ணிப்பார்க்குமிடத்தும் கருமம் செய்

வதே முக்கியமாகிறது. உலக மக்களை நல்ல வழியில் திருப்புவதற்காகவும், தாங்கள் முன்மாதிரியாக நற்காரியங்களைச் செய்து காட்டுதல் அறிவுடையவர்களுக்குக் கடமையாகும் என்பது கீதையின் நியமமாகின்றது.

—சு. சித்பவாநந்தா.

116: கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின்.

(பொ-ள்:) ஒருவன் தன்னெஞ்சம் நடுவு நிற்றலையொழித்து நடுவல்லவற்றைச் செய்ய நினைக்குமாயின், அந்நினைவை யான் கெடக்கடவே னென்றுணரும் உற்பாதமாக (கெடுகுறியாக) அறிக.

நினைத்தலும் செய்தலோ டொக்குமாதலால் 'செயின் என்று கூறினர். —பரிமேலழகர்.

(வி-ரை:) ஒருவன், நடுவுநிலைமை தவறி அறவழிக்குப் புறம்பான தீயஎண்ணங்களைச்சிந்திப்பானாயின், அது'அவன் வாழ்நாளுக்கே அழிவைத் தரும்' என்ற முன்னெச்சரிக்கையான உபதேச வாக்கியத்தை, தெய்வப்புலவர் இக் குறட்பாவினால் உலக மக்களுக்கு அறிவுறுத்தினர்.

எவ்வாறெனின், மக்களின் மனதில், நன்மை தீமைகள் கலந்த எண்ணங்கள் தோன்றுவதும் மறைவதுமான செயல்கள் சதா நடந்தவண்ணமாகவே இருக்கின்றன. இதை நினைப்பும் மறப்புமான கணப்பிரளயம் என வேதாந்த நூலார் கூறுவர். இது எல்லா மக்களுக்கும் பொது இயல்பாகும். இதனால் மக்கள் பந்தப்படுவதில்லை.

உதாரணமாக: சிறந்த ஞானியர்களுக்கு சிலபோது மாறுபாடான எண்ணங்களும், கீழ்த்தரமானவர்களுக்குச் சிலபோது மேலான எண்ணங்களும் கால மாறுதலினால் உண்டாகின்றன. இது அரிய இயல்பாகும். அவர்களிடத்து இம்மாறுதலான எண்ணங்கள் நீடித்து நில்லாது. இவ்வுண்மையை "காமமாதிகள் வந்தாலுங் கணத்திற்போமனத்தில் பற்றார்" என, மேன்மக்களாகிய ஞானிகளின் நிலைமை

யைக் கைவல்யத்திலும்; "கல்லாப்புல்லர்க்கு நல்லோர் சொன்னபொருளெனப் போயிற்றன்றே" எனக் கீழ் மக்க ளாகிய அஞ்ஞானிகளின் இயல்பைக் கம்பர் கூறுவதாலும் அறியலாம். இத்தன்மையான எண்ணங்கள் மனதைப் பற்றிக்கொண்டு தாக்குவதில்லை. எந்த எண்ணங்கள் ஆசை யுடனும் பற்றுடனும் கூடிச் சிந்திக்கப்படுகிறதோ—சிந்தித்த வுடனேயே புலன்களைப்பற்றிக்கொண்டு மனதைத் தாக்கு கிறதோ—அது இவனுக்கு வினையாக அமைந்துவிடுவதால், அது 'ஆகாமிய'மாக ஆகிவிடுகிறது. பிறகு எவ்விதத்திலும், எண்ணியவனைப் பாதிக்காமல் விடுவதில்லை. இதைக் 'கெடுவல்யா னென்பதறிக' எனக் கூறினர்.

அவ்வாறுள்ள எண்ணங்கள்கூடாது என்றபொருளில், தீய எண்ணங்களை ஒருவ'ன்மனதால் எண்ணினாலும் ஒருவன் கெட்டுவிடுகிறான் என்றும், அது அவனுக்குக் கெடுகுறி யென்பதையும் நினைப்பூட்டுவதற்காகவே, 'தன்னெஞ்சம் நடுவொரீஇ யல்லசெயின்' என்ற இவ் வாக்கியம எழுந் துள்ளது என்னலாம். மேலும், 'யானை வருமுன்னே மணி யோசைவரும்; கேடு வருமுன்னே மதிகெட்டுவரும்' என்ற பழமொழியும் இக்குறட்பாவுக்குச் சான்றாகும்.

இனி, கீதையிலுள்ள இரு சுலோகங்கள் வருமாறு:-

கீ: 2- 62-

த்யாயதோ விஷயான் பும்ஸ: ஸங்கஸ்தேஷூபஜாயதே
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: காமாத் க்ரோதோऽபிஜாயதே

" 2- 63-

க்ரோதாத்பவதி ஸம்மோஹ: ஸம்மோஹாத் ஸ்ம்ருதிவிப்ரம:
ஸ்ம்ருதிப்ரம் சாத்புத்திநாசோ புத்திநாசாத் ப்ரணச்யதி

பொருள்: விஷயங்களை உற்று நினைக்கின்ற புருட னுக்கு, அவற்றின்மேல் பற்று உண்டாகிறது. பற்றானது, ஆசையாகப் பரிணமிக்கிறது. ஆசையானது, கோபமாக் மாறுகிறது. கோபத்தினின்றும் பெரும் மோஹமும்,

(கார்யா காரியங்களின் விவேகமின்மையும்) பெரும் மோஹத்தால் நன்னினைவின் கேடும், நன்னினைவுகெடுவதால், புத்தி நாசமடைகிறது. புத்தி நாசத்தால் ஒருவன் முற்றும் அழிந்துவிடுகிறான். அதாவது, உபயோக மற்றவனாக ஆகிவிடுகிறான்.

ஒருவன் தெருவழியே பல உருவங்களைப் பார்த்துக் கொண்டும், அவைகளை மறந்துவிட்டும், மறுபடி பல பொருள்கள் தோற்றவும் மறையவுமான நிலையில் செல்லும் போது, மத்தியில் கண்ணுக்கு இனிமையான கட்டழகமைந்த ஒரு வடிவத்தைக் காணுகிறான்: அதைக் கூர்ந்து பார்க்க, மனது விரும்புகிறது. அப்படிப் பலமுறை பார்த்த பிறகு, அதன் மீது பிரியம் உண்டாகிறது. வலுத்த விருப்பம் வந்தவுடன், பற்றுதல் உண்டாகிறது. பற்றுதல் முதிர்ந்தால், அப்பொருளையடைய ஆசை உண்டாகிறது. இது—'காமம்' எனப்படுகிறது. இவ் வாசையை நிறைவேற்றிக்கொள்ள, மனது விரும்புகிறது. மற்றவர்கள் அதற்கு இடந்தருவதில்லை. ஆசை நிறைவேறாதபொழுது, அது கோபமாக மாறுகிறது. தடைப்பட்ட ஆசைதான், 'கோபம்' என்ற பெயராக வடிவடைகிறது. அது, பைத்தியத்துக்கும் ஒப்பாகிறது. அந்தக் கோபம் முதிர்ந்தால், பெரும் மோஹமுண்டாகிறது. இது, 'மனக்குழப்பம்' என்றும் சொல்லலாம். மனக் குழப்பத்திலிருந்து, நல்ல நினைவின் கேடு உண்டாகிறது. 'இது நல்லது – இது கெட்டது' என்று பாகுபடுத்துகிற நினைவு நீங்கிவிடுகிறது.

நன்னினைவு கெட்டால், புத்தி நாசமடைகிறது. புத்தி நாசமடைந்தவன், முற்றும் அழிந்தவனாகிறான். ஏனெனில், அறிவிழந்தவன், உலகில்வாழத்தகுதியற்றவனாகிறான். அவன் உயிருடன் இருந்தாலும், இறந்தவனுக்குச் சமானமாக ஆகிவிடுகிறான். இவ்விதமாயுள்ள பெரிய கேடு உண்டாவதற்கு காரணமாக இருந்தது, தீய எண்ணத்தைச் சிந்தித்ததினால்தான்! ஆகையால், மனிதன் தன் எண்ணத்தைப்பற்றி எச்சரிக்கையாக இருப்பானாக.

—சு. சித்பவாநந்தா.

**124: நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினு மாணப் பெரிது.**

(பொ-ள்:) இல்வாழ்க்கையாகிய நன்னெறியினின்று வேறுபடாமல் அடங்கினவனது உயர்ச்சியானது, மலையினுயர்ச்சியினும் மிகப் பெரிது.

திரியா தடங்குதல், பொறிகளால் புலன்களை நுகராநின்றே அடங்குதல். —பரிமேலழகர்.

(வி-ரை:) நிலையிற் றிரியா தடங்குதலாவது—ஆன்றோர்கள் இல்வாழ்வானுக்குக் கூறியுள்ள அறவொழுக்கத்தில் மாறுபடாது நின்று வாழ்க்கை நடாத்துதலாகும். அவற்றுள் நடுநிலைமை, அடக்கம், பொறுமை, பிறர்மனைநயவாமைமுதலிய உத்தம குணங்கள் முக்கியமாகும். இவ்வாறு நன்னெறிக்கணின்று, தன்னையும் தன் தேசத்தவரையும் மேலோங்கச் செய்யவேண்டுமென்னும் உறுதியுடன் வாழ்க்கைநடாத்தும் உத்தமர்கட்கு, பாமர மக்களால் ஏற்படும் இடையூறுகள் பல நேர்ந்துவிடுகின்றன.

மற்றும், உலகில் நன்மைக்கும், தீமைக்கும் எப்போதும் ஓயாதபோராட்டம்நடந்துகொண்டுதானிருக்கிறது. "உள்ளத்தின் முடிமேலே இல்லாமை வீற்றிருக்கும் உறுதியாகத்—தெள்ளுற்ற நல்லறத்தின் தலைமேலே எப்போதுந் தீமை வாழும்" என்று 'வாசிட்டமுங்' கூறுகிறது. அந் நன்மை தீமைகள் மக்களைப் பற்றிக்கொண்டு நடைபெறுகின்றன. ஆதலால், உலகில் நன்மார்க்கம் தலையெடுக்கும் பொழுது, மக்களிடையே சமாதான வாழ்வும், அறவொழுக்கமும், உலக முன்னேற்றமும், பெருமித இன்பமும் உண்டாகின்றன.

மற்றுத் தீநெறி ஆட்சிகொள்ளும்பொழுது, உலகில் பஞ்சமும், கொடு நோய்களும், மக்களின் மனவேற்றுமைகளும், கோரமான யுத்தங்களும் உண்டாகி, சாதுக்களின் மனம் துன்பத்திலழுந்தும்பொழுது, 'கடவுள் உலகத்திலவதரித்து, தீய சக்தியுடையவர்களை யொழித்து, சாதுக்களுக்கு

நல்வாழ்வை அருளுகிறார்' என்ற உண்மையை, கீதை, இராமாயணம், கந்தபுராணம் போன்றவைகளில் காணலாம்.

மற்றும், நன்னெறியில் நின்று வாழ்க்கை நடாத்துபவர்களுக்குத்தான் உலகில் பல இன்னல்கள் ஏற்படுவதுடன், 'கடவுள் சோதனை'யாகவும் பல துன்பங்கள் தற்செயலாக நேர்ந்து விடுகின்றன!

உதாரணமாக:—அரிச்சந்திரன், சிபி, தருமன் முதலிய உத்தமர்கள் நிரபராதிகளாகவிருந்தும், அவர்களுக்கு நேர்ந்த இன்னல்கள் கணக்கிலடங்காதனவாகும். அதேபோல் உலக சமாதானத்தை நிலைநாட்டி, எல்லா மக்களும் சகோதர பாவத்துடன் வாழவேண்டுமென்று, தளரா நெஞ்சுடன், நடுநிலை தவறாது, ஒரே லட்சியத்துடன் உலக சேவைசெய்த உத்தமன் காந்தியடிகளாரின் உயிர்வாழ்க்கைமுழுதும் அவர் அனுபவித்த இன்னல்களை எண்ணுங்கால், உள்ள முருகும்; உடல் வெதும்பும்; உயிர் பதைபதைக்கும்! ஆனால் – அத்துடன் துன்பம் அவரைவிட்டு விட்டதா? என்றால், 'இல்லை, இல்லை. ஆம், அவர் உடலைவிட்டு உயிர் பிரிந்த பின்புதான், அவரைப் பற்றியிருந்த தொல்லைகளும் நீங்கினவென்பது உலகறிந்த உண்மையாகும். இதுபோன்று இன்னும் பல உத்தமர்களின் சரித்திரங்களும் இவ்வாறே முடிவடைந்துள்ளன என்ற நியதியை, "இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக் குற்றமறைப்பானுடம்பு" எனத் தெய்வப்புலவருங் கூறினார்.

ஆதலால் ஒருவன் வாழ்நாளில் – "பித்தவுலகர் பெருந் துறைப் பரப்பினுள்" என்ற மாணிக்கவாசகர் வாக்குப்படி பாமர மக்களால் ஏற்படும் பல இன்னல்களையும் சகித்து, நெறிவழுவாது அறமார்க்கத்தில் நிலையிற்றிரியாது நிற்றல் மிக அருமையாகலின், அந்நிலையில் நிலைபெற்று அறிவுடன் வாழும் உத்தமர்களின் தோற்றமானது, 'மலையினும் மிக உயர்ந்த'தெனத் தெய்வப்புலவர் கூறியது, சிறந்த 'பொன் மொழி'யேயாகும்.

இனி, கீதையிலுள்ள மூன்று சுலோகங்கள் வருமாறு:

கீ: 14—23:—

உதாசீன வதாசீனோ குணைர்யோ ந விசால்யதே
குணவர்த்தந்த இத்யேவயோ அவதிஷ்டதி நேங்கதே

கீ: 14—24:—

ஸமது:க ஸுக: ஸ்வஸ்த்த: ஸமலோஷ்டாச்ம காஞ்சன:
துல்யப் ப்ரியாப் ப்ரியோ தீரஸ்துல்ய நிந்தாத்ம ஸம்ஸ்துதி:

கீ: 14—25:—

மானப மானயோஸ் துல்யஸ்துல்யோ மித்ராரி பக்ஷயோ:
ஸர்வாரம்ப பரித்யாகீ குணாதீத ஸ உச்யதே.

பொருள்:—எவன் ஒருபட்சத்தைச் சாராதவன்போல் இருந்துகொண்டு குணங்களால் அசைக்கப்படுவதில்லையோ-குணங்களே தொழில் புரிகின்றனவென்று நிலைபெயராது நிற்கின்றானோ – சிறிதும் அசைவதில்லையோ – எவன் துன்பத்திலும் இன்பத்திலும் சமமானவனோ – தன் உண்மையில் நிலைத்தவனோ – ஓடு, கல், பொன் இவைகளைச் சமமாகக் கருதுபவனோ – திடசித்த முடையவனோ – தன்னை இகழ்வதையும் புகழ்வதையும் சமமாகக் கருதுபவனோ – எவன் மானத்திலும் அவமானத்திலும் சமபாவனையுடையவனோ - சத்துருவினிடத்தும் மித்துருவினிடத்தும் சமசித்தமுடையவனோ – ஆசை வாய்ப்பட்டுச் செய்யும் எல்லாத் தொழில்களையும் விட்டவனோ – அவன் 'குணாதீதன்' – எனப்படுகிறான்.

126. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து.

(பொ-ள்:) ஆமைபோல ஒருவன் ஒரு பிறப்பின்கண் ஐம்பொறிகளையு மடக்கவல்லனாயின், அவ்வன்மை அவனுக்கு எழுபிறப்பின் கண்ணும் அரணாதலையுடைத்து.

ஆமை ஐந்துறுப்பினையும் இடர்புகுதாமல் அடக்குதல் போல,—இவனும் ஐம்பொறிகளையும் பாவம் புகுதாமலடக்க

வேண்டுமென்பார் 'ஆமைபோ'லென்றார். ஒரு பிறப்பிற் செய்தவினையின்பயன் எழுமையுந் தொடருமென்பது இதனானறிக.
— பரிமேலழகர்

(வி-ரை:) இவ்வாறு புலன்களை வசப்படுத்தும் அறிவுடையவனை, கீதையில் (ஸ்திதப்ரஜ்ஞன்) அறிவு நிலைத்தவன்; இந்திரியங்களை யடக்கி நல்ல நெறியில் செலுத்தவும், தீய நெறியிற் செல்லாமல் அடக்கவும் பழக்கமுள்ளவன்; மேல் நிலையை யடைய பரிபக்குவமானவன் என்றெல்லாம் உபதேசிக்கிறது.

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:-

கீ: 2- 58-

யதா ஸம்ஹரதே சாயம் கூர்மோங்கானிவ ஸர்வச:
இந்த்ரியா ணீந்த்ரியார்த் தேப்யஸ்தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா

(பொருள்:) எப்போது மேலும் இந்த யோகி, ஆமையானது தன் அவயவங்களை உள்ளடக்குவதுபோல, புலன்களை இந்திரிய விடயங்களினின்று எவ்வகையிலும் உள்ளே இழுத்துக்கொள்கிறானோ, அவனுடைய ஞானம் நிலைபெற்றதாகும்.

ஆபத்துகளினின்று தன்னைக் காத்துக்கொள்ள ஆமை மிக எளிதில் உறுப்புக்களை உள்ளே இழுத்துக்கொள்கிறது. இந்திரியங்களை ஆளும் அறிஞன், அவைகளை அவ்வளவு எளிதில் உள்முகமாகத் திருப்புகிறான். இப்படிச்செய்வது 'பிரத்தியாகாரம்' எனப்படும். வீட்டின் கதவுகளை அடைத்துத் தாழிட்டுவிட்டு வெளியுலகின் வியவகாரத்தில் தொடர்வு அற்றவனாக மனிதன் உள்ளே வீற்றிருப்பது போன்று, ஞானி பொறிவாயிலை அடைத்துவிட்டு சமாதியில் சுகித்திருக்க வல்லவனாகிறான். அப்படி சமாதியில் திளைத்திருப்பதுதான், நிறைஞானியின் உண்மை நிலை.

— சு. சித்பவாநந்தா.

237. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்.

(பொ-ள்:) தமக்குப் புகழ் உண்டாகும்படி வாழ மாட்டாதார் பிறரிகழ்ந்தவழி இவ்விகழ்ச்சி நம்மாட்டாமையின் வந்ததென்று தம்மை நோவாதே தம்மை யிகழ்வாரை நோவதென்கருதி!

புகழ்பட வாழ்லாயிருக்க, அதுமாட்டாத குற்றம்பற்றிப் பிறரிகழ்தல் ஒருதலையாகலின், 'இகழ்வாரை' என்றார்.

—பரிமேலழகர்

(வி-ரை:) இக்குறட்பாவில் தெய்வப்புலவர், மக்கள் இம்மை வாழ்வின் முக்கிய பயனாகிய புகழை அடைய வேண்டுமென்பதை மிக வலியுறுத்திக்கூறுகிறார். இதையே கம்பரும், மக்கள், "பிறந்திறந்துபோய்ப் பெறுவதும் இழப்பதும் புகழே" என, புகழை வலியுறுத்துகிறார்.

ஒருவன் இவ்வுலகில் ஒரு இலாபத்தை அடைந்தான் என்றால், அது புகழாகும். ஒன்றை இழந்தான் என்றால், அது புகழ்பெருமையே யாகும்.—இதை வற்புறுத்தியே

"வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்" — (எனவும்)
"வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்." — (எனவும்)

உலகில் புகழ் பொருந்தும்படி வாழ மாட்டாதார்க்கு வசையுண்டாகிறது எனவும், அவர்கள் வசிக்கும்நாடு வளங் குன்றுமெனவும், புகழின்றி வீணாக உயிர் வாழ்ந்திருத்தல் வாழாமையாகுமெனவும் தெய்வப்புலவர் முடிவுகூறினார்.

ஆகில், 'புகழ்பெறும் வகையாது? எவ்வாறு வாழ்க்கை நடாத்தினால் புகழைப் பெறலாகும்? அப்புகழைப் பெறுதற்குத் தகுதியுள்ளார் யாவர்?' என்ற இயல்பை, கூர்ந்த மதியால் அறிந்துணர்வது, வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாகும்.

புகழ் ஈகையினாலும், கல்வியினாலும், ஆண்மையினாலும் அடைதல் கூடுமாயினும் — "உணவின் பிண்ட முண்டி முதற்று"- என, புறநானூற்றுச் செய்யுள் கூறுவதால், "வறியார்க் கொன்றீவதே ஈகை" என்ற பாவின்படி, உலக மக்களுக்கு உண்டாகிய வறுமை, அறிவின்மை, கொடுநோய் முதலியவற்றை, பொருள் ஈகையால் தீர்ப்பதே 'சிறந்தபுகழ்' என, பரிமேலழகர் குறிப்பால் தெரியவருகிறது.

மற்றும், உயர்பிறப்பையடைந்த மக்கள் யாவரும், வாழ்க்கைத் திட்டத்தில் தமக்குச் செய்துகொள்ளவேண்டிய நன்மையான கடமைகள் மூன்றாகும். அவை: துக்கம் நீங்குதல், சுகம் பெறுதல், புகழ் பொருந்துதல். முதலாவதாக துக்கம் நீக்குவதற்காக முயற்சி செய்கிறான். பின்பு, சுகம் அடைவதற்கான சாதனங்களைத் தேடுகிறான். அதற்குப் பின்பு, புகழில் விருப்பம் உண்டாகிறது. பொருளால் இம்மூவித சித்திகளையும் அடையலாம் என்பதுவெளிப்படை.

ஆனால், துக்கம் நீங்குதலையும், சுகத்தைப் பெறுதலையும், விதியும் முயற்சியும் ஒத்துவருமாயின் செல்வத்தினால் அடைந்து விடலாம். புகழ் பெறுவதானது, அவ்வளவு இலகுவான காரியமல்ல! செல்வம் மிகுந்திருப்பதால்மட்டும் புகழ் உண்டாகிவிடாது. சிறந்த அறிவும், தன்னலம்கருதா தியாக புத்தியும் உடையவர்களுக்கே புகழ்வந்து அடைகிறது.

மேலும், அறிவில்லாத செல்வர்கள், "புகழ் பெறுவதற்குப் பதிலாக, பழியையே அதிகம் தேடிக்கொள்ளுகிறார்கள்" என்பதாக ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் "அர்த்த மனர்த்தம் பாவய நித்யம்"- என்று, 'பஜகோவிந்த'த்தில் குறிப்பிடுகிறார். இது, உலக வழக்கத்திலும் எங்கும் காணப்படுகிறது.

ஆகவே, புகழை விரும்பாமல், தன் கடமையைச் செய்து முடிப்பதற்கு உடல், பொருள், ஆவி-இம்மூன்றையும் தியாகம் செய்பவர்க்கே புகழ் தேடிவந்து அடைகிறது என்பதை, பல நூல்களிலும், பலருடைய சரிதைகளாலும்

அறிந்த உண்மையாகும். மற்றும் புகழானது, பலவித தியாகங்களால் பலவிதமாக மக்களுக்கு உண்டாகின்றன. அவற்றுள்:—

"உரைப் பாருரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்
றீவார் மேல் நிற்கும் புகழ்" —(எனவும்)
"வெய்ய குரற்றோன்றி வெஞ்சின வேறுட்கொளினும்
பெய்யு முகில்தன்னைப் பேணுவரால் வையத்
திருள் பொழியும் குற்றம் பலவரினும் யார்க்கும்
பொருள் பொழிவார் மேற்றே புகழ்." என்றபடி

ஈகையாலும் புகழ் வந்தடைகிறது. சத்தியத்தால், அரிச்சந்திரன் புகழ்பெற்றான். குலதர்மமான வரன் முறைக்காக அரசுரிமையின் தியாகத்தால் பரதன் அழியாப் புகழ்பெற்றான். சீதையை மீட்கும் பொருட்டுத் தன் உயிரையே தியாகம்செய்த ஜடாயு, மிகுந்த புகழ்பெற்றான். காந்தியடிகளார், தேச நன்மைக்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம்செய்து இதுவரை கண்டறியாத 'சிரஞ்சீவிப் புகழ்' பெற்றார் என்பதை, இந்த சகாப்தத்தில் நாம் கண்ட உண்மையாகும்.

ஆதலால், பூதவுடம்பு அழியினும், என்றென்றும் அழியாப்புகழுடம்பைப் பெறுவதே இகவாழ்க்கையின் இலட்சியமாகுமென்பதூஉம், புகழ்பெறாத மனிதர்கள், 'உலகத்தில் இருப்பதும், இறப்பதும் ஒன்றே' எனவும் – இவ்வதிகாரத்தினுள்ள பத்துக் குறட்பாக்களாலும் விளக்கமாகின்றன.

இனி, கீதையிலுள்ள இரு சுலோகங்கள் வருமாறு:-

கீ: 2– 35–

பயத்ரணாதுபரதம் மம்ஸ்யந்தே த்வாம் மஹாரதா:
யேஷாம் சத்வம் பஹுமதோபூத்வா யாஸ்யஸிலாகவம்

" 2– 36–

அவாச்யவாதாம்ச்ச பஹூன் வதிஷ்யந்தி தவாஹிதா:
நிந்தந்தஸ்தவ ஸாமர்த்யம் ததோ து:கதரம் நு கிம்

பொருள்:- அர்ஜுனா! நீ பயத்தால்பின்வாங்கினவனாக மகாரதிகர்கள் எண்ணுவார்கள். எவர்பால் நீ பெருமை பெற்றிருந்தாயோ அவர்பால் சிறுமையடைவாய். உன் பகைவர்கள் உன்திறமையைப் பழித்து, சொல்லத்தகாத இழிந்த சொற்களைச் சொல்லுவார்கள். அதை விட உனக்குப் பெரும் துன்பமாகிய வசைச் சொல் யாதுளது?

காலமெல்லாம் பகைவர்களாலும் புகழ்ந்து பேசுதற்குரிய கீர்த்தி வாய்ந்தவன் அர்ஜுனன். அன்றியும் மகாதேவனை எதிர்த்துப்போர்புரிந்து பாசுபதாஸ்திரம் பெற்றவன் என்றும் பார்த்தனைப் பாராட்டி வந்துள்ளார்கள் என்ற நிச்சயத்தை, பகவான் பார்த்தனுக்கு உபதேசிக்கிறார். நீ இன்று சுற்றத்தார் மீது கருணைகொண்டு யுத்தத்தை விடுத்தாலும், 'அன்பின் வழிகொண்டு பின்வாங்கினான்' என்று கருதமாட்டார்கள். போற்றுதல் மிக எளிதில் தூற்றுதலாக மாறிவிடும். உயர்வான புகழ் பெற்றுள்ள உன் கீர்த்திக்குப் பதிலாக, மனிதனால் கேட்டு சகிக்க முடியாத வசைச் சொற்களை உன் பகைவர்கள் சொல்லுவார்கள். அவ்வாறுள்ள சிறுமையை நீ வருவித்துக்கொள்ள வேண்டாம். —சு. சித்பவானந்தா.

உலகில் சிறந்த புகழ் பெறுவதற்குத் தகுதியுள்ள ஒருவன் தன் புகழை உயரச்செய்யானாயின், உலகமக்களால் வசை ஏற்பட்டுவிடும் என்பது மேலே கண்ட உதாரணங்களால் விளங்குகின்றன.

261: **உற்ற நோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை**
யற்றே தவத்திற் குரு.

(பொ-ள்:) தவத்திற்கு வடிவு 'உண்டி சுருங்கல்' முதலியவற்றால், தம்முயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலும், பிற உயிர்க்குத் துன்பம் செய்யாமையுமாகிய அவ்வளவிற்று.

மற்றுள்ளனவெல்லாம், தமக்கு வரும் துன்பத்தைப் பொறுத்தலும், பிறவுயிர்க்கு துன்பஞ் செய்யாமையுமாகிய

இவற்றுள் அடங்குவதால், 'அற்றே' யென தேற்றேகாரங் கொடுத்தார். —பரிமேலழகர்.

இனி, இக் குறட்பாவின் 'உற்றநோய் நோன்றல்' என்ற வாக்கியத்திற்கு ஒப்புவமையாக, கீதையிலுள்ள சுலோகம் வருமாறு:

கீ: 5- 23-

சக்னோதீஹைவ ய: ஸோடும் ப்ராக் சரீரவிமோக்ஷணாத்
காமக்ரோதோத்பவம் வேகம் ஸ யுக்த ஸ ஸுகீ நர:

பொருள்:- எவன் உடல் நீங்குவதற்கு முன்பாக ஆசையாலும், கோபத்தாலும் எழும் மனக்கிளர்ச்சியை இங்கிருக்கும்போதே தாங்குவதற்கு வலிமை பெற்றவனோ, அவன் யோகத்தில் நிலைத்தவன்; அவனே சுகபுருஷன்.

இனி, 'உயிர்க்குறுகண் செய்யாமை என்ற வாக்கியத் திற்கு, ஒப்புவமையாக, கீதையிலுள்ள இரு சுலோகங் களால் விளக்கப்படுகின்றன:

கீ: 12- 13-

அத்வேஷ்டா ஸர்வபூதானாம் மைத்ர: கருண ஏவ ச
நிர்மமோ நிரஹங்கார: ஸமது:க்கஸுக: க்ஷமீ

கீ: 12- 14-

ஸந்துஷ்ட: ஸததம் யோகி யதாத்மா த்ருட நிச்சய:
மய்யர்ப்பிதமனோ புத்திர்யோ மத்பக்த: ஸ மே ப்ரிய:

பொருள்:- உயிர் அனைத்திடத்தும் வெறுப்பின்றி, நட்பும் கருணையும் உடையவனாய், மமகாரம் அகங்காரம் அற்று, இன்ப துன்பங்களைச் சமமாய்க் கருதி, பொறுமை படைத்து எப்போதும் சந்தோஷமாய் இருப்பவன், யோகி யாய் தன்னடக்கமுடையவனாய், திட நிச்சயமுள்ளவனாய், என்னிடத்து மனம் புத்தியைச் சமர்ப்பித்தவனாய் யார் என் பக்தனாகிறானோ, அவன் எனக்குப் பிரியமானவன்.

வெறுப்பு, வேற்றுமையை உண்டாக்கி, உடலெங்கும் விஷத்தை உண்டுபண்ணி நல்வாழ்க்கையைக் கெடுக்கிறது. ஆகையால், உயிர் வாழ்பவன் எல்லா உயிர்களிடத்தும் நட்புக்கொள்ளவேண்டும். "அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கென்பு தோல்போர்த்த வுடம்பு" ஆக, நட்பே உயிர்களை இணைக்கிறது. அப்பொழுது அது, 'கருணை' எனப் பெயர்பெறுகிறது. பிறரிடத்து கருணைகாட்டுவதால் தன் பொருளுக்கு நஷ்டம் வரலாம். அதைப் பொருட்படுத்தாத நிலை, மமகாரம் அற்ற நிலையாகும். உடலபிமானம் 'அகங்காரம்' எனச் சொல்லப்படுகிறது. மிகுந்தகருணையால், அகங்காரம் அறவே அகன்றுவிடுகிறது.

ஒருவனுடைய வாழ்நாளில், இன்பமோ துன்பமோ வந்தமையக்கூடும். அவைகளை சமமாகஎண்ணவும், அனுபவிக்கவும் வேண்டும். அவற்றுடன் எவ்வித நிலையிலும் மனச் சந்தோஷம் உடையவனாகவும் இருக்கவேண்டும். மற்றும், பாரமார்த்திக நிச்சயத்திலும் நம்பிக்கை உள்ளவனாக இருக்கவேண்டும். அவ்வாறு உள்ளவனே என் பக்தனாகிறான். —சு. சித்பவாநந்தா.

278. மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந் தொழுகு மாந்தர் பலர்.

(பொ-ள்:) மாசு தம் மனதின் கண்ணதாக பிறர்க்குத் தவத்தான் மாட்சியுடையராய் நீரின் மூழ்கிக்காட்டி, தாம் அதன் கண்ணே மறைந்து ஒழுகும் மாந்தர் உலகத்துப் பலர்.

மாசு, காம, வெகுளி, மயக்கங்கள், மாண்டாரென்று பிறர் கருதுதற்கு, நீராடுதலால் அத்தொழிலை அவர் மறைதற்கிடனாக்கினர். —பரிமேலழகர்

இனி, "மாட்சிமைப் பட்டாரது நீர்மையை யுடையராய் என மக்கட்குக்காட்டி" என்னும் உரை:—மணக்குடவர்.

(வி-ரை:) இது பொய்வேடமணிந்து மக்களை ஏமாற்றும் கூடாவொழுக்க முடையவர்களைக் குறித்து, இக்குறட்பாவில் சொல்லப்படுகிறது. இதற்குமுன் உள்ள 271-வது குறட்பாவிலும் "வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்களைந்து மகத்தே நகும்" என்றும் குறிப்பிட்டார். இக்கூடாவொழுக்கமுடையோர்களின் இயல்பை, இராமாயணத்திலும், இராவணன் சீதையை அபகரிப்பான்வேண்டி, 'உயர்ந்த துறவி'போல் வேடமணிந்து சீதையினிடத்துச்செல்லுகிறான். இதைப் 'பொய்வேட'மென்று அறியாமல், 'உண்மையான தவசீல'ரெனக் கருதி பர்ணசாலையில் அமரும்படி உபசரணை செய்கிறாள் சீதை. அத்தருணத்தில், அப்'பொய்வேடத்தை'க் கண்டு சகியாத 'சராசரப் பொருள்கள்' யாவும் அஞ்சி நடுங்கினதாகக் கம்பர் ஒருகவியில் சித்தரித்துக்காட்டுகிறார்.-

"நடுங்கின மலைகளு மரனு நாவலின்
தடங்கின பறவையும் விலங்கு மஞ்சின
படங்குறைந் தொதுங்கின பாம்பும் பாதகக்
கடுந்தொழி லரக்கனைக் காணுங் கண்ணினே."

"இராவணனது 'பொய் வேட'த்தைக்கண்டு மலைகள் நடுங்கின! பறவைகளும் சப்திக்கவில்லை! விலங்குகளும் பீதியடைந்தன! படமெடுத்தாடிய பாம்புகளும், படத்தைச் சுருக்கிப் பயந்தோடின!' என்று கூறுவதால், கூடாவொழுக்கமுடைய பாதகர்கள் வாழ்வதை அஃறிணை உயிர்களும் விரும்பவில்லையென்றால், ஆறறிவு படைத்த மக்களுக்கு யாதாகும்?

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:—

கீ: 3—6:—

கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மனஸா ஸ்மரன்
இந்த்ரியார்த்தான் விமூடாத்மா மித்யாசார:ஸ உச்யதே.

(பொருள்:) எவன் கர்மேந்த்ரியங்களை அடக்கிவிட்டு இந்த்ரியங்கள் நாடும் பொருட்களை மனத்தால் நினைத்துக் கொண்டிருக்கிறானோ, அந்தப்பெருமூடன் 'பொய்யொழுக்க முடையவன்' என்று சொல்லப்படுவான். அஞ்ஞானத்தில்

இருந்துகொண்டு கர்மத்தை விட்டுவிடுவதாகப் பாசாங்கு செய்வது, அது துராசாரத்துக்கு ஒப்பானது.

பிரகிருதியில் ஆத்மா கட்டுண்டு இருக்குமளவு மனது இருக்கிறது. ஓயாது சங்கற்பித்துக்கொண்டிருப்பது, அதன் தொழில் மனது எண்ணுகிறது; அதே வேளையில் புறக் கரணங்கள் தடுக்கப்படுகின்றன. அப்படிச்செய்வது முறையன்று. மனிதன், மனதை அடக்காது வெளிக்கரணங்களை அடக்குவதால், தன் இயல்பை அவன் பிளவுபடுத்துகிறான். ஆகையால் அது, 'மித்தியாசாரம்' (பொய்யொழுக்கம்) எனப்படுகிறது. எது வாழ்வைக் குலைக்கிறதோ, அது பொய்யொழுக்கம். அஞ்ஞானத்தில் இருப்பவன், கர்மத்தை விட்டுவிடுவதாகப் பாசாங்கு செய்வது 'மித்தியாசாரம்' ஆகிறது. அது துராசாரத்துக்கு ஒப்பானது.

—சு. சித்பவானந்தா.

இதற்கு உபமானமாக "கடோபநிடதம்" 1-2-5-வது மந்திரத்திலும்:

"தாங்கள் அஞ்ஞானத்தின் மத்தியில் இருந்துகொண்டு 'எல்லாம் வல்லவர்கள்' எனவும், 'தாங்கள் பெரிய பண்டிதர்கள்' என்வும் வெளிக்குக் காட்டிக்கொண்டு கெட்ட மார்க்கத்தில் செல்லும் மூடர்கள், துக்க ரூபமான 'ஜனனம், ரோகம், கிழத்தனம்' முதலியவற்றால்பீடிக்கப்பட்டு, எப்படி குருடனால் நடத்தப்படும் மற்றொரு குருடன் அனேக ஆபத்துகளுக்கு ஆளாகிறானோ, அதேபோல, பொய்யொழுக்கமுள்ள மூடர்களும், அனேக துன்பங்களுக்கு ஆளாகிறார்கள்" என்று கூறுவதாலும் அறியலாம்.

**291: வாய்மை யெனப் படுவதியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்.**

(பொ-ள்) 'மெய்மை' யென்று சிறப்பித்து சொல்லப்படுவது யாதென்று வினவின், அது பிறிதோருயிர்க்கு தீங்கு இறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல்.—பரிமேலழகர்.

(வி-ரை:) இதனால், கண்டதையே உள்ளபடிசொல்லு வதும் வாய்மையாகாது. அது தீங்குபயக்குமாயின் பொய்யேயாயினும் நன்மைபயப்பின், அது மெய்யேயாகும். இது "பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்று கூறுவதால், தீங்கு பயக்கும் உண்மையும் பொய்போன்றதாம்; நன்மை பயக்கும் பொய்யும் மெய்போன்றதாம். இவற்றால் பொய் மெய்களின் இலக்கணம் கூறியவாறு காண்க.

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:-

கீ: 17-15-

அநுத்வேககரம் வாக்யம் ஸத்யம் ப்ரியஹிதஞ் ச யத்
ஸ்வாத்யாயாப்யஸனஞ் சைவ வாங்மயம் தப உச்யதே

(பொருள்:) கடுமையில்லாததும், உண்மையானதும், பிரியமானதும், நன்மையைக் கருதுவதுமான வார்த்தை எதுவோ அதுவும் தமக்கு உரிய வேதநூல் ஓதுவதும் வாக்காற்செய்யும் 'தவம்' என்று சொல்லப்படும்.

காயத்தால் அடித்துத் துன்புறுத்துவதைவிடக் கொடியது, கடுஞ்சொல் சொல்லிக் காய்தல். தவசி ஒருவனுக்கு அது பொருந்தாது. சில வேளைகளில் உண்மையை உரைக்குங்கால் அது துன்பந்தருவதாயிருக்கிறது. ஆதலால் 'பொய் பேசலாமா?' வென்றால், அது ஒண்ணாது. சத்யத்தையே சொல்லவேண்டும். எப்போக்கில் சத்தியம் சொல்லவேண்டும்? ஏற்றுக்கொள்பவர்களுக்கு இன்பந்தருவதாய் அது இருத்தல் வேண்டும்.

மெய்மையே மொழிந்து முகஸ்துதிசெய்யலாமா? கடுஞ்சொல்லைக் கேட்டுக் கெட்டுப்போனவர்கள் மிகக்குறைவு. இச்சகம் கேட்டு இறுமாப்புற்றுக் கெட்டுப்போனவரோ பலர். ஆகையால், முகஸ்துதி மொழியலாகாது. கேட்கின்றவர்களுக்கு இதம்தரும் இன்சொற்களையே செப்புதல் வேண்டும்.

பரத்தினை சாக்ஷாத்கரித்த பெருமக்கள் பூரித்துப் பகர்ந்துள்ள ஆப்த வாக்கியங்களே 'வேத'மெனப் படுகிறது. இதை 'வேதாந்த'மென்பது இன்னும் பொருத்தமுடையதாகும். வேதவேதாந்தம் எம்மொழியில் வேண்டுமானாலும் அமையலாம். அவையாண்டும் அருள் நிறைந்திருக்கும். அத்தகைய சாஸ்திரங்களை வாய்விட்டு ஓதிப் பழகுவதால், சொல் சுத்தப்படுகிறது. பிறகு அது சாதகனது சொந்த அருள் மொழியாகவும் வடிவெடுக்கிறது. இங்கு பகர்ந்துள்ள நான்கு பகுதிகளும் முறையாக அமையப்பெற்றதே வாக்கு மயமான தபசாகிறது. —சு. சித்பவாநந்தா.

**331. நில்லாதவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.**

(பொ-ள்): நிலையுதலில்லாத பொருள்களை நிலையுதலுடையன வென்று கருதுகின்ற புல்லிய வறிவினையுடையராதல் துறந்தாற்கிழிபு.

தோற்றமுடையவற்றைக் கேடிலவென்று கருதும் புல்லறிவான், அவற்றின் மேற்பற்றுச் செய்தல் பிறவித் துன்பத்துக்கேதுவாகலான்' அது வீடெய்துவார்க்கிழுக்கென்பது இதனாற் கூறப்பட்டது. —பரிமேலழகர்.

(வி-ரை): ஆகில், உலகில் நிலையுதலில்லாத பொருட்கள் யாவை? அவற்றை நிலையுதலுடைய பொருட்களாக எங்ஙனம் மக்கள் கருதுகின்றனர்? என்ற உண்மையை விளக்கமாக அறியவேண்டியது, பகுத்தறிவு பெற்றுள்ள மக்களின் கடமையாகும்.

மக்கள் நல்வாழ்க்கை வாழ்வதற்குச் சிறந்த சாதனமான பொருட்கள், கல்வியும் செல்வமுமாகும். அவற்றுள் குறைந்த அறிவினர்கள், நியமமின்றியழியும் செல்வப் பொருளையும், அதை அனுபவிப்பதற்குரிய இளமையையும், அதற்காதாரமான இவ்வுடம்பினிடத்தும் பற்றுக்கொண்டு விடுகிறார்கள். இது 'புல்லறிவாளர்களின் இயல்பு' என்பதாக இப்பாவில் தெய்வப்புலவர் அறிவுறுத்தினார்.

இவ்வுண்மையை நாலடியாரிலும் முதலாவதாக,'செல்வ நிலையாமை, இளமைநிலையாமை, யாக்கைநிலையாமை', என்ற மூன்றதிகாரத்துள்ளும் விளக்கியுள்ளன. மற்றும்,—

நீரிற் குமிழியிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள் — நீர்மே
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று" என நீதிநெறியிலும்,

"பெருக்காற்றொத்தது செல்வம், பெருக்காற்
றிடிகரை யொத்த திளமை, இடிகரை
வாழ்மர மொத்தது வாழ்நாள், ஆகலின்.
ஒன்றே செய்யவும் வேண்டும், ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும், நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும், இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும், இன்னும்
நாளை நாளை என்பீராகில் – அது
நமனுடை முறை நாளாவது மறியீர்
நம்முடை முறை நாளாவது மறியீர்" என்ற கபிலர்
அகவற்பாவும் கூறுகிறது.

இப்புல்லறிவை நீக்கி, நல்லறிவுபெற்று, பிறவித் துன்பத்தினின்றும் நீங்கி, வீட்டின்ப மடைவதற்காகவே, 'நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல்,' என்ற நான்கு அதிகாரத்துள்ளும், ஞானசாதனங்கள் நான்கையும் கூறியுள்ளார் என்பது விளங்குகிறது.

அவற்றுள் முதற்சாதனமாகிய நித்தியா நித்தியப்பொருளின் விவேகமின்றி மற்ற சாதனங்களை எய்தவொண்ணாது என்ற முறையில், நித்திய அநித்தியப் பொருட்களைப் பகுத்தறிகின்ற, விவேகமாகிய முதற்சாதனத்தை, இக்குறட்பாவில் தெய்வப்புலவர் கூறினாரென்பது தெளிவாகின்றது.

இதை – 'சரியை, கிரியை, யோகம், ஞானம்' என நான்காகப்பகுத்து, சந்தானக் கிரமமாக "விரும்புஞ் சரியை

முதல் மெஞ்ஞான நான்கும் அரும்பு மலர், காய், கனி போலன்றோ பராபரமே:" எனத் தாயுமானாரும் கூறினர்.

ஆகையால், 'புல்லறிவாளர் பற்றுக்கொள்வது சிற்றின் பத்திற்கேதுவாகிய செல்வத்தின் கண்ணும், அதை அனுப வித்தற்குரிய யாக்கையின் கண்ணுமாகலின்' எனப் பரிமே லழகர் புல்லறிவின் இயல்பைக் குறிப்பிடுவதால், நல்லறி வுடையோர், விவேக, வைராகமாதிய சாதனங்களைமுறையே பயின்று, பிறப்பின் பயனாகிய வீட்டின்பமடைதலே மனி தப்பிறவியின் சிறப்பியல்பாகுமென்பது இக்குறட்பாவால் அறிகிறோம்.

இனி, கீதையிலுள்ள இரு சுலோகங்கள் வருமாறு:-

கீ: 18- 31-

யயாதர்ம மதர்மஞ்ச கார்யஞ்சாகார்ய மேவச
அயதாவத் ப்ரஜாநாதிபுத்தி: ஸா பார்த்தா ராஜஸீ

" 18- 32-

அதர்மம் தர்மமிதியா மன்யதே தமஸாவ்ருதா
ஸர்வார்த்தான் விபரீதாம்ச்ச புத்தி: ஸா பார்த்த தாமஸீ

பொருள்:- அர்ஜுனா! தர்மத்தை அதர்மமாகவும், செய்யத்தக்க காரியத்தையும், செய்யத்தகாத காரியத்தையும், உள்ளபடியல்லாது ஒன்றிருக்க ஒன்றாக எந்த புத்தியானது உணருகிறதோ அது 'ராஜஸ' மானது.

இருளால் மூடப்பெற்று அதர்மத்தை தர்மமாகவும், எல்லாவிடயங்களையும் நேர்மாறாக எந்தப் புத்தியானது — கருதுகின்றதோ அது 'தாமச'மானது.

இராஜஸ புத்தியுடையவர்கள் மனதில் தர்மாதர்மங்கள் உள்ளபடி விளங்குவதில்லை; மாறுபட்டே தென்படுகின் றன. துரியோதனன் தகாத செயலாகிய சூதாட்டத்தை ஆடியதும், பாண்டவர்களைக் காட்டிற்கு ஓட்டிவிட்டு அவர்

களின் பங்கு அரசியலைக் கைப்பற்றியதும், அது அவனுக்கு அறமெனத் தோன்றியதும் இராஜஸமாகிய கடைக்குணமே யாகும்.

இவ்வாறு பலர் ஒருவருக்கொருவரைப் பகைமையுண்டு பண்ணுவதும், ஊரார் வம்புகளைத் தாம் மேற்கொண்டு கால மெல்லாம் வாதாடிக்கொண்டு, பொய்யை மெய்யாக்கியும், மெய்யைப் பொய்யாக்கியும் காலங்கழிப்பதும் இவர்கட்கு இயல்பேயாகும். இன்னும் விபரீத புத்தியுடையார் நல்லதைக் கெட்டதாகவும் கெட்டதை நல்லதாகவும் எண்ணி விடுகின்றனர். இவர்கள் உழைத்துப் பாடுபடாமல் சோம்பேறிகளாகத் திரிகின்றனர். இவர்கள், கடவுள் வழிபாடு, விவேக வைராகமாதியதத்துவ ஆராய்ச்சிகளை 'வீண்' என்று கருதிவிடுகின்றனர். இவர்கள் தங்களுக்கு நன்மைதரும் ஆக்கமான காரியங்களைச் செய்யாமல், சூதாடுதல் போன்ற வீண் விளையாட்டுகளில் காலங்கழித்து தங்களின் ஆயுளை வீணாக்குவதும் கடைப்பட்ட தாமஸ குணத்தோரது இயல்பாகின்றது. — சு. சித்பவாநந்தா.

338. குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே உடம்பொ டுயிரிடை நட்பு

(பொ-ள்:) முன்றனியாத முட்டை தனித்துக் கிடப்ப அதனுள்ளிருந்த புள் பருவம்வந்துழிப் பறந்துபோன தன்மைத்து உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள நட்பு. தனித்தொழியவென்றதனால் முன்றனியாமை பெற்றும். கருவுந் தானும் ஒன்றாய்ப் பிறந்து வேறும்துணையுந் அதற்காதாரமாய் நிற்றலால், அது உடம்பிற்குவமையாயிற்று. சேதனமாய் அருவாய் நித்த மாய உயிரும், அசேதனமாய் அநித்தமாய் உருவாய உடம்பும் தம்முண் மாறுகலின், வினைவயத்தாற் கூடியதல்லது நட்பிலவென்றறிக. நட்பென்பது ஈண்டுக் குறிப்பு மொழியாய் நட்பின்றிப் போத லுணர்த்திற்று.

—பரிமேலழகர்.

(வி-ரை): இதில் 'குடம்பை' என்பது கூடென்று மணக்குடவரும், 'முட்டை' யென்று பரிமேலழகரும் கூறுகிறார்கள். இவற்றுள் ஒன்று பறவை வசித்தற்கும், ஒன்று உற்பத்திக்கும் இருப்பிடமானது. இவ்விரண்டினின்றும் பறவை வெளியேறுகிறது. இது 'புட்பறந்தற்றே' என்ன உவமை கூறினார்,

இவற்றுள் 'குடம்பை' யென்பது உடம்பிற்கும். 'புள்' ளென்பது உயிருக்கும் உவமையாயிற்று. முட்டையினின்று புள் பறந்துபோவதுபோல, உடம்பினின்று உயிர் பறந்து சென்றுவிடுகிறது. மற்றும் – 'உயிர்' என்னும் ஆன்மா பிறப்பை யடையும்போது, தந்தையின் உதரத்தில் இரண்டு மாதந்தங்கி, பின்பு தந்தையின்மூலம் தாயின் உதரத்திற் சேர்ந்து பத்துமாதந்தங்கி, கரசரணதி அவயவங்களோடு தானும் வளர்ந்து, உருப்பெற்றுப் பூமியிற்றேன்றி வினைவசத்தானுடலும் தானும் ஒன்றகவே வேற்றுமையின்றி வாழ்ந்து, வினைமுடிவில் தன்னை அருமையாகக் காப்பாற்றி வைத்திருந்த உடம்பை நீத்துவிட்டு உயிர் ஓடிவிடுவதை நேரில்கண்ட உண்மையாதலால், உயிருக்கும் உடம்பிற்கும் யாதொரு நட்பும் இல்லை. என்றனும், "இருவினைப் பாசக்கயிற்றின்வழி யாட்டுவிப்பானும் ஒருவனுண்டே தில்லையம்பலத்தே" என்ற பட்டினத்தார் வாக்குப்படி, இருவினையாகிய பாசத்தாற் கட்டுண்ட சீவர்கள், இறைவன் ஆணைப்படி இவ்வுடம்பில் நின்று இன்பதுன்பங்களை அனுபவிக்கக் காரணமாவதல்லது, சீவனுக்கு மாயா காரியமாகிய இவ்வுடம்பில் நிலைத்திருக்க வேண்டுமென்ற இயல்பாகிய நட்பு இல்லையென்பது புலனகிறது.

"முட்டையுந் தானுமாக முதலில்வந் துதித்தகுஞ்சும்
விட்டதைப் பறந்துசென்றல் மீண்டதைத் தேடாவாறே
கட்டையுந் தானுமாகக் கலந்துவந் துதித்தசீவன்
ஒட்டுடல் கிடக்கப்பேசா தோடுதல் மோசந்தானே!"

என்ற சிவானுபூதிவிளக்கச் செய்யுளாலும் அறியலாம்.

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:-
கீ: 2- 22-

வாஸாம்ஸி ஜீர்ணனி யதாவிஹாய
நவானிக் ருஹ்ணுதி நரோऽபராணி
ததாசரீராணி விஹாய ஜீர்ணன்
யன்யானி ஸம்யாதி நவானிதேஹீ.

பொருள்:- மனிதன் எவ்வாறு நைந்துபோன துணிகளை எறிந்துவிட்டு வேறு புதியவற்றை எடுத்துக்கொள்கிருனே, அவ்வாறு உடலில் உறைபவனுகிய சீவன், நைந்து போன உடலங்களை விட்டுவிட்டு வேறு புதிய உடம்பை அடைகிருன்.

மனிதன் புதிய துணி கிடைப்பதற்கு முன்பு, பழைய துணியை எறிவதில்லை. ஆனுல், புதியது கிடைத்தவுடன் பழயதை எறிந்துவிடுகிருன். அதுபோல, ஆத்மா ஒரு சரீரத்தை விடுவதற்கு முன்பே வேருெருசரீரத்தை சூட்சுமமாகச் செய்துகொள்கிறது. அது, 'காரண சரீரம்' என்று சொல்லப்படுகிறது. அது நெடுநாள் தோன்ருதிருந்து பின்பு பிறக்கின்றது. தூல உடல் எடுப்பதை, நாம் 'பிறப்பு' என்கிருேம். —சு. சித்பவாநந்தா.

339. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

(பொ-ள்:) ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம் வருதலோடொக்கும். அதன் பின்பு, பிறப்பு வருதல் உறங்கி விழித்தலோ டொக்கும். உறங்குதலும் விழித்தலும் உயிர்கட்கு இயல்பாய்க் கடிதின் மாறிமாறி வருதல் போன்று, சாக்காடும் பிறப்பும் கடிதின் மாறி மாறி வரும் என்பது கருத்து. நிலையாமையே நிலைபெற்றவா றறிவித்ததற்குப் பிறப்பும் உடன் கூறப்பட்டது.

—பரிமேலழகர்.

(வி-ரை:) மாந்தர்கட்குண்டாகும் தவிர்க்க முடியாத இறப்புக்கும், பிறப்புக்கும், பல புலவர்களால் பலவிதமான உபமானங்கள் காட்டப்படுகின்றன. அவ்வாறே அதன் காரணத்தையும் பல சமயத்தவரால், பல வேறுபாடுகளுடன் கூறுகிறார்கள். அவ்வாறு கூறும் காரணங்களும், ஒன்றுக் கொன்று முரண்பாடாகவே தோன்றுகின்றன. இவற்றுள் 'எது உண்மை, எது உண்மையல்ல' வென்று அறிய முடியாதபடி ஐயப்பாட்டிற்கே இடமளிக்கின்றன.

அவ்வாறு மக்களின் அறிவிற்கு எட்டாததாயினும், பிறப்பு இறப்புக்களாகிய தொழில்கள் இறைவன் ஆணைப் படி உலகில் ஓயாது நடந்துகொண்டுதான் வருகின்றன.

இது, "பெரு நோய்கள் மிக நலியப் பெயர்த்தும் செத்தும் பிறப்பதே தொழிலாகி இறக்கின்றாரே" என அப்பரடிகளும் சான்று கூறினர்.

இவ்வாறு நடைபெற்றுவரும், 'பிறப்பு, இறப்பு' என்ற தொழில்களானது, இரண்டு முக்கியமான பொருட்களின் கூட்டுறவால் நடைபெறுகின்றன என்பது நம் சமய நூலின் துணிபு ஆகும். ஒன்று, ஐம்பூத விகாரப்பாடான உடம்பாகும், மற்றொன்று, சைதன்யமான உயிராகும்.

இதில், உடம்புதான் பிறப்பிறப்புக்களை அடைந்து வருகிறதென்றும், இவ்வுடம்பில் தங்கிய உயிர், இறவாமல் நித்தியமாய், சாட்சிமாத்திரமாய் நின்று, உடம்பு அழிந்தபின் அதைவிடுத்து நீங்குவதும், வேறு உடலங்களை அடைவதுமான தொழிலை நடாத்தி வருகின்றதென்பதுவும், நம் சமய நூல்களெல்லாம் ஒரு படித்தாகவே ஒப்புகின்றன வென்பதூஉம், நூலாராய்ச்சியுள்ளார் அறிந்த உண்மையாகும். மற்றும், உடம்பு தோன்றி நின்று அழிந்து மண்ணாவதை நாம் நேரிற் கண்ட காட்சியாகும். இதற்கு வேறு பிரமாணம் வேண்டுவதில்லை. ஆகில், உயிரைப்பற்றிய ஆராய்ச்சியானது ஆழ்ந்து சிந்திப்பதற்கும், நூற் பிரமாணத்திற்கும் எட்டாத நிலைமைத்தாய் மக்களின் மனதை மயக்கத்தை யடையும்படி செய்விக்கின்றது.

மற்றும், நம் சமய நூல்களில் 'உலகம், உயிர், கடவுள்' என்ற முப்பொருளின் ஆராய்ச்சியை பலவிதமாக நிச்சயிக்கிறார்கள். என்றாலும், 'உடல், உயிர்' என்ற இவற்றின் தன்மைகளை அறியவேண்டியது முக்கியமாதலின், அம் முயற்சியில் மக்கள் மிகுதியும் அவாவுறுகின்றனர். இவ்வுடல் உயிரின் பாகுபாடுகளைக் கீதை 13-வது அத்தியாயத்தில் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமான மூன்று வியாக்கியக் கர்த்தர்களும் வெவ்வேறு பொருள்பட நிச்சயம் கூறுகிறார்கள்.

உயிரின் இயல்பை, ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள், "சச்சிதாநந்தப்பிரம்மமே எல்லா உடம்புகளிலும், சீவான்மாவாக, வசிக்கிறார் எனவும் உண்மையுணராத அஞ்ஞான நிலையில் சீவனாகவும், மெய்யுணர்வு அடைந்த ஞான நிலையில் கடவுளாகவும் விளங்கும்" எனக் கூறுகிறார். ஸ்ரீ ராமானுசாச்சாரியார், "சீவன் கடவுள் அல்லவென்றும், கடவுளின் அங்கமாக உள்ளது – அது – கடவுட்பக்தியால் பந்தநீக்கம் பெற்று கடவுளின் தன்மையடையும் சுபாவமுடையது" எனக் கூறுகிறார். ஸ்ரீ மத்துவாச்சாரியார், "உயிர், கடவுளும் அல்ல; கடவுளுக்கு அங்கமும் அல்ல; அது வேறாகிய தனித்த பொருள் எனவும், அது கடவுளின் அருள்பெற்று சுகத்தையடையும் சுபாவமுடையது" எனக் கூறுகிறார். ஆதலால், கடவுளைப்பற்றியோ? கடவுளின் ஆற்றல் வாய்ந்த 'அத்யாத்மம்' என்ற சீவான்மாவைப் பற்றியோ, மக்களின் மனம், மொழிகள்சென்று அறியக்கூடியனவல்ல வென்பது நிச்சயமாகிறது. என்றாலும், உயிரைப்பற்றிய ஆராய்ச்சியானது, இன்றும் என்றும் உலகில் நடந்துகொண்டே வருகின்றன என்பது, நாம் கண்டறிந்த அனுபவமாகும்.

இது பூர்வகாலத்தும் 'உத்தாலகன்' என்ற இருடியின் புதல்வனாகிய 'நாசிகேது' என்ற சிறுவனால், 'மனிதன் இறந்தபின் உயிர் உண்டா? இல்லையா?' என்றவினா எழுந்துள்ளது! இக்கேள்விக்கு எமதர்மனால் தக்க சான்றுகளுடன் கூறப்பட்டுள்ள விடைகளானது, "கடோபநிடதம்" என்ற வேதாந்த நூலாக அமைந்துள்ளது. அதில், "உயிரானது

பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை, தோன்றுவதும் இல்லை, அழிவதும் இல்லை. முன்பு இல்லாமலிருந்து இப்போது உண்டாவதில்லை. இனி எப்போதும் இல்லாமற் போவதும் இல்லை. அது என்றும் அழியாமல் – நித்தியமாய் —இவ்வுடம்புகள் அழிந்தாலும் உயிர் என்றும் அழிவதில்லை" என்ற உயிரின் இயல்பையும், நம் சமயத்தையும் விளக்கிக் கூறுகிறது.

அன்றியும் தெய்வப்புலவர்கூறிய உபமானத்தை விளக்கியே, "மணிமேகலை" என்ற நூலிலும், "பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிழைத்தலும் உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்" என்று இக்குறளை அனுவதித்துக் கூறப்பட்டுள்ளது.

மற்றும், கல்வியிற் பெரியோனாகிய கம்பரும், தமது கற்பனு நயத்தால், மேற்குறித்த உபமானமாக ஒரு கவியைக் கங்கைப் படலத்தில் சித்தரித்துக் காட்டுகிறார் :-

"துறக்கமே முதலவாய தூயனயாவை யேனும்
மறக்குமா நினையலம்மாவரம்பில தோற்று மாக்கள்
இறக்குமா றிதுவென்பான்போன் முன்னை நாளிறந்தான் [பின்னுட்
பிறக்குமா றிதுவென்பான் போற்பிறந்தனன் பிறவா [வெய்யோன்."

(பொருள்:) வரம்பில தோற்று மாக்கள்-எல்லையில்லாத பிறப்பு இறப்புக்களில் சிக்கி உழலுகின்ற பகுத்தறிவின்றிய விலங்கையொத்த மனிதர்கள், துறக்கம் முதலிய போக பூமிகளையும், தூயனவாகிய வைகுண்ட கைலாயமாதிய முத்தி உலகங்களையும் மறந்து விடுகிறார்களே! இது வியப்பல்லவா? அவ்வாறுள்ள நல்ல பதவிகளை அடைய முயலாமல், அற்பமான-பிறந்து நசிக்கின்ற மலவுடலின் இன்பத்தையே பெரிதென விரும்புகின்ற அஞ்ஞானிகள் இறப்பிற்கு உவமை காட்டுவான் போன்று, 'கதிரவன் முன்னை நாள் மேற்கில் மறைந்தான்' – பின்பு அவர்களின் பிறப்பிற்குவமை காட்டுவான் போன்று, 'மறுநாட் காலையில் கிழக்கில் உதயமானன்' என்பது பொருளாயிற்று.

இது, மாயையிற் சிக்குண்டு, கன்ம முதலிய மும்மலங்களிற் கட்டுண்ட அஞ்ஞானிகளின் இறப்பிற்கும், பிறப்பிற்கும், கதிரவனின் அத்தமனத்தையும், உதயத்தையும் உவமையாக விளக்கிக் காட்டினார்.

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:-

கீ: 2- 27-

ஜாதஸ்யஹி த்ருவோ ம்ருத்யுர் த்ருவம் ஜன்ம ம்ருதஸ்யச
தஸ்மாத பரிஹார்யேSர்த்தே ந த்வம் சோசிதுமர்ஹஸி

பொருள்:- பிறந்தவனுக்கு 'சாவு' நிச்சயமன்றோ? இறந்தவனுக்கு 'பிறப்பு' நிச்சயம். ஆகையால், பரிகாரமின்றிய தவிர்க்கமுடியாத விஷயத்தில் நீ துக்கிப்பதற்கு உரியவனல்ல. ஆசை இருக்கும் பரியந்தம், பிறப்பதும் இறப்பதும் இயல்பு. வினையின்படி வருகிற சாவைத்தடுக்க யாருக்கும் இயலாது.

நாஸ்திகரின் கோட்பாட்டின்படி, வினையிருக்கும் பரியந்தம் பிறப்பு இறப்பு இருக்கிறது. வினை முடிவது, தீபத்தில் எண்ணெய் முடிவதுபோன்றது. எரிகின்ற தீபம் பிறகு ஒன்றுமில்லாது போய்விடுகிறது. அதே பாங்கில், வினை முடிந்ததும் 'மனிதன்' என்னும் தோற்றம் கலைந்து போய்விடுகிறது. நவீன நாஸ்திகர்களுக்கிடையில் இன்னொரு கோட்பாடு உண்டு. களிமண்ணில் வடிவம் செய்து உருமாற்றுவதுபோன்று, பிரகிருதியில் 'உயிர்கள்' என்ற வடிவங்கள் மாறிமாறி அமைகின்றன. அச்செயல் 'பிறப்பு, இறப்பு' என்னும் பெயர் பெறுகிறது. 'அதற்கு ஏன் வருந்தவேண்டும்?' என்பது கேள்வி. —சு. சித்பவாநந்தர்.

341 யாதனின் யாதனின் நீங்கியா னோதல்
அதனின் அதனின் இலன்.

(பொ-ள்): ஒருவன் யாதொரு பொருளின் யாதொரு பொருளின் நீங்கினான், அவன் அப்பொருளான் அப்பொருளான் வரும் துன்பத்தை அடைவதில்லை. —பரிமேலழகர்.

(வி-ரை): துன்பத்தினின்றும் நீங்கி விடுதலைபெற விரும்பும் மெய்யறிவுடையார், தம்மைப்பற்றியுள்ள ஐம்புல வேட்கையாலாகிய பல பற்றுக்களையும் ஒவ்வொன்ருக விடுத்து, பின்பு இன்ப வாழ்வு பெறும் உபாயத்தை இப் பாவால் தெய்வப்புலவர் விளக்குகிருர். இம்முடிவை இவ்வத்தியாயம் ஒன்பதாவது குறளில் "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" எனத் தெய்வப் புலவரும், "அற்றது பற் றெனில் உற்றது வீடு" என நம்மாழ்வாரும் கூறியவாற்ருல் அறியலாம்.

அன்றியும், மக்களின் ஆயுட் பிரமாணமானது; 'நூறு வயது' என்று நூற்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன. அவற்றுள்'

"வேதநூற்பிராயம்நூறுமனிதர் தாம்புகுவரேனும்
பாதியு முறங்கிப்போகும் நின்றதிற்பதினையாண்டு
பேதை பாலகனதாகும் பிணிபசி மூப்புத்துன்பம்
ஆதலாற் பிறவிவேண்டேன் அரங்கமா நகருளானே"

எனப் பிரபந்தத்திலும்,

"மனிதர்க்கு வயது நூறல்லதில்லை
ஐம்பதிரவில் அகலுந்துயிலினல்
ஒட்டிய இளமையில் ஒரைந்துநீங்கும்
ஆக்கை இளமையில் ஐமூன்றுநீங்கும்
எழுபதுபோக நீக்கிருப்பன முப்பதே"

எனக் கபிலருங் கூறுவதால், மக்களின் வயது நூருக இருந்தும் துயில்வதிலும், பாலப் பருவத்திலும், இளமைப் பருவத்திலும் சென்றதுபோக மீதி முப்பதுவருடமேயாகும். இம்முப்பது வருடத்திற்குள் தமக்கு வேண்டிய இம்மை மறுமைகட்காகிய நற்காரியங்களைப் பற்றின்றிச் செய்து கொள்வதுடன் மனதைப்பற்றியுள்ள விடயப் பற்றுக்களை ஒவ்வொன்ருக விட்டுவிடுதலே மெய்யறிவுபெற விரும்பும் அறிஞர்களின் கடமை என்பதை, "யாதனின் யாதனின் நீங்கியான்" எனவும், அவ்வாறு விடயப்பற்றுக்கள் நீங்கிய

வளவுக்கு உலகத் தொல்லைகள் நீங்கி மனோசாந்தி யுண்டாகு மென்பதை "நோதல் அதனின் அதனின் இலன்" என்றுங் கூறினரென்ப.

இக்கொள்கைகளையும் மானிடப்பிறவியின் அருமையை யும் மறந்து, தாங்கள் பலநூறு வருடங்கள் வாழ்வதாக எண்ணி, தங்களுக்குக் கிட்டாத பொருட்களின்மீது பேராசை கொண்டு "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் எண்பது கோடி நினைந்தெண்ணுவன" என்ற பாவுக் கிணங்க, பல எண்ணங்களால் பல துன்பத்திலழுந்தி மனோ வேதனைப்பட்டு வருந்தியுழைத்தாலும் "ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட் டொன்றாகும் அது எனையாளும் ஈசன் செயல்" என்றபடி, தானொன்றுநினைக்கத் தெய்வச்செயல் வேறொன்றாக நிகழ்ந்துவிடுகிறது. இது ஒவ்வொருவரும் அனுபவத்தில் கண்டறிந்த உண்மையாவதால், தமக்குக் கிடைத்த உரிமையான பொருளில் மகிழ்ச்சியுற்று - மன வமைதியுடன் வாழ்பவன் வாழ்வே 'பேரின்ப மார்க்கத் திற்கு உற்ற நற்றுணை செய்யும்' என்பது இக்குறட்பாவின் பொருளாகின்றது.

இனி கீதையிலுள்ள இரு சுலோகங்கள் வருமாறு:-

கீ: 5—21 :-

பாஹ்யஸ்பர்சேஷ்வஸக்தாத்மா விந்தத்யாத்மநியத்சுகம்
ஸப்ரஹ்மயோக யுக்தாத்மாசுகமக்ஷய்ய மச்னுதே

கீ: 5—22.

யேஹிஸம்ஸ்பர்சஜாபோகாதுஃகயோனயஏவதே
ஆத்யந்தவந்த:கௌந்தேய நதேஷுரமதேபுத:

(பொருள்) வெளிப் பொருள்களில் உணர்ச்சியில்லாத அந்தக்கரணமுடையவன், ஆத்மாவினிடத்தில் எந்த சுகம் உண்டோ அதை அடைகிறான். பிரமத்தினிடத்தில் கூடி நிற்கும் அந்தக்கரணமுடைய அவன், அழிவில்லாத இன் பத்தை அனுபவிக்கிறான்.

குந்தியின் மகனே! எந்த போகங்கள் வெளிப் பொருள் களின் ஸ்பரிசத்தால் உண்டானவையோ, அவை துன்பத் திற்குப் பிறப்பிடமாயுள்ளவைகளே - ஆரம்பமும் முடிவும் உள்ளவைகளே - அறிவாளி அவைகளில் களிப்புறமாட் டான்.

அன்றியும் பிரமத்தில் நிலைத்திருப்பவன் புலன்களால் நுகருவனவாகிய சப்தாதி விடயங்களிலே வரும் சிற்றின்ப சுகங்களை விரும்பாதவனாய், பேரின்பமாகிய ஆத்மாவில் உண்டாகும் நித்ய சுகத்தையே பெறுகிறான். ஆத்ம சுகத்தை விரும்புபவன் கணப்பொழுது மாத்திரம் நின்று பின்பு நீங்கி விடுவதாகிய புலநுகர்ச்சியாலாகும் அற்ப சுகங்களை விரும் பாமல், அழிவில்லாத பேரின்ப சுகத்தையே அனுப விக்கிறான். மேலும், புலன்களுக்குரிய விடய சுகங்கள் சேரும்போது இன்பமும் நீங்கும்போது துன்பத்தையும் உண்டாக்குவனவாதலால், விடய சுகங்கள் முடிவில் துக் கத்தையே விளைவிக்கின்றன. தத்துவத்தையுணர்ந்த விவே கிகள் அற்ப சுகங்களில் பற்றடைவதில்லை. ஆடுமாடுகள் போன்ற அவிவேகிகளுக்கே அதில் இன்பம் தோன்று கிறது. —சங்கரபாஷ்யச் சுருக்கம்.

343 அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டியவெல்லா மொருங்கு

(பொ-ள்): வீடெய்துவார்க்குச் செவி முதலிய ஐம் பொறிகட் குரியனவாகிய ஓசை முதலிய ஐம்புலன்களையும் கெடுத்தல்வேண்டும். கெடுக்குங்கால் அவற்றை நுகர்தற் பொருட்டு தாம் படைத்த பொருண் முழுவதையும் ஒருங்கே விடுதல் நல்லது.

புலம் என்றது அவற்றை நுகர்தலை. அது மனத்தைத் துன்பத்தானும் பாவத்தானும் வாராத பொருள்கண்மீதும் செல்லுவதன்றி வீட்டு நெறியாகிய யோக ஞானங்களிற் செலுத்தாமையின், அதனை "அடல் வேண்டு" மென்றும், அது அப்பொருள்கள் மேற்செல்லின், விறகு பெற்ற தழல்

போல் முறுகுவதல்லது அடப்படாமையின் "வேண்டிய வெல்லா மொருங்கு விடல்வேண்டு" மென்றுங் கூறினர்.
—பரிமேலழகர்.

(வி-ரை): உலகில் தோற்றமான எறும்புமுதல் யானை ஈறுகவுள்ள ஒவ்வொரு சீவவர்க்கமும் தம் தம் துக்கம் நீங்கவும், சுகத்தைப் பெறுவதற்கும் ஓயாது முயன்று கொண்டே உயிர் வாழுகின்றன.

ஆயின், பகுத்தறிவு பெற்ற மனிதப் பிறவியினர்களுக்குண்டாகும் இவ்வுலக சுகங்களும், ஒன்றுக்கொன்று உயர்வாகவே அமைந்துள்ளன. அவைகள் வரிசைக்கிரமமாக முதலில், 'தேக சுகம், இந்திரிய சுகம், மனோசுகம், புத்தி சுகம், ஆத்ம சுகம்' என்பனவாகும். இவைகள் ஒன்றுக்கொன்று அதிக உயர்வானவை. இதனை "இந்த்ரியாணி பராண்யாஹு" என்ற கீதை 3 – 42 வது சுலோகம் விளக்கிக் காட்டுகிறது.

இவற்றுள், உலக சுகங்களெல்லாம் ஐம்புல நுகர்ச்சியுள் அடக்கம். ஐம்புலனும் மனதிலடக்கம். மனமும் விஞ்ஞானமயமாகிய புத்தியிலடக்கம். புத்தியும் உலக விஞ்ஞானத்தோடு நின்றுவிடுகிறது. அதற்கு மேலுள்ள ஆத்மானுபவத்திற்கு விஞ்ஞான அறிவு பயன்படுவதில்லை. உலக சுகங்களையெல்லாம் அறிந்து அதற்கு மேலாக உள்ள 'ஆத்ம சுகமே எல்லாவற்றிலும் உயர்ந்த சுகம்' என்பது பொருள். ஆகில், மக்களின் அறிவானது ஐம்புல நுகர்ச்சியோடு நின்று விடுவதில்லை; உலக சுக துக்கங்களில் அழுந்தி சலிப்படைந்த பக்குவிகளின் மனது, அதற்குமேலுள்ள ஆத்ம சுகமாகிய பேரின்ப வாழ்க்கையை விரும்புகிறது. அது உலக வாழ்வுக்கு மேற்பட்ட தெய்வீக அனுபவமாகும். அதில் மனம் இலயித்தவர்களுக்கு உலகப் பற்றுக்கள் தேய்ந்து ஒடுங்கிவிடுகின்றன.

இந்நிலைமையை அடைவதற்கு நூலறிவு, குருவருள், தெய்வ அருள் முதலிய துணைக் காரணங்கள் வேண்டும். இவ்வருள்கள் வாய்ப்பினும், தனது மனவருளும் முக்கிய

மாக அமையவேண்டும். தனது மனவருள் உண்டாகப் பெற்றவன் மற்ற சாதனங்களால் பலன் அடைகிறான். மனத்தை வசப்படுத்தாதவனால் யாதொரு காரிய சித்தியையும் அடைவதில்லை. ஐம்புலனை வென்ற தூய மனமுடையவனே முத்தி நெறிக்கு அதிகாரியாகிறான்.

அவ்வாறு முத்தி விருப்பமுள்ள அதிகாரிகளை, 'உத்தமன், மத்திமன், மந்தன்' என்று மூவகைப்படுத்தி வேதாந்த நூல்கள் கூறுகின்றன. அவர்களுள் உத்தம அதிகாரிகள் முத்தியில் விருப்பம் வந்தவுடனேயே, "சட்டி சுட்டது கை விட்டது" என்ற முறையில், உலக சுக போகங்களில் வெறுப்புற்று யோக ஞான சாதனங்களில் முயலுகின்றனர். இவர்கள் நூலறிவை விரும்புவதில்லை.

இனி கடையான மந்தாதிகாரிகளுக்கும் முத்தி விருப்பம் மனதில் சற்று இருப்பினும், பேரின்ப மார்க்கத்தில் முயலாமலும் உலக நடைமுறையில் செல்லுகின்ற மந்த புத்திகளுக்கும் நூலறிவு பயன்படுவதில்லை.

இனி, இடையிலுள்ள மத்திம அதிகாரிகளுக்கு 'பிறப்பின் பயனாகிய பேரின்பத்தை அடையவேண்டும்' என்ற அறிவும் தூண்டுகோலாக இருக்கிறது; ஐம்புலன்களாலாகிய உலக சுகத்தையும் விடமுடிவதில்லை. இவ்வாறு ஞானம் அஞ்ஞானம் ஆகிய ஒன்றினிடத்தும் நிலைபெறாமல் மனம் ஊசலாடிக்கொண்டிருக்கும் மத்திம அதிகாரிகளுக்குத்தான் நூலுபதேசம் பயன்படுகிறது. இது 'ஞானவாசிஷ்டம்' என்ற ஞானநூலின் கருத்தாகும். இவ்வித மத்திம அதிகாரிகளைக் குறித்து உபதேசிக்கும் நூலுபதேசங்கள் பலவாறாகவிருப்பினும், புலனடக்கமே ஞான அதிகாரிகளுக்கு முதற்சாதன மாவதால் "அடல்வேண்டும் ஐந்தன்புலத்தை" என தெய்வப்புலவர் விதிமுகத்தால் அறிவுரை கூறினார்.

அவ்வாறு விடயப் பற்றுக்களை ஒவ்வொன்றாக சாதகன் நீக்கிவிடுகின்ற சாதன காலத்திலும், தனக்கு

ஆதாரமான சில உரிமைப் பொருள்களைத் தனதாக வைத்திருப்பினும், அப்பொருள்களைப் பார்த்தவுடன் விட்ட பொருள்களின்மீது மனம் சென்று, முன் அனுபவித்த பழக்க வாசனையானது இவனை வலிய இழுத்துச் சென்று, விட்ட பற்றுக்களில் புகுத்திப் பேரின்ப வாழ்வுக்கு இடையூறு உண்டாக்குவதால் 'விடல்வேண்டும் வேண்டிய வெல்லா மொருங்கு" என்ற நியமத்தையும் உடன்கூறினர்.

இனி கீதையிலுள்ள இரு சுலோகங்கள் வருமாறு :-

கீ: 6—24:

ஸங்கல்பப்ரபவான்காமான்ஸ்த்யக்த்வா ஸர்வானசேஷத:
மனஸைவேந்த்ரியக்ராமம் விநியம்ய ஸமந்தத:

கீ: 6—25:

சனை: சனைருபரமேத் புத்த்யாத்ருதிக்ருஹீதயா
ஆத்மஸம்ஸ்த்தம்மன: க்ருத்வாநகிஞ்சிதபிசிந்தயேத்

(பொருள்): ஸங்கல்பத்தினின்று பிறக்கும் ஆசைகள் எல்லாவற்றையும் மிச்சமின்றி யொழித்து, மனத்தாலேயே எப்புறத்தும் இந்திரியங்களை ஓடவொட்டாமல் தடுத்து, தைரியத்துடன் கூடிய புத்தியால் மெல்ல மெல்ல சாந்தியைக் கூடவேண்டும். மனத்தை ஆத்மாவில் நிலைபெற்றதாய்ச் செய்து யாதொன்றையும் நினைக்கக்கூடாது.

மனதை ஆத்மாவினிடத்து நிலைக்கச் செய்வதற்கு முயலுகின்ற யோகியானவன் மற்றும் தெரிந்துகொள்ள வேண்டியதென்னவென்றால், மனம் நிலையற்று ஓடுவதற்குக் காரணம் ஐம்புலநுகர்ச்சியிலுள்ள ஆசையாகிய குற்றமேயாகும். இவற்றின் உண்மைகளை ஆராய்வதினாலும், வைராக்கியத்தைப் பாராட்டுவதினாலும் மனத்தை ஆத்மாவின் வசமாக்கவேண்டும். இவ்வாறுள்ள யோகப் பயிற்சியின் வலிமையினால், மனம் ஆத்மாவினிடத்திலேயே சாந்தமடைகிறது. (சங்கரர்)

346. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்

(பொ-ள்): தானல்லாதவுடம்பை யானென்றும், தன்னோடியைபில்லாத பொருளை எனதென்றுங்கருதி அவற்றின்கட் பற்றுச்செய்தற் கேதுவாகிய மயக்கத்தைக்கெடுப்பான் வானோர்க்கும் எய்தற்கரிய வீட்டுலகத்தை யெய்தும். இதனான் இவ்விருவகைப் பற்றையும் விட்டார்க்கே வீடுளதென்பது கூறப்பட்டது.

—(பரிமேலழகர்)

(வி-ரை): 'யான்' என்பது அகப்பற்று, 'எனது' என்பது புறப்பற்று. இவ்விரண்டும் மயக்கத்தால் உண்டானவை எனவும், இவற்றைக் கெடுத்தால் மனிதர்களுக்கு முத்தியின்பம் உண்டாகிறதெனவும் இப்பாவில் தெய்வப்புலவர் கூறினார்.

இனி இதன் பாகுபாடுகளைப் பகுத்தறிவது அறிவுடையோர்களின் முக்கியமான ஆராய்ச்சியாகும்.

எவ்வாறெனில், ஒருவன் உலகில் பல காரியங்களைச் செய்தே உயிர்வாழவேண்டியவனாகிறான். இது மக்களின் பொது இயல்பு. இதனை அகங்காரத்தால், "நான் செய்தேன்! நான் பலவான்! நான் அறிவில் மிகுந்தவன்! பல செல்வங்களைத் தேடினேன்! பலரை வென்றேன்!" என்று கூறுவதால் அபிமானத்தைக் கொண்டுவிடுகிறான். இது அறியாமையின் செயல்' என நூல்கள் கூறுகின்றன. இதனால், இவன் வாழ்நாள் முடிவில் இவன் கொண்ட அபிமானங்கள் யாவும் கனவாக மறைந்துவிடுகின்றன. ஆகில் இவன் செய்துள்ள பாவ புண்ணியங்கள் மட்டும் இவனைத் தொடருகின்றன. இதையே, "பற்றித்தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே" என பட்டிணத்தடிகள் சான்று கூறினார்.

ஆதலால், ஒருவனுக்குக் கர்மானுசாரத்திற்குத் தக்க வாறுகவே உலகப் பொருள்கள் வந்து சேருகின்றன. இது:

"புண்ணியமாம் பாவம் போம் போனநாட் செய்தவை
மண்ணிற் பிறந்தார்க்கு வாய்த்த பொருள்"

என்ற பாவின்படி, முன் செய்துள்ள புண்ணிய வினைப் பயனுல் ஒருவனுக்குப் பல பொருள்கள் தானே வந்து குவிகின்றன. பாவ வினைப்பயனுல் முன்னோர்கள் தேடி வைத்த பொருளும் இவனைவிட்டுப் பறந்து சென்றுவிடு கின்றன. இவ்வுண்மையையறியாமல் "இது என்னுடை யது, அதுவும் என்னுடையது!" என்ற மமதையால் தன்னைப் பறிகொடுத்து விடுபவன் வாழ்நாள் முடிவில், இவனது பொருள்களெல்லாம் இவனுக்கு யாதொரு உதவி யும் புரியாமல் நீங்கிவிடுவதால், இவன் தனிமையில் செல்ல வேண்டியவனுகிருன். இதனை "காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே" எனவும் பட்டிணத்தடிகள் அறி வுரை கூறினர்.

இவ்விதமாகிய 'யான் எனது' என்ற இருவிதப் பற் றுக்கள் நீங்கி பேரின்பவாழ்வு பெறுவதற்காகவே பல நூல்களிலும் அறிவுரைகள் கூறப்படுகின்றன. அவை

"மேதை தொக்கத்தியாதி மேவிய கூட்டமான
ஏதமாந்தேக நானென்றெண்ணுவன் மூடனுனோன்"

என 'விவேக சூடாமணி'யிலும்,

"பிரிவதெப்படி யென்றக்கால் பிணமாகுமுடல்
நானென்னும் அறிவினைக் கொல்லவேண்டும்"

எனக் கைவல்யத்திலும்,

"அறிகின்ற பொருளென்றும் அறிவானில் வேறேயானல்
இவ்வூனுகை நானென்னலாமோ,
செறிகின்ற புள்ளல்லவே கூடிவ்வகையே சேடமானவுடல்,
நின்னில் வெறென்று தெளியே"

என்ற "சசிவன்ன போதமும்" சான்றுகின்றன. இவைபோன்று இன்னும் பல உபமானங்களாலும், இம் மல வுடம்பினின்றும் பரிசுத்த ஆன்ம தத்துவத்தை வேறு படுத்தி நற்கதியடையும் மார்க்கத்தைக் காட்டுகின்றன.

மற்றும், நாம் காணும் உலகப் பொருட்களெல்லாம் முழுமுதற் பொருளாகிய இறைவனால் உண்டானவைகளே. அவைகள் அவ்விறைவனாகிய ஈசுவரனுக்கே சொந்தமாகும். நாமும் அவனுடைமையே ஆவோம். சீவர்களுக்கு யாதொரு சுதந்திரமும் இல்லை என்ற உண்மையை விளக்குவான்வேண்டியே, பல நூற்களில் விரித்துக்கூறிய பொருட்களையெல்லாஞ் சுருக்கி "யானெனதென்னும் செருக்கறுப் பான்வானோர்க் குயர்ந்தவுலகம் புகும்" என்ற ஈரடிகளால் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தார்.

இனி கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு :-

கீ: 2—71:

விஹாயகாமாந்ய: ஸர்வாந்புமாந்ச்சரதிநிஸ்ப்ருஹ:
நிர்மமோநிரஹங்கார: ஸசாந்திமதிகச்சதி

(பொருள்): எந்தப்புருஷன் எல்லா ஆசைகளையும் விட்டு பற்றில்லாதவனாய் 'நான் என்னுடையது' என்பதில்லாதவனாய் சஞ்சரிக்கின்றானோ அவன் சகல துன்பங்களினின்றும் விடுபட்டு முத்தியடைகிறான். எந்த பிரம்மானுபவத்தில் முயலும் மெய்யறிவு பெற்றவனாகிய மேலோன் அறிவுடையோரால் விலக்கப்பட்ட இழிந்த தொழில்களை முற்றும் விட்டொழித்தவனும், கல்வியுடைமை முதலியவற்றாலுண்டாகும் 'நான்' என்ற அகந்தையில்லாதவனும், செல்வமுடைமை முதலியவற்றாலுண்டாகும் 'எனது' என்ற மமதை யில்லாதவனும், ஞானம் நிலைத்த பிரம்மத்தையறிந்த அவன் சம்சார துன்பங்களினின்றும் விடுபடுதலாகிய சாந்தியால் முத்தியின்பத்தைப் பெறுகிறான். —சங்கரர்.

351: பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளானா மாணுப் பிறப்பு.

(பொ-ள்): மெய்ப் பொருளல்லாதவற்றை மெய்ப் பொருளென்றுணரும் விபரீத வுணர்வானே உளதாம்; இன்பமில்லாத பிறப்பு.

விபரீதவுணர்வாவது இருவினைப்பயனும், 'கடவுளு மில்லை' யெனவும் மற்றுமித் தன்மையெனவுஞ் சொல்லும் மயக்கநூல் வழக்குகளை 'மெய்நூல் வழக்'கெனத் துணிதல். 'மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை' என்பன ஒரு பொருட் சொற்கள். 'நரகர், விலங்கு, மக்கள், தேவ' ரென்னும் நால்வகை பிறப்பினுந் துன்பமேயாகலின், 'மாணாப் பிறப்'பென்றார் பிறப்பு துன்பமென்பதூஉம், அதற்கு முதற்காரணம் 'அவிச்சை' என்பதூஉம் கூறப் பட்டன. —பரிமேலழகர்.

(வி·ரை): இக்குறட்பாவில் தெய்வப்புலவர், மக்கட்கு உண்டாகிய இவ்வுலக வாழ்க்கையைப் பொய்ப்பொருளால் ஆகியதெனவும், பொய்ப்பொருளைப் 'பொய்'யென்றுணராமல் பொய்ப் பொருளையே அறியாமையால் மெய்ப் பொருளென்றுணர்ந்த விபரீதவுணர்வால், 'துன்பமயமான பெருமையில்லாத பிறப்பு உண்டாகிறது' என பிறப்புண் டாகும் விதத்தைச் சுருக்கமாகக் கூறினாரேனும், இது 'வேதாந்த தத்துவத்தின் விரிவான உண்மைக் கருத்துக்களை யெல்லாந் தன்னுள்ளடக்கிக் கொண்டுள்ள சிறந்த ஆத்ம விசாரம்' என்னும் ஓர் உபதேச வாக்கியமாகும் என்பது புலனாகிறது.

மற்றும், 'மருளான் ஆம்மாணாப்பிறப்பு' என்ற வாக்கியத்தின் உட்கருத்தாவது, எப்போது மக்கள் மயக்கம் நீங்கி மெய்யறிவு பெற்று 'மெய்ப்பொருளாகிய ஈசுவர தத்துவமே இவ்வனைத் துருவமுமாம்' என்ற நிச்சய புத்தியில் நிலைத்து நின்று ஞானசித்தி பெறுகிறார்களோ, அப்பொழுதே சீவன்

முத்திப்பதம் பெற்று இத்தேகம் நீங்கினவுடன் முத்தியின் பத்தை யடைகிறார்கள் என்ற உண்மை, மேற்கூறியுள்ள வாக்கியத்தின் எதிர்மறைப் பொருளால் விளக்கமாகிறது.

ஆகவே, மாயாகாரியமான உலக மயக்கத்தால் என்றும் அழியாத மெய்ப்பொருளாகிய ஈசுவர தத்துவம் மறைந்து, மெய்ப்பொருளாகிய பொய்யறிவு மேலோங்கி, பொய்யை மெய்யென்றும், மெய்யைப் பொய்யென்றும் உணர்ந்த விபரீதத்தால், 'துன்பமயமான பிறப்பு இறப்புக்களில் சிக்குண்டு மக்கள் வருந்துகின்றனர்' என்றும், அப்பிறவிப் பிணியினின்றும் நீங்கிப் பேரின்ப வாழ்வைப் பெறுவதற்காகவே, 'மெய்யுணர்தல்' என்ற ஞானபாகமாகிய இவ்வதிகாரத்தை தெய்வப்புலவர் வகுத்தோதினர் என்பதும் புலனாகிறது.

மற்றும், இவ்வுண்மைப் பொருளைப் பல உபநிடதங்களிலும் தத்துவதர்சிகளின் வாக்குகளும் வலியுறுத்துகின்றன.

அவை: "உலகப் பொய்வாழ்க்கை உடலையோம்பற்க" எனப் பட்டினத்தடிகளும், "ஊனக்கண்பாசம் உணராப் பதியை ஞானக்கண்ணினில் சிந்தை நாடி உராத்துணைத் தேர்த்து எனப் பாசம் ஒருவ" என மெய்கண்டதேவர் சிவஞானபோதத்தும், "அலங்கிலிற்றேன்றும் பொய்மையரவெனப் பூதமைந்தும், விலங்கிய விகாரப்பாட்டின் வேறுபாடுற்ற வீக்கம்" எனக் கம்பநாடரும் இவைபோன்ற இன்னும் பல சான்றுகளும், பலநூல்களில் விரிந்து காணக் கிடக்கின்றன.

ஆகில், அவ்வாறு பொய்ப்பொருளை மெய்ப்பொருளென்றுணர்வதற்குக் காரணமான பாச அறிவான அஞ்ஞானமும், ஒன்றை மற்றொன்றாகப் பாவிக்கும் மாறுபாடான தோற்றத்திற்குக் காரணமான விபரீதமும், 'இதுவோ! மற்று அதுவோ!' வென மயக்குதற்கேதுவான ஐயப்

பாட்டையும், நூற்பிரமாணத்தாலும் அனுபவ ஞானிகளின் உபதேச வாக்கியத்தினாலும் தன் அனுபவ ஞானத்தாலும் கண்டுணர்ந்து, பிறவித் துன்பத்தை நீக்கவல்லதாகிய மெய்ப் பொருளை அடைந்து பேரின்ப வாழ்வைப் பெறவேண்டியது, பகுத்தறிவுபெற்ற மேலோர்களின் கடமையாகுமென்பது, தெய்வத் திருவள்ளுவரின் உள்ளக்கிடக்கையினின்றெழுந்த இக்குறட்பாவின் 'புதைபொருள்' என்பது விளக்கமாகிறது.

இவற்றின் — பொய், மெய்களின் கூறுபாடாவன, 'பொய்ப்பொருள்' என்பது 'அறிவின்றிய சடம்' என்றும், 'மெய்ப்பொருள்' என்பது 'அறிவுவடிவான சித்து' என்றும்; சடப்பொருளை மாயாதத்துவமெனவும் சித்துப் பொருளை ஈசுவர சைதன்யமெனவும் கூறுவதுண்டு. மேற்கூறிய சடமும், சித்தும் கூடிய கூட்டுறவாலேயே இவ்வுலகமும்; உலகிலுண்டான சீவபேதங்களும் உண்டாயினவென்பது கீதை 13–26–சுலோகத்தின் கருத்தாகும். இதை – சடப் பொருளை மூலப்பகுதியெனவும், சித்துப்பொருளை புருடனென்றும் உரைகண்டுள்ளார். —பரிமேலழகர்.

இவ்வாறுள்ள 'பொய், மெய்; (மாய தத்துவம், ஈசுவர தத்துவம்)' என்ற இவ்விரண்டின் கூறுபாட்டைப் பிரித்து அறிகின்ற அறிவையே மெய்யுணர்வென்றும், தத்துவ ஞான மென்றும், ஆன்ம விசாரமென்றும், இதை உணர்ந்தபின், 'இதற்குமேல் அறியவேண்டிய ஆராய்ச்சி உலகில் யாதொன்றும் இல்லை'யென்றும், இவ்வாராய்ச்சியுடையவனே 'மக்கட்பிறவியில் மேலானவன்' என்றும், 'மகாத்மன்' என்றும் நூல்களில் புகழ்ந்து கூறும் உண்மைகளையே, தெய்வப் புலவர் 'மெய்யுணர்தல்' என்ற அதிகாரத்துள்ள பத்துக் குறட்பாக்களிலும் விளக்கியருளினர்.

இனி கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:—

கீ: 2 – 16—

நாஸதோவித்யதே பாவோ நாபாவோவித்யதே ஸத:
உபயோரபி த்ருஷ்டோ ந்தஸ்த் வனயோஸ்த த்வதர்சிபி:

(பொ-ள்): இல்லாப் பொருளுக்கு இருப்பு உண்டாகாது. உண்மைப் பொருளுக்கு இன்மையும் உண்டாகாது. இவ்விரண்டினுடைய முடிவான கருத்து உண்மையுணர்ந்த ஞானிகளால் கண்டுவைக்கப்பட்டுள்ளது.

உலக நடைமுறையில் மெய்ப்பொருளைப்பற்றி நிற்கும் புத்தி 'ஸத்புத்தி' யெனவும், பொய்ப்பொருளைப்பற்றி நிற்கும் புத்தி 'அஸத்புத்தி' யெனவும் ஆகிய இருவித புத்திகள் மக்களிடத்து உள்ளனவாகுமெனவும், அவற்றுள் ஆத்மாவைப் பற்றிநிற்கும் மெய்ப்புத்தியானது எப்போதும் நிலை மாறுபடாமல் உள்ளது எனவும், பொய்ப்பொருளைப் பற்றியுள்ள அஸத் புத்தியானது அடிக்கடி மாறுபடுவதால், அதற்கு நிலையான இருப்பு உண்டாகாது எனவுமாகிய ஆத்மா அநாத்மாக்களின் பேதங்களைத் தத்துவதர்சிகளான உண்மைஞானியர்கள் உணர்ந்துள்ளார்கள், நீயும் தத்துவதர்சிகளான ஞானியர்களின் கொள்கையைப் பின்பற்றி தீரத்துவத்தோடு சாந்தனாய் சுகதுக்கங்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்ற உபதேசம் இதன் கருத்தாகும்.

சங்கரபாஷ்யச் சுருக்கம்.

உடல் அசத்து, அழியுந்தன்மையது; ஆத்மா சத்து, அழியாதது. அழிவில்லாத ஆத்மாவின் தன்மையை அழியும் உடம்புமீது ஏற்றி, 'உடம்பே ஆத்மாவாகியதான்' என்று அபிமானிப்பதால், மாட்சிமையற்ற பிறப்பு உண்டாகிறது என்பது பொருள்.

**352. இருள்நீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.**

(பொ-ள்): அவிச்சையினீங்கி மெய்யுணர்வுடையராயினார்க்கு, அம்மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி வீட்டினைக் கொடுக்கும்.

மாசறு காட்சி யென்றது கேவல வுணர்வினை. இதனால் வீடாவது நிரதிசய வின்பமென்பதூஉம், அதற்கு நிமித்த காரணம் கேவலப் பொருளென்பதூங்கொள்க.

— பரிமேலழகர்.

(வி-ரை): எல்லாபா யல்லவுமாய் எப்பொருளுந் தானாய், எறும்பு முதல் பிரம்மபரியந்தமுள்ள அனைத்துருவங்களிலும் உடனாகியும் வேறாகியும் நின்று, 'படைத்தல், காத்தல், அழித்தல்' என்னும் முத்தொழில்களையும் நடாத்தும் உலக முதற்காரணப் பொருளான முழுமுதற்கடவுளை இரணியன் தன் ஆணவத்தால் 'இல்லை'யெனவும், கடவுள் நாமத்தை ஒருவரும் வாயினாற் சொல்லவும், வணங்கவும் கூடாதெனவும் கொடிய திட்டம் வகுத்ததுமன்றி, தானே எல்லாவல்லமையு முடையவனாதலால் 'தன்னையே எல்லோரும் பூசித்து வணங்க வேண்டு'மென்ற கொள்கையை ஒரு காலத்தில் நிலைநாட்டினான். அவனுக்கு உத்தம புத்திரனாகப் பிறந்த பிரகலாதன், இரணியன் கொள்கையை மறுத்து, 'கடவுள் எங்கும் வியாபித்துள்ளார்' என்ற உண்மையை,

"சாணிலு முளனோர் தன்மை யணுவினைச் சதகூறிட்ட
கோணிலு முளன்மா மேருக் குன்றிலு முளனின்னின்ற
தூணிலுமுளன் நீசொன்ன சொல்லிலு முளனித்தன்மை
காணுதி விரைவில்" என்ற உண்மையை விளக்கிக் காட்டினான். பின்பு, 'இரணியன் கடவுள் சோதனையாலேயே அவன் வாழ்நாளை முடித்துக்கொண்டான்' என்பது இரணியன் கதை வரலாறாகும். இவ்வாறு 'கடவுள், உண்டு, இல்லை' யென்ற வாதங்கள் உலகிற்குப் புதிதல்ல. 'இவ்வாதம் எப்போதும் உண்டு' என்ற உண்மை தெரியவருகிறது.

இவ்வாறுள்ள ஈஸ்வர தத்துவப்பொருளையே ஒவ்வொரு சமயத்தவரும் 'தாங்கள் தாங்கள் கொண்ட கொள்கையே தான் கடவுளுண்மை'யென வாதமிட்டும், அக்கொள்கையை நிலைநிறுத்தத் தங்களையே தியாகம்செய்தும் கொடிய போராட்டங்கள் நடந்துள்ளதாகவும் தேச சரித்திரங்கள் கூறுகின்றன. இதை 'சமயகோடிகளெலாம் தந்தெய்வ மெந்தெய்வ மென்றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது அப்பரம்பொருள் ஒன்றே'என்ற உண்மையைத் தாயுமானார் விளக்கியருளினார்.

மற்றும், கடவுளுண்மையை "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக்

காட்டொணாதே" என்ற மெய்யடியார்களின் வாக்குப்படி, மனோ வாக்குகளுக்கெட்டாத இறைவனது தோற்றமே நாம் காணும் அனைத்துருவங்களும் ஆகும் என்பதை, 'பிரமம் நித்தியம் சகத்துப்பொய்' என்ற உபநிடத வாக்கியமும் இதற்குச் சான்றாகிறது.

இவ்வாறுள்ள ஈசுவர சொரூபமே ஒவ்வொருடம்புகளிலும் 'நான், நான்' என்ற ஆன்ம தத்துவமாக நின்று திருவிளையாடல் புரிவதைத் தங்கள் சுவாநுபவத்தால் கண்டு களிக்கின்ற ஞான சீலர்களின் பெருமைதோன்ற, தெய்வப்புலவர் ' மருள்நீங்கி மாசறு காட்சியவர்" என்று கூறினார்.

அத்தகைய திடஞானமற்ற சீவான்மாக்கள், இருள் மயமாயுள்ள மல மூத்திரங்கள் நிறைந்த ஆபாசமான தாயின் கருப்பத்தில் அடிக்கடி வந்து புகுந்து அலைமோதிப் பிறந்திறந்துழல்வாராதல்பற்றி, அதை 'இருள்' என உருவகப்படுத்தி,அவ்விருள் நீங்கப்பெற்றவர்களே முத்திஇன்பத்தைப் பெறுகிறார்கள் என்ற பொருள்பட, "இருள்நீங்கி யின்பம் பயக்கும்" என்றுங்கூறினார். இதனை,

"படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்
கெடுமி தோர்யாக்கை யென்றெண்ணித் – தடுமாற்றம்
தீர்ப்பம்யா மென்றுணருந் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின்மேல்" என்ற நாலடியாரின் பாவும் இதற்குச் சான்றாகிறது.

இனி கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:—

கீ: 4—19 –

யஸ்ய ஸர்வே ஸமாரம்பா: காமஸங்கல்ப வர்ஜிதா:
ஜ்ஞாநாக்னி தக்தகர் மாணம் தமாஹு: பண்டிதர்புதா:

(பொருள்): எவனுடைய எல்லாக்கருமங்களும் ஆசையும் அதற்குக் காரணமான ஸங்கல்பங்களும் அற்றனவோ–

ஞானத்தீயில் பொசுங்கிய வினைகளையுடைய அவனை, அறி வாளிகள் 'பண்டிதன்' என்று கூறுகிறார்கள்.

பரிசுத்த ஞானத்தை அடைந்தவர்களால் செய்யப்படும் கருமங்களெல்லாம், ஆசைகளும் அவற்றிற்குக் காரணமான சங்கல்பங்களும் அற்ற வெறும் செய்கைகளாக சும்மா அநுஷ்டிக்கப்படுகின்றன. அவன் பிரவிருத்தி மார்க்கத்தில் இருப்பவனாயின், லோக சங்கரஹத்திற்காகவும், அல்லது அவன் நிவர்த்தி மார்க்கத்தில் இருப்பவனாயின், சீவிப்பதற்கு மாத்திரமாகவும் அக்கர்மங்களைச் செய்கிறான். எவனுடைய நல்வினை தீவினைகளெல்லாம் ஞானமென்னும் தீயினால் எரிக்கப்பட்டுள்ளனவோ, அவனை ஞானிகள் 'பிரம்ம வித்துக்களாகிய உண்மையான பண்டிதன்' என்று கூறுகிறார்கள்.

—சங்கரர்.

**353. ஐயத்தினீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.**

(பொ-ள்): ஐயத்தினின்றி நீங்கி மெய்யுணர்ந்தார்க்கு எய்தி நின்ற நிலவுலகத்தினும் எய்தக் கடவதாய வீட்டுலகம் நணித்தாதலுடைத்து.

ஐயமாவது பலதலையாய வுணர்வு. அஃதாவது மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் உளவோ இலவோ வென ஒன்றிற்றுணிவுபெறாது நிற்றல்; பேய்த்தேரோ, புனலோ, கயிறோ, அரவோவெனத் துணியாது நிற்பதும் அது. ஒருவாற்றார் பிறர் மதங் களைந்து தம்மத நிறுத்தல் எல்லாச் சமய நூல்கட்கும் இயல்பாதலின், அவர் கூறுகின்ற பொருள்களுள் யாது மெய்யென நிகழுமையத்தினை யோக முதிர்ச்சியுடையார் தம்மநுபவத்தானீக்கி மெய்யுணர்வாராகலின், அவரை ஐயத்தின் நீங்கித் தெளிந்தாரென்றும், அவர்க்கு அவ்வநுபவவுணர்வு அடிப்பட்டு வரவர பண்டை உலகியலுணர்வு தூர்ந்துவருமாகலின், அதனைப் பயன்மேலிட்டு "வையத்தின் வானம் நணியதுடைத்து" என்றுங்

கூறினர்; கூறவே, ஐயவுணர்வும் பிறப்பிற்குக் காரணமாதல் கூறப்பட்டது.

—பரிமேலழகர்.

ஐயவுணர்வுடையவர்களின் இயல்பை விளக்கிக் கீதையில் ஒரு சுலோகம் வருமாறு:—

கீ: 4—40—

அஜ்ஞச்சா ச்ரத்த தானச்ச ஸம்ச யாத்மா விநச்யதி
நாயம் லோகோ ऽஸ்தி நபரோ நஸுகம் ஸம் ஸயாத்மந:

(பொருள்): ஞானமில்லாதவனும், சிரத்தையில்லாதவனும், சம்சய சித்தமுடையவனும் நாசமடைகிறன். சம்சயமுடையவனுக்கு இவ்வுலகம் இல்லை, வேறு உலகமும் இல்லை; யாதொரு சுகமும் இல்லை.

இந்த ஆத்ம சொரூபத்தை அறியாதவன், 'அறிவிலி' அல்லது 'அஞ்ஞானி'யாவான். தன்மீதும், குருமீதும், சாஸ்திரத்துடத்தும் நம்பிக்கை வைக்காதவன் சிரத்தை யில்லாதவன் ஆகிறன். உலகத்தில் எல்லாரிடத்தும் சந்தேகம் கொள்ளும் இயல்புடையார் சிலர் இருக்கின்றனர். அத்தகையவர் ஐயமே வடிவெடுத்தவர் ஆவர். யார் எதைச் சொன்னலும் செய்தாலும் அதெல்லாம் தமக்குக் கேடு விளைவிக்குமென்றே, அன்னவர் கருதுகின்றனர். இம்மைக்குத் தகுதியுடையவனே மறுமைக்குத் தகுதியுடையவன் ஆகிறன். உலகத்தவரை நம்புகிறவளவு உலகத்தவர் ஒருவனுக்கு உரியவர் ஆகின்றனர். ஒருவருக்கொருவர் நம்பிக்கையிலும் உதவியிலுந்தான் உலகவாழ்க்கையில் சுகம் உண்டு. ஒருவரையும் நம்பாது உலகத்தவருக்கு வேற்றுயிருப்பதே பெரிய வேதனையாகிறது. இத்தகைய பான்மையுடையவனுக்கு ஆத்மஞானம் கைகூடாது; வாழ்க்கைக்கும் தகுதியற்றவன் ஆவன். — சு. சித்பவானந்தா.

இனி, ஐயத்தினின்றும் நீங்கிய ஞானிகளின் நிலைமையைக் கீதை ஒரு சுலோகத்தில் விளக்குகிறது.

கீ. 5—25—

லபந்தே ப்ரஹ்ம நிர்வாணம் ருஷய:க்ஷீணகல்மஷா:
ச்சின்னத்வைதா யதாத்மான: ஸர்வபூதஹிதே ரதா:

(பொருள்): எவருடைய தீவினைகள் ஒழிந்தனவோ? எவருடைய சந்தேகங்கள் தவிர்ந்தனவோ? எவருடைய இந்திரியங்கள் நன்கு அடக்கப்பெற்றனவோ? எவர்கள் எவ்வுயிர்க்கும் நன்மையை நாடுபவர்களோ? அந்த ரிஷிகள் பிரம்மத்தினிடம் முத்தியை அடைகிறார்கள். 'ரிஷிகள்' என்பவர்கள் தத்துவதர்சனம் அடையப்பெற்றவர்கள்; பற்றற்றவர்களாயினும், எல்லா வுயிர்களும் இன்புற்றிருப்பதற்கான உபாயங்களை அவர்கள் நடத்திக் காட்டுகிறார்கள். அவர்களைப் பாபம் தொடருவதில்லை.

— சு. சித்பவானந்தா.

354. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

(பொ-ள்): செல்லப்படுகின்ற புலன்கள் வேறுபாட்டான் ஐந்தாகிய உணர்வு, அவற்றைவிட்டுத் தம் வயத்ததாகிய வழியும், அதனாற் பயனில்லையேயாம் மெய்யுணர்வைப் பெறாதார்க்கு.

ஐந்தாகிய வுணர்வு மனம். அஃதெய்துதலாவது மடங்கி ஒருவழிப்பட்டுத் தாரணைக்கண் நிற்றல். அங்ஙன நின்றவழியும் வீடு பயவாமையின் பயமின்றென்றார். சிறப்புமை எய்துதற்கருமை விளக்கிநின்றது. இதனால், 'மெய்யுணர்வுடையார்க்கே வீடுள'தென மெய்யுணர்வின் சிறப்புக் கூறப்பட்டது. —பரிமேலழகர்.

(வி-ரை): நீந்துதலில் மிக வல்லவனாயினும் சமுத்திரத்தில் தவறி விழுந்தபின் சிறிதளவு நீரையாவது வாயிற் புகாமல் கரையேறுதல் அரிதாதல்போல, 'பிறவி' என்னும் கடலில் விழுந்தவனும், பொறி புலன்களின் வயப்படாமலும்

விடய போகங்களினின்றும் தப்புதல் அரியதாகலின், "ஐயு ணர்வெய்தியக் கண்ணும்" என மனோநிக்கிரகத்தின் அருமை கூறினார். அவ்வாறு புலன்கள் தம் வயப்பட்ட வழியும், அஞ்ஞானம், ஐயம், விபரீதங்களை நீக்குகின்ற உண்மை ஞான அனுபவமுதியாமல் வீட்டின்ப மடைதல் கூடாமை யின், 'பயனின்றே மெய்யுணர்வில்லாதவர்க்கு' எனவும் கூறினார். இதனை "ஐயறிவறிந்தவை யடங்கியவரேனும் மெய்யறிவிலாதவர்கள் வீடதுபெறாரே" என்ற சசிவன்ன போதத்தாலு முணரலாம்.

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:—

கீ: 2—59 —

விஷயாவி நிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹின:
ரஸவர்ஜம் ரஸோப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே

(பொருள்): உணவை யொழித்தவனுக்கு பொருட்கள் ஒழிவடைகின்றன ருசி நீங்கலாக; ருசியும் பரம்பொருளைக் கண்டபின்பே நீங்குகின்றது.

நோய்வாய்ப் பட்டிருப்பவனுடைய இந்திரியங்கள் இந்திரியார்த்தங்களில் செல்லத்தகுதியற்றவைகளாகின்றன. ஆயின், சுகமடைந்ததும் 'விடயங்களை அனுபவிக்கவேண் டும்' என்றவிருப்பம் உள்ளத்தில் உதித்துவிடுகிறது. சிறைச் சாலையில் அடைபட்டிருப்பவனுக்கு இந்திரிய விடயங்களைப் பார்க்கவும் கேட்கவும் இயலாது. அவன் பலாத்காரமாக விடய எண்ணங்களை விட்டு விலகியவனாகிறான். ஆனால், 'அவைகளை அனுபவிக்கவேண்டும்' என்ற ஆசை உள்ளத் தில் உதித்துக்கொண்டிருக்கிறது. அதை யாராலும் அடக்கி வைக்க முடியாது. புலனடக்கம் முதலிய தபசுகளை செய்ப வன் நிலைமையும் அத்தகையதுதான். வாசனைகள் மிக சூக்குமமாக இருந்துகொண்டு கூத்தாடும். தீயிலிட்டு வறுத்த விதை முளைக்காது. அவ்வாறு வாசனை அறவே ஒழியவேண்டும். இந்த ஆசையைக் கண்ணபிரான் 'ரஸம்' என்கிறார். வாசனை, ரஸம், ஆசை ஆகிய சொற்களின்

பொருள் ஒன்றேயாம். ஆசையானது திரும்ப முளைக்காத படி அடங்கி விடவேண்டும்.

— சு. சித்பவானந்தா.

355 எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு

(பொ-ள்): யாதொரு பொருள் யாதோரியல்பாய்த் தோற்றினும் அத்தோற்றியவற்றைக் கண்டொழியாது அப் பொருளின் கணின்று மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாவது.

பொருள்தோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்கும் கற்பனைகளை நீக்கி நின்ற உண்மையைக் காணுதலாம். —பரிமேலழகர்.

(வி-ரை): 'மெய்யுணர்தல்' என்ற இவ்வதிகாரத்தின் தலைப்பில், பிறப்பு வீடுகளையும், அவற்றின் காரணங்களையும் 'விபரீத வையங்களானன்றி, உண்மையானுணர்தல்' என்ற குறிப்பு காணப்படுகின்றது. மெய்யுணர்தலுக்கு இலக்கணமாக அமைந்துள்ளது இக்குறட்பா என்னலாம்.

உலகில் மெய்யறிவும் பொய்யறிவும் விரவியே காணப் படுகின்றன. 'பொய்யறிவு என்பது, மயக்கம், சந்தேகம், விபரீதம்' என்ற மூன்று பாகுபாடுகளாகவுள்ளன. இவைகள் மெய்யறிவை மறைத்து பொய்யறிவு தோன்றும் பொழுது 'சோகம், மோகம், பிறப்பு, இறப்பு' என்ற துன்பங்களில் ஆழ்த்தி விடுவதினால், சொல்லவொண்ணாத மனக் கலக்கத்தால் மனிதர்கள் அவதியுறுகிறார்கள்.

உதாரணமாக:— மரத்தால்செய்த யானையைப் பார்க்குமிடத்து முதலில் யானை தோன்றுகிறது; மரம் தெரிவதில்லை. 'மரம்' என்ற உண்மை தெரிந்தவுடன் யானை தோன்றுவதில்லை, அதுபோல 'உலகம் உண்மை' யென்று அறியும் பொழுது, பரம்பொருள் விளங்குவதில்லை. 'பரம்பொருளா

கிய முழுமுதற் பொருளே இவ்வெல்லாமாய் நிலைபெற்றுள்ளது' என்ற உண்மை புலனாகும்பொழுது, உலகம் மறைந்து விடுகிறது என்ற இது,

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே" —என்ற

திருமூலர் வாக்கும் உபமானமாகின்றது.

இன்னும் சில உதாரணங்களால் பொய்யறிவும் மெய்யறிவும் கண்டு உணரலாம். அவை:—

சூரிய ஒளியானது பிரகாசமாக எல்லாப் பொருட்களையும் உணர்வதற்கு யாவருக்கும் சாதகமாக அமைந்துள்ளது. ஆகில் மஞ்சட்காமாலையுள்ளவன் கண்களுக்கு அவ்வொளி மஞ்சள் நிறமாகவே தோற்றமளிக்கிறது. அம்மாறுபாடான தோற்றம், கண்ணின் குற்றமாகிய மயக்கத்தால் ஆகிய பொய்யுணர்வாகும்.

இனி விபரீத வுணர்வாவது, மேகத்தில் சந்திரன் ஓடுவதாக சில சமயம் காணப்படுகிறது. உண்மையில் விரைவாக ஓடுவது மேகம்; ஓடாமலிருப்பது சந்திரன். இது மாறுதலாக, மேகத்தின் விரைவு சந்திரனிடத்தும், சந்திரனின் மந்தகதி மேகத்தினிடத்தும் ஆரோபித்துக் காணப்படுகிறது. இது விபரீதமாகிய பொய்யுணர்விற்கு உபமானமாகும்.

மேற்கூறிய, மயக்க, விபரீத வுணர்வுகள் மக்களின் வாழ்க்கையிலும் காணப்படுகின்றன. எவ்வாறெனில்,

ஐம்பூத விகாரத்தாலாகியது இவ்வுடம்பு. இவ்வுடம்பை உள்ளிருந்து நடத்துவிப்பது அழியாத ஆன்மதத்துவமாகும். இவ்வுண்மையை உணராமல் 'தேகமே நான்' என்று மாறுபட்டுணர்வது பொய்யுணர்வாகும்.

முதலாவதாக நாம் அல்லாத உடம்பை 'நான்' என்று அபிமானிக்கிறேம். இது எல்லாத் துன்பத்திற்கும் காரணமாகிய பொய்யுணர்வாகும். மற்றும், 'நான்' என்ற சொல்லுக்குப் பொருளாயிருப்பது இம்மலவுடலன்று. அழிவில்லாத ஆன்ம தத்துவமேயாகும். இதற்கு மாறுபாடாக நம் கண்முன்னே தோன்றி யழிகின்ற உடம்பையே எல்லா மக்களும், 'நான், நான்' என அபிமானிப்பதை கண்கூடாக அறிகிறேம். இந்த ஆரோபிதமான மாயையாலாகிய பொய்யறிவை நீக்கி "இவ்வுடம்பு நானல்ல; இவ்வுடம்பினுள் மறைந்து வதியும், சுத்தான்ம தத்துவமே நான்" என்ற மெய்ப்பொருளையுணர்ந்து, அனைவரும் மேலான நற்கதியை அடையும்பொருட்டே வள்ளுவர் 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும்' என்ற இக்குறட்பாவை அருளியுள்ளார்.

இனி, கீதையிலுள்ள இரு சுலோகங்கள் வருமாறு :—

கீ: 13—27—

ஸமம் ஸர்வே ஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேச்வரம்
விநச்யத் ஸ்வவி நச்யந்தம் ய: பச்யதி ஸபச்யதி

கீ: 13—28—

ஸமம் பச்யன்ஹி ஸர்வத்ர ஸமவஸ்திதமீச்வரம்
நஹிநஸ்த்யாத்மநாத்மானம் ததோயாதி பராங்கதிம்

(பொருள்): எல்லாப் பொருள்களினும் ஸமமாக நிலை பெற்றுள்ளவனும், அழியும் பொருள்களில் அழியாமலுள்ளவனுமாகிய பரமேஸ்வரனை எவன் காண்கிறனே, அவனே காண்கிறன். அவன் உண்மையில் எங்கும் ஸமமாகநிலைத்து நிற்பவனுகிய ஈசுவரனைகண்டு, தன்னுல் தன்னை அழிக்காதவனுகின்றன். அதனுல் அவன் உயர்நிலையை அடைகிறன்.

பிரம்மா முதலாக தாவரம் வரையில் உள்ள எல்லாச் சீவர்களிடத்தும் வேற்றுமையில்லாது நிலைகொள்ளுகின்ற பரமேசுவரனைக் காண்பவன், மெய்யுணர்வுள்ளவன் ஆகின்றன். உடம்பு, புலன்கள், மனம், புத்தி, காரண சரீரம்,

சீவன் இவைகளை ஆளுந்தன்மையுள்ளவன் 'பரமேசுவரனே' எனக் காண்கிறானோ அவன் நேரே காண்கிறான். இவ்வாறு காணுகின்ற மெய்யறிவு பெற்றவன் தன்னைக் கெடுத்துக் கொள்வதில்லை. அஞ்ஞானியானவன் ஆத்மாவல்லாத தேகத்தையே 'ஆத்மா'வாகக்கொண்டு — நல்வினை தீவினைகளைச் செய்து — வினைக்கீடாகப் பல பிறவிகளை எடுக்கிறான். அதனால், தானே — தன்னைக் கொன்றவனாகிறான். தனது ஆத்மாவையும் (உடம்பு முதலியவற்றையும்) கொன்று, வேறோர் புதிய ஆத்மாவைத் தனதாக்கிக் கொள்ளுகிறான். முன்சொன்ன பரமேசுவரனைக் காண்கின்ற ஞானியானவன், தன்னைத்தான் கொல்லுவதில்லை. அதனால் அவன் மேலான கதியடைகிறான்.

—சங்கரபாஷ்யச் சுருக்கம்.

356 கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

(பொ-ள்: இம்மக்கட் பிறப்பின் கண்ணே உபதேச மொழிகளை அநுபவமுடைய தேசிகர்பாற் கேட்டு, அதனன் மெய்ப்பொருளை யுணர்ந்தவர் மீண்டு இப் பிறப்பின் கண் வாராத நெறியை யெய்துவர்.

'கற்'றென்றதனால், பலர் பக்கலினும் பலகாலும் பயிறலும், 'ஈண்டெ'ன்றதனால், வீடு பேற்றிற்குரிய மக்கட் பிறப்பினது பெறுதற்கருமையும் பெற்றாம். ஈண்டுவாரா நெறி வீட்டுநெறி; வீட்டிற்கு நிமித்த காரணமாய் முதற் பொருளை யுணர்தற்குபாயம் மூன்று. அவை கேள்வி, விமரிசம், பாவனை, யென்பன. அவற்றுட் கேள்வி இதனாற் கூறப்பட்டது. -(பரிமேலழகர்).

(வி-ரை): சீவான்மாக்கள் அரிய இம்மானுட தேகத்தைப் பெற்றதின்பயனாக, மெய்ப்பொருளை உள்ளவாறுணர்ந்துய்ய வேண்டுமெனவும், அவ்வாறுணதற்கு ஞானாசிரியரிடத்து வேதாந்தப் பொருளை ஐயந்திரிபறக் கேட்டறிதல் 'சிரவண'மெனவும், கேட்ட பொருளைத் தன்னுணர்

னுல் அடிக்கடி சிந்தித்தல் 'மனன'மெனவும், அங்ஙனம் மனனம் செய்த பொருளை சுவானுபூதியிற் கண்டறிதல், 'நிதித்தியாசன'மெனவும், இம்மூன்றுங்கூடியே, 'சிரவணு நித்திரயம்' என வேதாந்த நூல்கள் கூறுவதுபற்றி, நாயனு ரும் அவற்றைக் கற்றலில் அடக்கிக் "கற்றீண்டு மெய்ப் பொருள் கண்டார்" என்றும், அத்தகையோர் 'மீண்டும் பிறப்பில் வந்துபுகார்' எனும் நிச்சயம்பற்றி "தலைப்படுவர் மற்றீண்டுவாரா நெறி" எனவும் கூறியுள்ளார்.

மக்களைப் பற்றியுள்ள ஐய விபரீதங்கள் நீங்கி 'கேட்டல், சிந்தித்தல், தெளிதல்' என்ற ஞான சாதனங் களால் உண்மை ஞானங் கைகூடப் பெற்றவர்கள், நிச்சய மாக முத்திநெறி யடைகிறுர்கள் என்பது இக்குறட்பாவால் அறிகிறோம்.

இனி கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு :

கீ: 4 – 35:

யத்ஜ்ஞாத்வாந புனர்மோகமேவம் யாஸ்யஸிபாண்டவ
யேனபூதான்யசேஷேணத்ரக்ஷ்யஸ்யாத்மன்யதோமயி.

(பொருள்): பாண்டவா! இந்த ஞானத்தை அறிந்து மறுபடியும் இவ்வாறு மோஹத்தை யடையமாட்டாய். இத னுல் மிச்சமின்றி எல்லா உயிர்களையும் உன்னிடத்தும், மேலும் என்னிடத்தும் காண்பாய்.

பாண்டவா! நீ தத்துவதர்சிகள் உபதேசித்தஞானத்தை யடைந்தால், நீ இப்போது மோஹமடைந்திருப்பதுபோல மறுபடி மோஹத்தை யடையமாட்டாய். அன்றியும், பிரம்மா முதல் புல் வரையிலுள்ள சகல பிராணிகளையும் என் னிடத்திருக்கின்றன என உன்னிடத்தும், இவை பரமேசு வரனிடத்தும் இருக்கின்றன என்று வாசுதேவனை என்னி டத்தும், அந்த ஞானத்தினுல் சாட்சாத்தாய் காண்பாய். உபநிஷத்துக்களிலெல்லாம் உணர்த்தப்பட்ட ஜீவேஸ்வர ஐக் யத்தைக் கண்டு உணர்வாய் என்பது பொருள். —சங்கரர்.

**358. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.**

(பொ-ள்): பிறப்பிற்கு முதற்காரணமாகிய அவிச்சை கெட வீட்டிற்கு நிமித்த காரணமாகிய செவ்விய பொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய்யுணர்வாவது.

'பிறப்பென்னும் பேதைமை' எனவும், 'சிறப்பென்னும் செம்பொருள்' எனவும் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஐவகைக் குற்றங்களுள் அவிச்சை ஏனைய நான்கிற்கும் காரணமாதலுடைமையின், அச்சிறப்புப்பற்றி அதனையே பிறப்பிற்குக் காரணமாக்கிக்கூறினர். இனி மெய்ப்பொருளைக் காண்கையாவது, உயிர் தனது அஞ்ஞானங்கெட்டு அப்பொருளோடு ஒப்புமையுற இடைவிடாமல் நினைத்தல், இதனைச் 'சமாதி' என்பர். உயிர் உடம்பினீங்குங் காலத்து யாதொன்று பாவிக்கப்பட்டது' அது அதுவாய்த் தோன்றுவது எல்லாவாகமங்கட்கும் துணிபாகலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேதுவாய பாவனை கெடுதற்பொருட்டு கேவலப்பொருளையே பாவிக்க வேண்டுதலான்' அதனை முன்னே பயிறலாகிய இதனின் மிக்க வுபாயமில்லையென்பதறிக.

— பரிமேலழகர்.

(வி-ரை): 'பேதமை, அவிச்சை, அறியாமை' என்பன ஒரு பொருட்சொற்கள். பிறப்பும், உயிர் வாழ்க்கையும், முடிவில் ஆகும் இறப்பும், பேதமையாலுண்டாகியதே என்பது "பிறப்பென்னும் பேதமை" என்ற வாக்கியம் குறிப்பிடுகிறது. இப்பேதமைநீங்கி முத்தியின்பம் அடைய வேண்டுமாயின், சிறப்பாகிய செம்பொருளைக் காண வேண்டும்.

இது "எல்லாம் ஈசுவர சொரூபம்" என்ற பாவனை நிலைபெறவேண்டும். இது தியான சமாதிகளால் உண்டாகும் ஆத்மானுபவத்தாலாவது இதனைச் "செம்பொருள் காண்பதறிவு" என்று கூறினர்.

மற்றும், பிறப்பிற்கேதுவாகிய பேதமை நீங்காதவரையில், 'பிறப்பு, இறப்பு' என்ற பவசாகரத்தில் சீவன் சுழன்றுகொண்டே அலைகிறது. இந்நிலையில் அடுத்த பிறவியைக் காட்டுவது, 'ஒருவனுடைய உயிர் நீங்குங்காலத்து மனதில் எவ்வித எண்ணங்கள் தோன்றுகிறதோ, அவ்வெண்ணங்களுக்கேற்ப அடுத்த பிறவியை அடைகிறான்' என்ற உண்மையை, நம் சமய நூற்களாகிய வேதாந்த சித்தாந்தங்கள் எல்லாம் ஒப்புகின்றன.

ஆயின், 'மரணத் தருவாயில் ஈசுவர சிந்தனையைக் கொண்டுவிடலாம்' என்று இப்போது எண்ணுது விட்டால், அந்திய காலத்தில் மனம் ஈசுவர சிந்தனையைக் கொள்ளுவதில்லை; அது, 'ஏமாற்றமாக முடிந்துவிடுகிறது' என்பதையுணர்ந்த ஞான சீலர்கள் "நற்றவாவுனை நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே" எனச் சுந்திரமூர்த்தியடிகளும், "எய்ப்பென்னை வந்து நலியும்போதங்கேதும் நானுன்னை நினைக்கமாட்டேன். அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே' எனப் பெரியாழ்வாரும் முன்னெச்சரிக்கையுடன் ஈசுவர நாமத்தை மனப்பழக்கம் செய்துள்ளார்கள் என்பது தெளிவாகிறது. அன்றியும், ஒருவன் வாழ்நாளில் மனம் எவ்விதப் பழக்கம் பழகியுள்ளதோ, அதுதான் முடிவில் மனதைப் பற்றிக் கொண்டு நிற்கும். அதை மாற்றமுடியாது என்பதூஉம், சிறந்த ஞானசாதனப் பழக்கத்தில் முன்னமேயே பயின்றுள்ள சாதகர்களுக்குத்தான் கைகூடுகிறது என்பதை, "சாதனமின்றி யொன்றைச்சாதிப்பாருலகிலில்லை. ஆதலால், நூதன விவேகியுள்ளில் நுழையாது" எனக்கைவல்யமும், "பஹூநாம் ஜென்மநாமந்தேஞானவான் மாம்ப்ரபத்யதே வாசுதேவ: ஸர்வமிதி" எனக் கீதை 7-19 வது சுலோகமுங் கூறுகிறது.

மேலும், நல்லறிவுபெற்ற ஒருவனையும் புலன் வசப்பட்ட மனதானது அவனைக் கலக்கமுறச் செய்து, தீய காரியங்களில் வலிய இழுத்துச் சென்று அவதியுறச் செய்கின்றது. அதனால் மனதின் வல்லமையே யாவற்றினும்

மேலானது என்பது தெளிவாகிறது. மனதின் இயல்பே மனித உருவமாகிறது. அம்மனதிற்கொத்தபடியே உலகமும் அவனுக்குக் காட்சியளிக்கிறது என்பதற்கு பல சான்றுகள் காணப்படுகின்றன.

சிதம்பரசுவாமிகள் நெஞ்சுவிடுதூதில் மனதின் பெருமையை விளக்குகிறார்:

"புகலரிய நெஞ்சே – மிகுந்த
பிறப்பு வீடென்னும் – தகுந்தொகைக்குக்
காரணமுநீயே கருது முலகமெலாம்
ஏரிணங்கு நின்னையலா தில்லைகாண் – பாரிணங்கு
நீசற்றசைந்தால் நிகழு முலகாகும் –
நீசற்றுந் தோன்றாது நின்றக்கால் – மாசற்ற
மெய்ச்சிவ மேயாகும் மிளிருமிதா லுன்பெருமை
அச்சிவந்தானே அறியுங்காண்" என்று கூறுகிறார்.

மற்றும்,

'மனமெனுமோர் பேய்க்குரங்கு மடப்பயலே நீதான்
மற்றவர்போ லெனைநினைத்து மருட்டாதே கண்டாய்"
என ராமலிங்க அடிகளும் மனதை எச்சரித்துக் கூறுகிறார். அன்றியும்,

"மனமெனும் வினையை வென்றோர்
மலரடி முடிமேற்கொள்வாம்" என வாசிட்டமும்,
"ஆயின்மிக்க அறிவோர் செயலெலாம்
நேயமிக்க மனத்தை நிறுத்தல்காண்" என பிரபுலிங்க லீலையும் கூறுகிறது.

ஆகையால், நற்கதியடைய விரும்பும் நன்மக்கள் முதலில் மனதை வசப்படுத்தி, பிறகு செம்பொருளைக் காண்பதாகிய பிரம்மபாவனையில் முயலவேண்டும். பிரம்மபாவனையில் மனம் நிலைத்திருப்பின் – உலக பாவனை நீங்கி – பரமகதி கிடைக்கும். இதற்கு முன்னரே சில ஞான சாதனங்களைப் பழக வேண்டும். அதற்குச் சிரவண, மனன, நிதித்தியாசனம் ஆகிய இவைகளிற் பழகிப் பின்பு எங்கும் நிறைந்த

கடவுட் பாவனையை இடைவிடாது பாவிக்கவேண்டுமென் பதை "வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேது வாகிய பாவனை கெடுதற்பொருட்டுக் கேவலப்பொருளையே பாவிக்க வேண்டுதலான் அதனைமுன்னே பயிறலாகிய — இதனின் மிக்கவுபாயமில்லை யென்பதறிக" —எனப் பரிமேலழகரும் கூறினர்.

இனி கீதையிலுள்ள இரு சுலோகங்கள் வருமாறு:

கீ: 5–16:

ஜ்ஞாநேநது தத்ஜ்ஞாநம் யேஷாம் நாஸிதமாத்மந:
தேஷாமாதித்யவத்ஜ்ஞாநம் ப்ரகாசயதிதத்பரம்

கீ: 5-17:

தத்புத்தயஸ்ததாத்மாநஸ் தந்நிஷ்டாஸ்தத்பராயணா:
கச்சந்த்ய புநராவ்ருத்திம் ஜ்ஞாநநிர்த்தூதகல்மஷா:

(பொருள்): எவர்களுடைய அஞ்ஞானமானது ஆத்மாவைப்பற்றிய ஞானத்தினல் அழிவுற்றதோ, அவர்களுக்கு அந்த ஞானமானது சூரியனைப்போல பரப்பிரம்ம சொரூபத்தைப் பிரகாசிக்கச் செய்கிறது.

பிரம்ம சொரூபத்தில் புத்தியை யுடையவராயும், அதையே தனது ஆத்மாவாகக் கருதுபவராயும், அதையே பரமகதியாக அடைந்தவர்களாயும், ஞானத்தால் பாபத்தைப் போக்கியவர்களாயு மிருக்கிறவர்கள், திரும்பிவந்து பிறவாத பேரின்ப நிலையை எய்துகின்றனர்.

ஞானத்தால் பிரகாசிக்கப்பட்ட பரம்பொருளாகிய பரமார்த்த உண்மை எதுவோ, அதில் புத்தியை யுடையவராயும், அதையே தன் ஆத்மாவாகக் காண்பவராயும், எல்லாக் கர்மங்களையும் விட்டு பிரமத்திலேயே தமது இருப்பையுடையவராயும், அப்பரம்பொருளினிடத்து சரண் புகுபவர்களாயுமுள்ள பிரம்ம ஞானிகள், திரும்பி வந்து பிறவாத பேரின்ப நிலையை அடைகின்றனர். —சங்கரர்.

360. காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமங் கெடக் கெடுநோய்.

(பொ-ள்): காமம், வெகுளி, மயக்கமெனும் இக்குற்றங்கள் மூன்றும், ஞானயோகப் பயிற்சி யுடையார்க்கு அறவே கெடுதலால், அவற்றின் காரியமாகிய வினைப்பயன்கள் உண்டாகமாட்டா. ஆகையால், பிறவிப்பிணி அவர்களுக்கு இனி உண்டாகாது.

இடையறாத ஞானயோகங்களின் முன்னர் இக்குற்றங்கள் மூன்றும் காட்டுத்தீ முன்னர் பஞ்சுத்தூசிபோலு மாகலின், அம்மிகுதிதோன்ற இவை மூன்றனுமங்கெட வென்றார். பிறப்பிற்குக் காரணமாய அக்குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையின், அவர்க்கு வருந்துன்பங்கள் இல்லையென்பது இதனாற் கூறப்பட்டது.

முன் இருந்த துன்பங்களும், மேல்வரக்கடவ துன்பங்களும் இலவாதல் மெய்யுணர்வின் பயனாகலின், இக்குறள் இவ்வதிகாரத்தவாயின. மெய்யுணர்ந்த ஞானிகளுக்கு நிற்பது, எடுத்த உடம்பும் அதற்குள்ள வினைப்பயன்களுமே யென்பது பெற்றாம்.

—பரிமேலழகர்.

இனி கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:—

கீ: 16–21—

த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசந மாத்மந:
காம:க்ரோதஸ் ததாலோபஸ் தஸ்மாதேதத்ரயம் த்யஜேத்

(பொருள்): ஆத்மாவிற்கு நாசம் விளைவிக்கும் நரக வாயில் மூவகைத்து. காமம், கோபம், உலோபம் என்பன. ஆகையால் இம்மூன்றையும் தள்ளவேண்டும்.

அசுரப்பான்மைக்குப் பிறப்பிடம் ஈண்டு காட்டப்படு கிறது. இம்மூன்று குற்றங்களிலிருந்து அசுரத்தன்மை வளருகிறது. 'உலோபம்' என்பது போகப்பொருள்களைத் தனக்கென்றே கட்டிப்பிடித்தலாம். மனிதன் மேன்மை யடைவதற்கு இவை இடந்தருவதில்லை. இவைகளை நீக்கி ளுல் மனிதன் மேலோனுகிருன். —சு. சித்பவானந்தா.

(குறிப்பு): திருவள்ளுவர் மக்களிடத்துள்ள குற்றங் களை 'காமம் வெகுளி, மயக்கம்' என மூவிதமாகப் பகுத் துக் கூறினர். கீதாசிரியனுகிய கண்ணபிரான், 'காமம், கோபம் உலோபம்' என மயக்கத்தைவிடுத்து உலோபத்தை உடன் கூறினர்.

'மயக்க'மென்பது அவிச்சை; 'அறியாமை' யென்ற பொருளில் வழங்கப்படுகிறது. அதனுல், அவிச்சைக்கும், உலோபத்திற்கும் அதிகமான வேறுபாடு இல்லை. ஆதலின் உலோபமும் முக்குற்றத்தில் ஒன்ருகக் கீதையில் சொல்லப் படுகிறது. அதுவும் மக்களின் நல்வாழ்வைக் கெடுக்கும் குற்றமேயாகலின், இதை "பற்றுள்ளமென்னு மிவறன்மை யெற்றுள்ளும் எண்ணப்படுவ தொன்றன்று" என 438-வது குறட்பாவிலும், உலோபத்தினது தன்மை குற்றத்தன்மை களெல்லாவற்றினுள்ளும் வைத்தெண்ணப்படுவ தொன் றன்று மிக்கது எனத் தெய்வப்புலவர் கூறியிருப்பதால், முக் குற்றங்களில் உலோபத்தையும் சேர்த்துக் கூறலாம் என்ப தும் பொருத்தமாகின்றன.

எவ்வாறு கொள்ளினும், இம்மூன்று குற்றங்களும் ஒவ்வொருவரையும் இளமைப் பருவத்தில் பற்றிக்கொண்டு தீய காரியங்களில் புகுத்திவிடுகிறது. அறிவுள்ளவனும், மனவடக்கமுடையவனும் அக்குற்றங்களினின்றும் தப்பி நல்வாழ்க்கை நடாத்த முடிகிறது. மற்றவர்களை அவைகள் பாமரர்களாக்கி விடுகின்றன.

ஆகையினுல்தான், ஒவ்வொருவருக்குண்டாகும் வாலிப காலங்களில் இம்முக்குற்றங்களில் தப்பி நன்னெறிக்க

ணின்று வாழ்க்கை நடாத்துபவர்களை, ஆண்மையுடையவர்களெனவும், சான்றோரெனவும், யாவரும் வணங்கத் தகுதியுடையவர்களெனவும் வாதிஷ்டம் என்ற நூலில்

"எத்திரத்தோ ரெவ்வனமாமிடையூற்றைக்கடந்
தெளிதினேற வல்லோ
ரத்திறத்தோரே புருடரவர்களே தொழற்குரியோ
ரவரே சான்றோர்"

எனக் கூறுவதும், இதற்குச் சான்றாகிறது.

**361. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.**

(பொ-ள்): எல்லா வுயிர்கட்கும் எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறப்பினை விளைவிக்கும் வித்து அவா வென்று சொல்லுவர் நூலோர்.

உடம்பு நீங்குங்காலத்து அடுத்த வினையும் அது காட்டுங் கதிநிமித்தமும் அக்கதிக்க ணவாவும் வந்துதிப்ப, அவ்வவா அக்கதிக்கட்கொண்டு செலுத்துதலால் ஆசையைப் பிறப்பீனும் வித்தென்றார். காலம் எவ்வாறு வேறுபடினும் வினையின்படி பிறத்தல் வேறுபடாமையின் எல்லா வுயிர்க்கும் எஞ்ஞான்றுமென்றும் இது எல்லாச் சமயங்களுக்கு மொத்தலான் என்ப வென்றுங் கூறினார்.

—பரிமேலழகர்.

(வி-ரை) 'ஆசையுள்ளளவும் பிறப்பும் உண்டு' என்ற நிச்சயம் காணப்படுகிறது. அது, தேகமாகிய ஏரியில் நிறைந்து ததும்புகின்ற ஆசையாகிய தண்ணீர், பொறிகளாகிய கால்வாய்களில் வழிந்தோடி விடயங்களிற் சென்று பாய்ந்து, விடயங்களில்பற்றுக்கொண்டு நற்கதிக்குச் செல்லவொட்டாமல் தடைப்படுத்துகிறது. அவ்வாறுள்ள ஆசையை அடக்கும் அதிகாரிகளையும், அவ்வாசை முட்டி நுளைந்து கட்டுப்படாமல் 'யான், எனது' என்ற பற்றுக்களை வளரச் செய்து, சுத்த சைதன்யத்தை மறைத்து சீவ அபிமானத்தை

உண்டுசெய்து, பிறப்பு இறப்புக்களில் மக்களை அலங்கோலப் படுத்திக் கொண்டிருக்கிறபடியால், இதனை விளக்கி "அவா வென்ப வெல்லா வுயிர்க்கும்" என்றும், இத்தகைய துன்ப மயமான அனர்த்தங்களுக்கெல்லாம் வித்தாயிருப்பது அவ்வ வாவே யாதலால், "எஞ்ஞான்றும் தவாப்பிறப்பீனும்வித்து" என்றுங் கூறினரென்ப. "ஆசையறுமின்கள் ஆசையறு மின்கள் ஈசனோடாயினும் ஆசையறுமின்கள் ஆசை படப் படவாய்வருந் துன்பங்கள் ஆசைவிடவிட வானந்தமாமே" என்ற திருமந்திரமும் இதற்குச் சான்றாகிறது.

இனி கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:—

கீ: 3—37—

காமஏஷக்ரோத ஏஷரஜோகுண சமுத்பவ:
மஹாசனோ மஹாபாப் மாவித் த்யேநமிஹ வைரிணம்.

(பொருள்): இது காமம், இது கோபம், ரஜோகுணத் தில் உதித்தது, பெருந்தீனி வேண்டுவது, கொடிய பாபத்தை விளைவிப்பது, இவ்வுலகில் இதை சத்துருவாக அறிவாய். உலகத்தவர் எல்லாருக்கும் பரம சத்துருவாய் இருப்பது ஆசை. இந்த ஆசைக்குத் தடை உண்டாகும்பொழுது, அது கோபமாக வடிவெடுக்கிறது. ஆகையால், ஆசையை யும் கோபத்தையும் ஒன்றாகப் பகவான் கூறுகிறார். இது ரஜோகுணத்திலிருந்து உதிக்கிறது; மேலும் ரஜோகுண வளர்ச்சியையும் உண்டுபண்ணுகிறது. நெருப்புக்கு எவ்வ ளவு விறகு கொடுத்தாலும் அதை எரித்துவிட்டு மேலும் விறகை வேண்டி நிற்கிறது. அவ்வாறே காமத்துக்கு உணவை ஊட்ட ஊட்ட அது உண்டு வளருகிறது. விட யங்களாகிய உணவை வேண்டியமட்டும் அது உண்ண வல் லது. ஆசை பெருகப் பெருக பாபமும் பெருகுகிறது. மனி தனுக்கு வரும் கேடுகளெல்லாம் ஆசையிலிருந்து வந்தவை கள். ஆகையால் இது இவ்வுலக வாழ்க்கையில் எல்லோருக் கும் பகையாம்.

—சு. சித்பவானந்தா.

**363. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.**

(பொ-ள்): ஒரு பொருளையும் ஆசைப்படாத விழுமிய செல்வம் காணப்படுகின்ற இவ்வுலகில் இல்லை அவ்வளவேயன்று, காணப்படாத துறக்க வுலகத்தும் அதனையொப்பதில்லை. மக்கள் செல்வமும் தேவர் செல்வமும் அதற்கு மேலுள்ள செல்வத்தை நோக்க, இச்செல்வங்கள் கீழாகின்றன. தனக்குமேல் ஒன்றுமில்லாத வேண்டாமையை விழுச்செல்வமென்றார். —பரிமேலழகர்.

(வி-ரை): வேண்டாமையைத் தேவ உலகினும் மேம்பட்ட சிறந்தசெல்வமென்றார். அது உலகிலுள்ள எல்லாப் பொருட்களினிடத்தும் ஆசையின்மையைக் குறிப்பிடுகிறது. இவ்வாசையின்மையைக் கடவுளின் இயல்பெனக் கம்பர் "அவாமுதலறுத்த சிந்தையனகன்" என இராமபிரானின் தெய்வத்தன்மையின் இலக்கணங் கூறுகிறார்.

மற்றும்,

"ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம்பஞ்செனவு
மனதலையுங்காலம்
மோசம் வருமதனாலே கற்றதுங் கேட்டதுந்தூர்ந்து
முத்திக்கான
நேசமும்நல் வாசமும்போய்ப் புலன்வாயிற் கொடுமை
பற்றி நிற்பரந்தோ
தேசுபழுத்தருள் பழுத்த பராபரமே நிராசையின்றேல்
தெய்வமுண்டோ"

எனத் தாயுமானாரும்,

"ஆசைக் கடியான் அகிலலோகத் தினுக்கு
மாசற்ற நல்லடியா னவானே—ஆசை
தனையடிமை கொண்டவனே தப்பாதுலகந்
தனையடிமை கொண்டவனே தான்" என்ற வெண்பாவும் இதனை விளக்கிக் காட்டுகிறது.

இனி கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:—

கீ: 12—16—

அனபேக்ஷ: சுசிர்த்தக்ஷ உதாசீனோ கத வ்யத:
ஸர்வாரம்ப பரித்யாகீ யோமத் பக்தஸ்ஸமேப்ரிய:

(பொருள்): எதையும் வேண்டாதவனாய், பரிசுத்தனாய், திறமையுடையவனாய், ஒருபட்சத்தைச் சாராதவனாய், மனத் துயரொழிந்தவனாய், எல்லாக் காமிய கருமங்களையும் துறந்தவனாய் எவன் எனது பக்தனாய் உள்ளவனோ? அவன் எனக்குப் பிரியமானவன்.

இந்திரியங்கள் வாயிலாக வரும் இன்பங்களில் ஆசையற்றவன் அனபேக்ஷனாகிறான். அங்ஙனம் ஆசைகளை நீக்குமளவு அவன் தூயவனாகிறான். மனம், மொழி, மெய் மூன்றும் மாசற்றிருப்பது தூய்மை. அதனால் செயலில் வலிமையுண்டாகிறது. எதிர்பாராது கணப்பொழுதில் வந்தமையும் கருமங்களை, உள்ளபடி அறிந்துகொள்ளவும்; அதற்கேற்ப நடந்துகொள்ளவும் அவனுக்கு இயலுகிறது. அதை முன்னிட்டே அவனுக்கு 'தக்ஷ' என்ற பெயர் அமைந்துள்ளது. அவன் செயலாற்றும் வல்லமையைத் தனக்கு உவந்தவர்களுக்கு ஒரு விதமாகவும், ஒவ்வாதவர்களுக்கு வேறு விதமாகவும் செய்தல் அவனிடத்தில்லை. நிறைகோல் போன்று, ஓரம் சாராது, எல்லார்க்கும் நடுநிலைமையாக நடந்து கொள்வதனால், அவன் உதாசீனன் ஆகிறான். அவ்விதம் நேர்மையாக நடந்து கொள்பவனுக்கு மனத்துயரம் ஒரு நாளும் உண்டாவதில்லை. அவனுக்குக் கவலை கிடையாது. எனினும், 'கர்மபலனில் பற்று வைத்திருக்கலாம்' என்று நினைப்பது ஒவ்வாது. தனக்கென்று கருமம் செய்வதையெல்லாம் அவன் அறவே துறந்தவன் ஆகிறான், இறைவனிடத்திலிருந்து அவன் எதையும் எதிர்பார்ப்பதில்லை யாதலால், அவன் உண்மையான பக்தன் ஆகிறான். ஆகையினாலே அவன் பகவானுக்கு மிக இனியவன் ஆகிறான்.

—சு. சித்பவானந்தா.

370 **ஆராவியற்கை யவா நீப்பி னந்நிலையே**
பேரா வியற்கை தரும்.

(பொ-ள்): ஒருகாலும் நிரம்பாத அவாவினை ஒருவன் நீக்குமாயின், அந்நீப்பு அவனுக்கு அப்பொழுதே எந்நாளும் ஒரு தன்மையனுமியல்பைக் கொடுக்கும்.

நிரம்பாமையாவது, வேண்டாதனவாய பொருள்களை வேண்டி மென்மேல் வளர்தலுக்கு அளவின்மையின் ஆசையை நீக்குதலே தக்கதென்பது கருத்து. களிப்புக் கவர்ச்சிகளும், பிறப்பு இறப்புப் பிணி மூப்புகளும் முதலாயினவின்றி உயிர்நிரதிசய வின்பத்தைப் பெறுதலின், வீட்டின்பத்தினைப் 'பேராவியற்கை' யென்றும், அஃது அவாநீத்த வழிப்பெறுதல் ஒருதலையாகலின் அந்நிலையே 'தரு' மென்றுங் கூறினார். —பரிமேலழகர்.

(வி-ரை): இவ்வதிகாரத்துள்ள முதல் ஒன்பது குறட்பாக்களிலும், 'அவா' என்னும் ஆசையாலுண்டாகும் தீமைகளையெல்லாம் பலவாறாக விளக்கிக் கூறி, இப்பத்தாவது குறளில் 'ஆராவியற்கையவா' என்று அவாவினது முழு இலக்கணத்தையும் தெய்வப்புலவர் கூறிமுடித்தார். அத்தன்மையான ஆசையை ஒருவன் நீக்க வல்லவனாயின், அப்பொழுதே அவன் 'வீட்டின்பத்தினை யடைகிறான்' என அதன் பலனையும் அடுத்த அடியில் உள்ள வாக்கியத்தின் பொருளால் விளக்கிக் கூறினார்.

இதனை நாம் சில சான்றுகளுடன் ஒப்பிட்டு இதன் தெளிவான பொருளைக்கண்டுணர்தல், நமது முக்கிய கடமையாகும்.

ஆராவியற்கையவா—ஒருகாலும் நிரம்பாத ஆசை என்பது; ஒருவன் தனக்கு வேண்டுவதாகிய ஒரு செயலை மனதிற்கொண்டு செயலாற்றுகிறான். அச்செயல் பூர்த்தியான பிறகு அத்துடன் மனம் சமாதானமடைவதில்லை; அதற்கு மேலுள்ள ஒரு தேவை ஏற்படுகிறது! அதுவும் கைகூடினால்

பின்பும் தனக்குக்கிட்டாத பொருட்களின்மீது மனம் சென்று இவனுக்குக் கேடுவிளைவிக்கின்றது. இதனை "அரிது பெற்றிடினும் பெற்றதின் விருப்பமறப் பெறுதன விரும் புயிர்கள்" என, சாந்தலிங்க அடிகளும் நிரம்பாத பேராசை யின் இயல்பு கூறினர். இவ்வாறு ஆசை வளர்தலுக்கு அளவின்மையின் 'ஆராவியற்கை'யின் இயல்பு விளங்குகிறது. இவ்வாறுள்ள ஆசையை நீக்கப்பெற்றவன், மேலான பேரின்பத்தைப் பெறுகிறான் என்று எல்லா நூற்களும் கூறுகின்றன. ஆயின், ஆசையில்லாமல் உலகில் மக்கள் தொழில்புரிவதெங்ஙனம்? தொழில் செய்யாமல் முன்னேற்ற மடைவது எவ்வாறு? ஆசை யில்லாவிடில் உயிர் வாழுதலே முடியாமற் போய்விடுமே! என்ற ஐயம் ஒவ்வொருவர் மனதிலும் எழுவதியல்பாகும். இந்த நிலைமையில்தான் நூற்பிரமாணங்கள் நமக்குத் துணைபுரிந்து, ஆசையுடன் செய்யும் செயல்கள் இவையெனவும், ஆசையின்றிச் செய்யும் பலனை விரும்பாத தன் கடமைகளாகிய செயல்கள் இவை யென்பதையும் விளக்கிக் காட்டுகின்றன. இதன் பாகுபாடுகளை அறிந்து செயலாற்றுபவனே மக்களிற் சிறந்த மேலோனாகிறான் என்பது, கீ: 16—24ல் உள்ள உபதேசமாகும்.

இனி, ஆசை, ஆசையின்மையின் பாகுபாடுகளை உதாரணங்களால் விளக்கிக் காண்பதுவே தெளிவாகும்.

உதாரணமாக: ஒருவன் பசித்தால் உணவருந்துகிறான். இது ஆசையல்ல. உணவருந்தாவிடின் உடம்பு நில்லாது. ஆகலின், இது செய்யவேண்டிய கடமையாகும். மற்றும் நம் முன்னேற்றத்திற்காகப் பல காரியங்களைச் செய்தேயாகவேண்டும். அவற்றை அறவழிக்கு மாறுபடாமற் செய்யின், அது ஆசையின்பாற்பட்டதல்ல. அது நம் கடமைகளாகும். மேலும், எவன் பற்றுடனும், சுயநலங்கருதியும், ஆசைவாய்ப்பட்டும், தனக்கென்றே வாழுகிறானோ, அவனைவிடக் கீழானவன் உலகில் வேறு ஒருவனும் இல்லை எனவும், மற்று, எவன் உலக நன்மைக்காகவும், ஆசையில்லாமலும், சுயநலங்கருதாமலும், பிறர்க்குரியாளனாக வாழுகிறானோ, அவனைவிட மேலான உயர்ந்த மனிதன்

வேறொருவன் இல்லை என்பதுவும் கீதையின் முடிவான உபதேசமாகும்—இவ்வாறு தன் கடமைகளைச் சுயநலங்கருதாமலும், ஈசுவரப் பிரீதியாகவும் செய்யும் காரியங்களால் ஒருவன் பாவத்தை யடைவதில்லை என்பது கீதையின் பிரமாணமாகும். இவ்வுண்மையை "தன் கடன் அடியேனையுந் தாங்குதல், என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அருள் வாக்கியத்தினாலும் அறிகிறோம்.

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:—

கீ: 2—70—

**ஆபூர்யமாண மசலப்ரதிஷ்டம் ஸமுத்ரமாப: ப்ரவிசந்தியத்வத்
தத்வத் காமா யம்ப்ரவிசந்தி ஸர்வே ஸ சாந்திமாப்நோதி நகாம
காமீ.**

(பொருள்) எங்கும் நிரம்பியதும் நிலைகுலையாததும் ஆகிய சமுத்திரத்தை நதிகள் எவ்வாறு அடைகின்றனவோ, அவ்வாறு, ஆசைகளெல்லாம் எவனிடத்தில் அடைகின்றனவோ, அவன் அமைதியை அடைகிறான்.

ஆசையைவிட்ட மெய்யறிவுடையவன் முத்தி யடைகிறான். 'உலக விடயங்களில் உழல்பவன் முத்தி யின்பத்தை அடைவதில்லை' என்பதை, உதாரணத்தால் பகவான் விளக்குகிறார்.

எப்பக்கமும் நீரால் நிரம்பியதும், நிலை மாறுபாடின்றியதுமாகிய கடலில் எல்லா நதிகளும் வந்து கூடினாலும், அக்கடல் அதிகம் குறைச்சலான மாறுபாட்டை அடைவதில்லை. அந்நதிகள் கடலில் அடங்கி விடுகின்றன. அதுபோலவே மெய்யறிவுடையவனிடத்தில் வந்துசேரும் ஆசைகளெல்லாம், வெளிக்கிளம்பாமல் அடங்கிவிடுகின்றன. ஆசைகள் அவனை வசப்படுத்த முடியாமல், அவன் ஆன்மப் பிரகாசத்தில் இலயித்து விடுகின்றன; அவன் சாந்தி யடைகிறான். ஆசைவயப்பட்டவனுக்கு அவ்வித நன்மை உண்டாவதில்லை.

—சங்கரர்.

**373. நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும்.**

(பொ-ள்): பேதைக் குணமுடையானொருவன் நுண்ணிய பொருள்களை யுணர்த்தும் நூல்கள் பலவற்றையுங் கற்றானாயினும், மற்றுந்தன் ஊழானாகிய பேதமை யுணர்வே மேற்படும்.

மேற்படுதலாவது, கல்வி யறிவைப் பின்னிரங்குதற் காக்கிச் செயலுக்குத்தான் முற்படுதல்.

(வி-ரை): உலகில் பிறந்து உயிர் வாழ்கின்ற மக்கள் 'இயற்கையறிவு, நூலறிவு' என்ற இருவித பாகுபாடுகளுடன் பொருந்திய அறிவைக்கொண்டு, பலவிதமான நன்மையும் தீமையும் கலந்த செயல்களைப் புரிந்து உயிர் வாழ்கின்றனர். அவற்றுள், 'இயற்கையறி' வென்பது சத்துவ, ராசத, தாமதமாகிய முக்குணக் கலப்பினாலாகியது. அது, 'அவனவன் ஊழ்வினைக்குத் தக்கவாறாக அமைந்துள்ளது' என்பது பரிமேலழகரின் கருத்தாகும்.

அன்றியும், உலகில் தோன்றிய ஒவ்வொரு தோற்றமும், இம்'முக்குண விகாரத்தின் பிரதிபலினமேயாகும்' என்பது, வேதாந்த நூற்களின் முடிபுமாகும். இதை, பகவத்கீதை 14-வது 'குணத்திரயவிபாகயோகம்' அல்லது 'மூன்று குணங்களின் விளக்க அத்தியாயம்' என்ற பாகத்தில் விளக்கி கூறப்படுகிறது. இதைக் கம்பரும், "மூன்றுருவெனக் குண மும்மையா முதற்றோன்றுரு வெவையும்" என வலியுறுத்தினார்.

இனி, மற்றொன்றாகிய 'செயற்கையறிவு'ம், "நீரளவே யாகுமாம் நீராம்பற் றான்கற்ற நூலளவேயாகுமாம் நுண்ணறிவு"— என்றபடியாக, குற்றமற்ற அறிவு நூல்களின் பயிற்சிக்கேற்றவாறு அமைந்துள்ளது, 'செயற்கையறிவு' எனப்படும். இவ்விருவித அறிவுகளும், மக்களால் கைக்கொள்ளப்படுகின்றன.

அவற்றுள், மேன்மக்களாகிய நல்லறிவுபெற்ற பண்புடையார், நூற்பிரமாணத்தாலாகிய நுண்ணறிவால், முக்குண விகாரத்தாலாகிய 'காம, வெகுளி, மயக்க' மென்னும் முக்குற்றங்களையும் நீக்கி, அறவொழுக்கங்களில் உறுதி கொண்டு, தமக்கும் உலகிற்கும் நன்மையான செயல்களைச் செய்து நற்புகழ்பெற்று நன்னிலை அடைகின்றனர். மற்றும் முக்குண சம்பந்தமாகிய பிரகிருதியின் வசப்பட்ட சிற்றறிவுடையோர், பல நூற்களைக்கற்ற வித்வான்களாக இருப்பினும், உலக பந்தத்தை உண்டு பண்ணுவதாகிய 'காமினி காஞ்சன'த்தில் அதாவது, பெண்ணாசையிலும், பணத்தாசையிலும் மனம் அழுந்தப்பெற்ற இயற்கை அறிவுடன் கூடியவர்களாவார்கள். அத்தகைய இயல்புடையோர், நல்ல நூலாராய்ச்சியும் பெற்றிருப்பார்கள்; பிறருக்கு நீதிமார்க்கத்தையும் போதிப்பார்கள். ஆயின், தாம்மட்டும் கீழான இழிந்த செயல்களை எண்ணாது செய்துவிடுவார்கள். பின்பு உலக மக்களால் 'கற்றறி மூடர்கள்' என்ற பெயரையும் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாகிறார்கள். இத்தகைய பேர்வழிகள் 'இக்காலத்தும் உண்டு! முற்காலத்தும் உண்டு!' என்ற உண்மையை சாந்தலிங்க அடிகளாரும்,

> "வாயினாற் பல நூல் படித்துணர்ந்து நல்வழி
> பிறர்க்குரை செய்தும்
> தீயலோக வாசாரமோ ரணுத்துணையானு நீங்கிலே
> னெஞ்சே!—
> தூயதாமிவண் பிறர் கொளக்குங்குமம் சுமந்துசெல்
> கரமுன்னிற்
> காய மானுடத் தின்மையும் மன்றியுட் களவு
> மின்மையினாலே"—

என, தன்மனதை இழித்துக் கூறுவதுபோன்று உலக மக்களுக்கு அறிவுறுத்தினார்.

மற்றும், 'இராமாயண' காவியத்தில், கல்வியிற் பெரியனாய கம்பரும், இராவணனைக்' கற்றறி மூடர்களில் ஒருவ'னாக வைத்துச் சில கவிகளில் விளக்கிக்காட்டுகிறார்.

இராவணன், வேதங்களை யெல்லாம் குற்றமறக் கற்றுணர்ந்தவனென்றும், பிறர்க்கு விளங்கச் சொல்லும் நாவன்மை படைத்தவனென்பதையும், 'ஐயன் வேதம் ஆயிரம் வல்லோன் அறிவாளன்' எனவும், "நாரத முனிவர்க் கேற்ப நயம்படவுரைத்த நாவும்" என்ற பாக்களால் தெரிய வருகிறது. அவ்வாறு கற்றுணர்ந்தும் அவனது செயல்களெல்லாம் "........குலத்தளவே யாகும் குணம்" என்பதற்கிணங்க, அரக்கத்தன்மையின் இயற்கையாகிய மூர்க்க குணத்தால், நன்மக்களுக்குத் தீமையை உண்டாக்கும் வண்ணம் கொடுந் தொழிலையே செய்தும், தேவர்களையும் துன்பமுறச் செய்தானென்றும் அவனது சரிதம் கூறுகிறது.

உதாரணமாக, இலக்குவனால் மூக்கு முதலிய உறுப்புகளை இழந்த சூர்ப்பநகை, இராவணனிடம் சென்று, தெய்வக் கற்பினளாகிய சீதையின் எழிலை மிகுதியாக வருணிக்கிறாள்:—இதைக்கேட்ட இராவணன், சீதையின்மீது மிகுந்த காமங்கொண்டு தனக்கு நூற்பிரமாணத்தாலாகிய செயற்கையறிவையும் இழந்து, இராக்கத குணமாகிய இயற்கையறிவு மேலோங்கப்பெறுகிறான். இராக்கத இயல்பாவது, "இரக்கமென்றொரு பொருள் இலாத நெஞ்சினர் அரக்கர்"— பிற உயிர்களின்மீது 'கருணை இல்லாத கல்நெஞ்சமுடையோர் யாவரும் அரக்கரேயாவர்' என, கம்பரும் இலக்கணம் கூறுகிறார்.

இவ்வாறு சீதையின்மீதுள்ள தணியாத காமாக்கினியால், நல்லறிவாகிய நூலறிவையிழந்த இராவணன், சூர்ப்பநகையின் போதனையால்,

"கரனையுமறந்தான் தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையுமறந்தா னுற்ற பழியையு மறந்தான் வெற்றி
அரனையுங் கொண்ட காமனம்பினால் முன்னைப்பெற்ற
வரனையு மறந்தான் கேட்ட மங்கையை மறந்திலாதான்"

எனவும்,

"சிற்றிடைச் சீதை யென்னு நாமமும் சிந்தைதானும்
உற்றிரண்டொன்ருய் நின்ரு லொன்ருெழித் தொன்றையுன்ன
மற்ருெரு மனமுமுண்டோ மறக்கலாம் வழிமற்றி யாதோ
கற்றனர் ஞானமின்றேற் காமத்தைக் கடக்கலாமோ"

என்ற நிலையில்—இராவணன் சீதையின்பால் கொண்ட காம வேதனையால் தன் உயிர்த் தோழனுகிய 'கரன்' பட்டதையும் மறந்தான்! தங்கை மூக்கினையறுத்த தெய்வீக அவதார புருடர்களாகிய இராம—இலக்குவர்களின் வல்லமையையும் மறந்தான்!! அன்னியர் தாரத்தை இச்சித்ததால் வரும் பழியையும் மறந்தான்!!! அனேககாலம் தபசுசெய்து பெற்ற நீண்ட ஆயுளும், 'கற்பரசியான சீதையின் சாபத்தால் அழிந்து விடுமே' என்ற உண்மையையும் மறந்தான்!!!!

ஆனல், 'சீதையின் எண்ணத்தைமட்டும் மறக்கவில்லை' யெனவும், 'சீதை' யென்ற நாமமும், இராவணன் மனமும் ஒன்ருகக் கரைந்துவிட்டதெனவும்—அதனல், நன்மை தீமைகளைப் பகுத்தறிவதற்கு 'வேறு மனம்' இன்றி நல்லறிவை இழந்து வெற்றுருவத்துடன் தடுமாற்றத்தால் அவதியுறுவதாகவும் கம்பர் சித்தரித்துக் காட்டுகிருர்.

முடிவாக, உண்மை ஞானத்தோடுபொருந்தாத வெறுங் கல்வியினல் மக்கள் மனிதப் பிறப்பாலாகிய நற்கதியைப் பெறமுடியாதெனவும், இராவணன் கற்ற கல்வி ஞானத்தோடு பொருந்தாததால், அது அவன் அழிவுக்குக் காரணமாகிவிட்டதேதவிர அவன் நன்மைக்குப் பயன்படவில்லை என்ற கருத்தும் இப்பாக்களால் தெரியவருகிறது.

இனி கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:-

கீ: 3—33.

ஸத்ருசம் சேஷ்டதே ஸ்வஸ்யா: ப்ரக்ருதேர்ஜ்ஞானவானபி
ப்ரக்ருதிம் யாந்தி பூதானி நிக்ரஹ: கிம் கரிஷ்யதி

(பொருள்:) ஞானவானும்கூட தனது இயற்கைக்கு ஒத்தபடியே நடந்திடுவான். தோன்றியவையெல்லாம் இயற்கையைப்பற்றியே ஒழுகுகின்றன. தடுக்கும் முயற்சி என்ன செய்யவல்லது?

'மாந்தர்கள், கடவுள் கட்டளைக்கு மீறுதலாகிய குற்றத்தை ஏன் செய்கிறார்கள்?' என்பதற்குக் காரணம் காட்டப்படுகிறது. ஞானவானுங்கூட, தன்னுடைய இயற்கைக்கு ஒத்தபடியே செய்கையைச் செய்கிறான். 'ஸ்வபாவம்' என்பது, முன் ஜன்மங்களில் செய்துள்ள தர்ம அதர்மங்களின் வாசனை. இதுதான், அவரவர்களின் 'பிரகிருதி' என்று சொல்லப்பட்டது. அதற்கு ஏற்பவே, ஒவ்வொருவனும், ஞானியுங்கூட நடக்கிறான். மூடனைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? ஆகவே, சீவர்கள் தத்தம் பிரகிருதியைப் பின்பற்றுகின்றன. அதை, நானாவது வேறொருவனாவது தடுத்து ஒடுக்குதல் என்ன செய்யும்? 'அறிவுள்ளவனுங்கூட, பூர்வ ஜன்ம வாசனைக்கு வசப்பட்டு, பாவமான தீவினைகளை எண்ணாது செய்கிறான்.' —(சங்கரர்)

**374. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.**

(பொ-ள்): உலகத்து ஊழினாலாய வியற்கை இரண்டு கூறு. அவை, செல்வமுடையராதலும் வேறு; அறிவுடையராதலும் வேறு.

செல்வத்தினைப் படைத்தலுங் காத்தலும் பயன் கோடலும் அறிவுடையார்க்கல்லதியலா வன்றே, அவ்வாறன்றி அறிவுடையார் வறியராகவும் ஏனையார் செல்வராகவுங் காண்டலான், அறிவுடையாராதற்காகுமூழ் செல்வராதற்காகாது, செல்வராதற்காகுமூழ் அறிவுடையாராதற்காகாது. எனவே, செல்வஞ்செயுங்கால் அறிவாகிய துணைக் காரணமும் வேண்டாவென்பது பெற்றாம்.

—பரிமேலழகர்.

(வி-ரை): 'உலகம்' என்ற சொல், நிற்பன நடப்பன வாகிய சீவ வர்க்கங்கள் நிரம்பிய உலகத்தைக் குறிப்பிடுவ தாயினும், இங்கு தெய்வப்புலவர், 'உலகமென்பதுயர்ந்தோர் மாட்டே' என்றபடி, உயர் பிறப்பாகிய மக்கட் பிறவியைக் குறிப்பிடுகிறார். அம்மக்கட் பிறவியினுள்ளும், 'ஊழ்வினைக் குத் தக்கவாறாக இருவிதக் குறிகோளை இயல்பாக வுடைய வர்களாக இருக்கிறார்கள்' எனப் பிரித்துக் கூறினார். அவற் றுள், 'செல்வத்தை மட்டும் விரும்புவோர், உலகப்பற்றுடை யார் பந்தத்தில் கட்டுண்டவர்' என, ஒரு சாராராகவும், ஞானத்தை விரும்புவோர், தெய்வீகப் பற்றுடையவர், முத்தி நெறியின் சார்புபெற்றவர்' என மற்றொருசார்பாராக வும் பிரித்து, 'செல்வமுடையராதலும் வேறு அறிவுடையரா தலும் வேறு' என, இருவிதமாகப் பகுத்துக் கூறினார்.

ஆயின், 'உலகத்திலுள்ள பல்வேறு வகையான மக்க ளின் இயற்கைகள் இருவிதமாக வுள்ளன' என்ற தெய்வப் புலவரின் கூற்றை ஆராயுமிடத்து, உலகில் மனிதர்கள் பல சமயங்கள், பல சாதிகள், பல மொழிகள், பலவித பழக்க வழக்கங்களாகக் காணப்படுகிறார்கள். அவ்வாறிருக்க, இரு விதப் பிரிவாக தெய்வப்புலவர் கூறியதனாலும், இதில் ஒரு சிறந்த வேதக்கருத்தின் 'புதைபொருள்' உள்ளடங்கி யிருப்பதாலும், இக்குறட்பாவின் இலக்கணத்தை ஆராய்ந் தறிய வேண்டியது அறிஞர்களின் கடமையாகும்.

இக்குறட்பா 'ஊழ்' என்ற 38-வது அதிகாரத்தில் வந் துளது. ஊழ்வினை வயத்தால் பிறப்பையடைந்த மக்கள், ஊழ்வினையின்படி உண்டாகிய இயல்புக்கு ஏற்றவாறு எண் ணங்களும் செயல்களும் வேறுபட்டு வாழ்க்கை நடாத்துகி றார்களென்பதும், அவர்கள் அடையும் கதி நிமித்தமும் ஒன் றுக்கொன்று மாறுபட்டே உள்ளன வென்பதும், மக்கள் மனதில் பதியும்படி 'வேறு, வேறு' என்ற சொற்களால் அழுத்தமாகக் கூறினார்.

மற்றும், தமிழுக்குக் கதி இருவராகத் தோன்றிய கம்ப ரும் திருவள்ளுவரும் 'ஊழ்வினையை முதலாகக் கொண்டே

உலகில் எல்லாவிதச் செயல்களும் நடைபெறுகின்றன' வென்பதை, மிக வற்புறுத்திக் கூறியுள்ளார்கள். இது "ஊழிற் பெருவலியாவுள" எனத் திருவள்ளுவரும் "ஊழ் வினை யொருவராலொழிக்கற் பாலதோ" எனக் கம்பரும் கூறிய பாக்களால் அறியப்படுகிறது. மற்றும், நம் சமய நூல்களில் ஊழ்வலியை வற்புறுத்திக் கூறுவது போன்று, பிற மதங்களில் காணப்படவில்லை. மற்றும், நம் சமய நூல் களில் கண்ணிமைப்பதும், கைகாலசைவதும், காலில் முள் தைப்பதும், கல் இடறி விழுந்து தலை சிதறி உயிர் நீப்பதும், 'ஊழ்வினையின் விளை' வென்றே சோதிடம் முதலான எல்லா நூல்களும் ஒருபடித்தாகவே கூறுகின்றன. மற்றும், 'ஊழ் வினை யென்பது இல்லை' என வாதிப்போரும்; தங்களுக்கு தற்செயலாகவரும் இன்ப துன்பங்களை நேர்மையான புத்தி யுடன் ஆராய்வார்களானால், 'ஊழ்வினையெனவொன்றுண் டென்பது மறுக்க முடியாத உண்மை'யென உணர்ந்து கொள்ளுவார்கள்.

இனி, தெய்வப்புலவர், மக்களைப் பகுத்து இருவித இயல்பாகக் கூறியதன் சார்பாகவே நம் சமய நூல்களா கிய முதனூல், வழிநூல், சார்பு நூல்களும், பலமாதிரி யாக இருவித பாகுபாடுகளை விளக்கிக் காட்டுகின்றன. ஞான பாக மாகிய உபநிடதங்களில் மக்களின் பகுப்பை (1) 'பிரவிருத்தி மார்க்கத்தவர்கள், நிவர்த்தி மார்க்கத்தவர்' களெனவும், (2) கீதையில் 'கர்ம மார்க்கத்தவர், ஞான மார்க்கத்தவர்'களெனவும், (3) 'தெய்வப் பிறவியினர்கள், அசுரப் பிறவியினர்'களெனவும், (4) தத்துவஞான நூல் கள், 'ஞானிகள், அஞ்ஞானி'களெனவும், (5) நீதிநூல்க ளில், 'புண்ணியவான்கள், பாபிக'ளெனவும், மற்றும் வறிய வர்களின் நிலையறிந்து வழங்கும் ஈகைக் குணமுடைய உத்த மர்கள் 'உயர்ந்த சாதியர்க'ளெனவும், ஈயாத உலோபகுண முடையோர், இழிந்த சாதியுடையவர்க'ளென்ற பொருட் பட (6) "இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோ' ரெனவும், இது பட்டாங்கிலுள்ளபடி" யெனவும் மக்களைப் பகுத்துக் கூறப்படுகின்றன.

மேற்கூறிய பாகுபாடுகளெல்லாம், மக்களின் இயற்கைக்கு ஒத்த முறையை யறிந்து, முன்னோர்கள் இயற்றி வைத்த நூற்பிரமாணத்தோடு பொருந்திய பாகுபாடுகளாகும்

ஆனால், இவ்வியற்கை முறையானது நாளடைவில் மாறுபட்டு தற்கால விஞ்ஞான உலக மக்களால் புறக்கணித்து நீக்கப்பட்டு, "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே" என்ற சூத்திரமுறைப்படி, செயற்கை முறையில் போட்டிப் பிரிவுகள் ஏற்பட்டு விட்டன. இச்செயற்கை வேறுபாடுகள்,

தற்கால உலக மக்களிடையே பல மாறுபாடுகளாக விரிந்து, சாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும், தெய்வத்தின் பெயராலும், 'செல்வந்தர்கள், ஏழைகள்' என்ற காரணங்களினாலும் மனோ வேற்றுமைகளை வளர்த்து வருகின்றன வென்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

இவ்வித செயற்கை வேறுபாடுகள் பகுத்தறிவு பெற்ற மனித வர்க்கத்தின் பழக்கவழக்கங்களினாலும், காலவியல்பினாலும், கற்பனை செய்துகொண்டதனால் ஏற்பட்டவையே தவிர, முற்காலங்களில் இவ்வித வேறுபாடுகள் இல்லை' யென்பதாக சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். மற்றும், 'உண்ணல், உறங்கல், இன அபிவிருத்திசெய்தல் முதலிய செயல்களில், எல்லா சீவ வர்க்கமும் ஒன்றாகவே படைக்கப்பட்டுள்ளன' என்ற பொருள்பட, "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" எனத் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளினார். அன்றியும், சிலரை செல்வமுடையாராகவும், சிலரை ஏழைகளாகவும் படைக்க வேண்டுமென்று எண்ணி, கடவுளாவது இயற்கையாவது செய்யவில்லையென்பதை, "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்" எனத் தெய்வப்புலவரும்; பகவத்கீதையில் 5-வது அத்தியாயம் 14-வது; 15-வது சுலோகங்களில்:-

கீ: 5—14—

நகர்த்ருத்வம் நகர்மாணி லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபு:
நகர்மபலஸம்யோகம் ஸ்வபாவஸ்து ப்ரவர்த்ததே

கீ: 5—15—

நாதத்தே கஸ்யசித் பாபம் நசைவ ஸுக்ருதம் விபு:
அஜ்ஞானேனாவ்ருதம் ஜ்ஞானம் தேன முஹ்யந்தி ஜந்தவ:

அதாவது, கடவுள் ஒருவன் கர்த்தாவாகவேண்டுமென்றும், ஒருவன் தொழில் செய்யவேண்டுமென்றும், ஒருவன் தொழிலை ஒருவன் அனுபவிக்கவேண்டுமென்றும் படைக்கவில்லை. இயற்கையானது இயக்குவிக்கின்றது, என்றும் ஒருவன் புண்ணியவானாவதையும், ஒருவன் பாபியாவதையும் விரும்புவதில்லை. அஞ்ஞானமானது மக்களின் அறிவை மூடிவிடுகிறது அதனால், சீவர்கள் மயக்கத்தையடைகின்றார்கள். அதனால், மக்கள் பலவிதமாக ஆகின்றார்கள் எனக் கூறுகின்றன.

ஆகையால், நாம் காணும் வேறுபாடுகளனைத்துக்கும் மக்கள் தாங்கள் செய்துள்ள கருமமே காரணமல்லது, 'பிறிதில்லை' யென்பதை, "பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தங் கருமமே கட்டளைக் கல்" எனத் தெய்வப்புலவர் கூறியவாற்றாலறியலாம்.

மேலும், இச்செயற்கை வேறுபாடுகள் ஒரு தேசத்தில் சில காலம் அமுலிலிருக்கும்; பின்பு மாறுதலடையும். பின்பு வேறுவிதமான கொள்கைகள் தோன்றும்; அதுவும் மாறுதலடையும். இவ்வாறு மக்களின் அறிவானது, உலகஆராய்ச்சியில் முதிர்ச்சியடையும்போதெல்லாம், மக்களில் உயர்ந்தோர் தாழவும், தாழ்ந்தோர் உயரவுமாக மாறுபட்டுக் கொண்டுதானிருக்கும். ஆகில், நம் தெய்வப் புலவர் கூறும் இயற்கை வேறுபாடு அவ்விதமானதல்ல. மக்கள் பிறக்கும் பொழுதே ஊழ்வினைக்கீடாக அவரவர் மனதிற் பதிந்துள்ள இயல்பான குணங்களை இரண்டு பிரிவாகக் கூறினார். இவ்விரண்டில், உலகில் தோன்றிய மற்றைய பிரிவுகள் எல்லாவற்றையும் அடங்கும்படி கூறிவிட்டார்.

இனி, இக்குறட்பாவின் பொருளை ஆராய்வாம்:

திருவேறு-'மக்கள் செல்வத்தாலடையும் பலன் வேறாக வுள்ளது' என்ற வாக்கியத்தின் விரிவு - செல்வமானது உலகப் பற்றுடைய தேகாபிமானிகளால் விரும்பப்படுவது என கடோபநிடதம் 1-2-1 வது மந்திரத்தில் காணப்படுகிறது. இதையே பெரிதெனவிரும்புவோர், இகலோக சுவர்க்கபோக பதவிகளில் ஆசைகொண்டு பிறப்பு இறப்புக்களில் அடிபட்டு வருந்துவதன்றியும், பிறப்பினால் அடையவேண்டிய இன்பத்தை இழந்து விடுகின்றார்கள் என்ற முடிவும் காணப்படுகிறது.

மற்றும், திருவாசகம் போற்றித் திருவகவலில் "செல்வமென்னும் அல்லலிற் பிழைத்தும்" என்ற மாணிக்கவாசகர் வாக்கியத்தால், 'செல்வமாகிய தொல்லையினின்றும் தப்பியவர்கள்தான் சிவனருள் பெற்று மேலான பதவி யடைகிறார்கள்' எனவும், ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் "பஜகோவிந்தம்" என்ற கிரந்தத்தில் "மூடஜ ஹீஹிதனக மத்ருஷ்ணாம் குருசத்புத்திம் மனஸிவித் ருஷ்ணாம்"-'பணம் வருவதில் உள்ள பேராசையை விட்டுவிடு அறிவற்றவனே! அற வழிக்கு மாறுபடாமல் நீ தேடிய எந்தப் பொருள் உனக்கு வருகின்றதோ அதைக்கொண்டு உன் மனதை சமாதானம் செய்துகொள்' எனவும், இன்னும் பல நூல்களும் இவ்வாறே பகர்கின்றன.

ஆகில், 'செல்வத்தால் மக்கள்நன்மையடைவதில்லையா? நன்மையான கதியடைய சாதனமாவதில்லையா? 'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' யென தெய்வப் புலவர் கூறுகிறாரே?' என்ற வினாக்கள் எழுகின்றன. இவற்றிற்கு விடையாக, 'ஒருவன் தனது செல்வத்தை உலக உபகாரத்திற்காகவும் நல்ல வழியிலும் வகையறிந்து செலவுசெய்யின், பொருளும் மேலான பதவியை அடைய சாதனமாகும்' என்பதாக 'யாஞ்ஞவல்கியர்' என்னும் பிரம்மஞானி, 'மைத்ரேயி' என்ற தன் மனைவிக்கு உபதேசம் செய்ததாக

'இருவருக்கும் நடந்த சம்பாஷணை' என்ற பாகத்தில் காணப்படுகின்றது.

இனி, 'தெள்ளியராதலும் வேறு' என்ற வாக்கியத்தை ஆராய்வாம்: தெளிந்த அறிவுடைய உண்மை ஞானிகள், உலக இன்பங்கள் நிலைபேறுள்ளனவல்ல வென்னும் நிச்சயத்தை உணர்ந்து, இவ்வுலக நிலையாமையையும், என்றும் அழியாத தமது ஆன்ம இலக்கண உண்மையையும் உணர்த்த வல்ல உண்மை ஞானத்தையறிந்த உத்தம ஆசிரியர்பால் உபதேசவாயிலாக சந்தேகம் நீங்கி, 'பிறப்பு, இறப்பு' எனும் துன்பங்களினின்றும் கரையேற முயற்சிக்கின்றார்கள். இவ்வாறுள்ள முத்தி மார்க்கமும் பல வேறுபாடுகளுடன் அனுசரிக்கப்படுகிறது. ஆயினும், பல ஆறுகள் பல வழியாகச் சென்றாலும், முடிவில் அவை சமுத்திரத்தையே சேர்வது போல, எல்லாச் சமயமார்க்கங்களும் உலக பந்தத்தினின்றும் விடுதலையடைய விரும்பும் குறிக்கோள் ஒன்றேயாகலாலும், அது உலக ஞானத்துக்கு மேற்பட்ட ஆன்ம சமரச ஞான மாகலானும், அதிற்பயிலும் மெய்யறிவாளர்களைத் 'தெள்ளியர்' என உயர்திணைப் பன்மையிற் கூறினார்.

மேலும், மக்கள் தங்கள் இச்சையினாலும், அறிவினாலும் தூண்டப்பட்டுச்செய்யும் எல்லாவிதமான எண்ணங்களையும் செயல்களையும் கூர்ந்து நோக்கின், 'பொருளைக் குறித்து அல்லது ஞானத்தைக்குறித்து' என்ற இவ்விரண்டில் ஒன்றைக் குறித்ததாக இருக்குமேயன்றி வேறு விதமாக இல்லையென்பது நன்கு புலனாகிறது.

மற்றும், உலகில் நடைபெறும் தோட்டிவேலை முதல் அரசபதவிவரை உள்ள உத்தியோகப் பதவிகளினாலும், கொலை, கொள்ளை, பொய் முதலான பாதகத் தொழில்களினாலும், வானிற்பறந்தும், நீரினுள் மூழ்கியும், பூமியைத் துளைத்தும் — இன்னும் பலவிதமாகச் செய்யப்படும் அரிய விஞ்ஞானத் தொழில்களினாலும், மக்கள் ஈட்டும் பொருட் குவியல்கள் யாவும் உடலோம்பும் செயலாகிய வயிறு வளர்ப்

புக்கு மட்டும் பயன்படுவதன்றி, பிறப்பால் அடையவேண்டிய முத்தி மார்க்கத்துக்குப் பயன்படுவதில்லை என்ற உண்மையை,

"சேவித்தும், சென்றிரந்தும், தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும், பாராண்டும், பாட்டிசைத்தும்-போவிப்பம்
பாழினுடம்பை வயிற்றின் கொடுமையால் நாழியரிசிக்கே
நாம்"

என்ற முடிவும், மற்றும், தெய்வீகப் பதவி யடைவதற்காகிய ஞான சாதனமும். "தானம், தவம், வேள்வி, தன்மம், யோகம், பத்தி, வானம், பொருள், சாந்தி, வாய்மை, யருள் மோனநிலை, சாகாமற் சாவறிவு, சார் துறவு, இன்பம் முதலான சாதனங்களும் முத்தியடைவதற்கேயாகும் என்ற முடிவும் காணப்படுகிறது.

இவ்வாறு உலகிலுள்ள மக்களின் இயல்புகளையெல்லாம் விளக்கி, வேதோப நிடதங்களில் விரித்துக் கூறியுள்ள சாரங்கள் யாவையும் திரட்டி தமிழில் 'திருவேறு தெள்ளியராதலும் வேறு' என்ற இரு பதங்களால் விளக்கி யருள வல்ல தெய்வப் புலவரையும், அவர் உலக மக்களுக்குக் கொடுத்தருளிய தமிழ்மறையான "**திருக்குறள்**" நூலையும் மனதாரப் புகழ்ந்து, வாயார வாழ்த்தி, செயன்முறையிலும் கையாண்டு உலகம் முன்னேறுமாறு செய்ய இறைவன் திருவருள் பாலிக்க வேண்டுவோமாக.

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:—

கீ: 3—3—

**லோகே஽ஸ்மின் த்விவிதா நிஷ்ட்டா புரா ப்ரோக்தா மயாநக
ஜ்ஞானயோகேன ஸாங்க்யானாம் கர்மயோகேன யோகிநாம்**

(பொருள்): பாபமற்றோனே! இவ்வுலகில் இருவகையான நிஷ்டை என்னால் ஆதியில் கூறப்பட்டது. அவை ஞானயோகத்தால் ஸாங்கியர்களுக்கும், கர்மயோகத்தால் கர்ம யோகிகளுக்கும்' என்ற இருவித நிஷ்டைகளாகும்.

சர்வஜ்ஞனை ஈசுவரனாகிய என்னால், சிருஷ்டித் துவக்கத்தில் மனிதர்களைப் படைத்து, அவர்களுக்குச் செல்வமும் முத்தியும் கிடைப்பதற்குச் சாதகமான வேதப்பொருளின் சம்பிரதாயத்தை வெளிப்படுத்தியபொழுது, இவ்வுலகத்திலே சாஸ்திரார்த்தத்தை அநுஷ்டிக்க அதிகாரம் பெற்றவர்களுக்கு, இரண்டுவிதமான நிஷ்டையை அதாவது அநுஷ்டிக்க வேண்டிய நிலைமையைச் சொன்னேன். அவற்றுள் ஆத்மா அநாத்மாக்களைப் பகுத்து அறியும் ஞானமுடையராய், ப்ரம்மச்சரிய நிலையிலிருந்தே சந்நியாசத்தை அடைந்தவராயும், வேதாந்த ஞானத்தால் நன்றாகப் பொருளையுணர்ந்து பரமஹம்சரென்னும் ஸந்நியாசிகளாயும், ப்ரம்மத்திலேயே நிற்கின்ற ஸாங்கியர்களுக்கு, ஞானமாகிய யோகத்தால் ஞான நிஷ்டையைச் சொன்னேன். கர்மமாகிய யோகத்தால், யோகிகளாகிய கர்மிகளுக்கு கர்மநிஷ்டையைக் கூறினேன் என்பது பொருள் — சங்கரர்.

**422. சென்ற விடத்தாற் செலவிடாத் தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.**

(பொ-ள்): மனதை, அது சென்ற புலத்தின்கட் செல்லவிடாது, அப்புலத்தின் நன்மை தீமைகளை யாராய்ந்து தீயதனினீக்கி, நன்னெறிக்கட் செலுத்துவது அறிவாம்.

வினைக்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. 'ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்ற'மெனப்புலம் ஐந்தாயினும், ஒருகாலத்து ஒன்றின்கணல்லது செல்லாமையின், 'இடத்தா' லென்றார். குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன் போல வேறாக்கி மனதைப் புலமறிந்து செலுத்துவது 'அறி' வென்றார், அஃது உயிர்க்குணமாகலின். — பரிமேலழகர்.

(வி-ரை) உலகில் மக்கள் நல்வாழ்க்கை வாழ்வதற்கு முதற்படியான சாதனம் புலனடக்கமேயாகும் என்பது, எல்லா சமயத்தவர்களும் ஒப்பிய ஓர் பொதுநெறியாகும். மற்றும், பொறியடக்கமும், மனவடக்கமும் அமையப் பெற்றவர்கள் இம்மையில் நல்வாழ்க்கையையும், மறுமையில் தெய்வீக அருளையும் கிடைக்கப்பெறுகிறார்கள் என்ப

தும், இது மக்களுக்கு ஓர் 'வரப்பிரசாத'மாகும் என்பதும், கீதை 2–64-ல் கூறப்படுகின்ற உபதேசமாகும். இதை எம் மதச்சார்பினர்களும் புறக்கணிக்கமுடியாது.

அன்றியும், 'மனதை வசப்படுத்தாதவன் நல்வாழ்க்கை வாழவும், நற்கதி பெறவும் முடியாது' என்பதூஉம், 'மன வடக்கமின்றி மனம்போன போக்கெல்லாம் திரிபவனும் விலங்கும் ஒன்றுதான்' என்ற பொருள்பட, "மாவும் மாக்களும் ஐயறிவினவே மக்கடாமே ஆறறிவுயிரே" எனத் 'தொல்காப்பிய' சூத்திரமும் விளக்கிக் கூறுகிறது.

மற்றும், கடோபநிடதத்தில் "ஆத்மானம் ரதினம்," "இந்த்ரியாணி ஹயாநு" என்ற இரண்டு மந்திர வாக்கியங்களும் இக் குறட்பாவுக்கு வியாக்கியானங்கள் போன்று அமைந்துள்ளன. அவற்றின் பொருள்:– இரதத்தை நடாத்தும் சாரதியானவன் குதிரையின் கடிவாளத்தை உறுதியாகப் பற்றி, நொடிப்பாதையினின்றும் விலக்கி நேர்மையான சமபாதையில் செலுத்தினால், இரதத்தின் தலைவனைக் குறித்த இடத்தில் நலமாகக்கொண்டு சேர்ப்பிக்கிறான். அதுபோல, தேகமாகிய இரதத்தை நடாத்தும் அறிவென்னுஞ் சாரதி, மனமாகிய கடிவாளத்தை வலிவுடன்பற்றி, இந்திரியங்களாகிய குதிரைகளை புலன்களாகிய வழிகளில் நேர்மையாகச் செலுத்தினால், தேகமென்னும் இரதத்தின் தலைவனாகிய சீவனை முத்தி வீடாகிய நற்கதியில் சுலபமாகச் சேரும்படி செய்விக்கப்படுகிறான் என்று கூறுவதாலும், 'பொறிகளை அடக்கியாளும் நல்லறிவு பெற்றுள்ளவர்களே பிறப்பின் பலனை அடைகின்றார்கள்' என்பது இக் குறட்பாவால் விளங்குகிறது.

இனி, கீதையிலுள்ள இரு சுலோகங்கள் வருமாறு:—

கீ: 2—67.

இந்த்ரியாணாம் ஹி சரதாம் யன்மநோऽநுவிதீயதே
ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர்நாவமிவாம்பஸி

கீ: 2—68.

தஸ்மாத்யஸ்ய மஹாபாஹோ நிக்ருஹீதானி ஸர்வச:
இந்த்ரியாணீந்த்ரியார்த் தேப்யஸ்தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா

(பொருள்): விடயங்களிற் செல்லுகின்ற பொறிகளை அநுசரித்து எந்த மனமானது பின்பற்றிச் செல்லுகிறதோ, அந்த மனது அவனுடைய விவேகத்தை, சமுத்திரத்தில் காற்று எப்படி கப்பலை அடித்துக்கொண்டு போகிறதோ அப்படி இழுத்துக்கொண்டு போகிறது. ஆகையினாலே, அர்ஜுனா! எவனுடைய இந்திரியங்கள் புலன்களாகிய விடயங்களினின்றும் பிரிக்கப்பட்டு இருக்கின்றனவோ, அவனுடைய ஞானம் நிலைபெற்றுள்ளது என்று சொல்லப் படுகிறது.

'மனம் ஒருநிலைப்படாதவனுக்கு என் ஞானம் உண்டாவதில்லை?' என்பது இதில் சொல்லப்படுகிறது: தம்தம் விடயங்களிற் செல்லுகின்ற பொறிகளின் வழியைப் பின் பற்றிச்செல்லுகின்ற மனமானது, ஆத்மா அனாத்மாக்களின் ஆராய்ச்சியால் வருவதாகிய இந்த ஞானியின் அறிவைக் கெடுக்கிறது. எப்படிக் காற்றானது கப்பலை மாலுமிகளின் வழியினின்றும் விலக்கித் தவறான வழியில் செலுத்து கின்றதோ, அப்படியே ஆத்மாவைப் பற்றிய அறிவைக் கவர்ந்து செல்லுகிறது. ஆகையினாலே, எவனுடைய பொறிகள் எல்லா விடயங்களினின்று முற்றும் அடக்கப்படு கின்றனவோ, அவனுடைய ஞானம் நிலைத்துள்ளது என்று சொல்லப்படும். —சங்கரர்

426. எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

(பொ-ள்) உலகம் யாதொருவாற்றா னொழுகுவதாயிற்று; அவ்வுலகத்தோடு மேவித்தானும் அவ்வாற்றானொழுகுவது அறிஞர்கட்குக் கடமையாகும்.

உலகத்தையெல்லாம் யானியமித்தலான் என்னைநியமிப் பாரில்லை யெனக் கருதித் தானினைத்தவாறே ஒழுகிற் பாவ

மும் பழியுமாமாகலான், அவ்வா றொழுகுதல் அறிவன்றெனவிலக்கியவாறாயிற்று. இவை யைந்து பாட்டானும் அதனதிலக்கணம் கூறப்பட்டது. — பரிமேலழகர்.

இக் குறட்பாவின் கருத்திற்கேற்ப, முன்னுள்ள 140-வது குறளினும்,

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

இதன் பொருள்:- உலகத்தோடு பொருந்த வொழுகுதலைக் கல்லாதார், பல நூல்களையுங் கற்றாராயினும் 'அறிவிலாதார்' என்பதாகும். இவ்விரு குறள்களினும் உள்ள பொருள்கள், ஒரே கருத்தை வலியுறுத்துவதை உணர்தற்பாலதாகும்.

(வி-ரை) அறிவுடையோர் உலக மக்களின் நடைமுறையையறிந்து, அதற்கேற்பத் தாமும் நடந்து, தம் காரியங்களைச் சாதித்துக்கொள்ளும் உபாயங்களை இப் பாக்களால் போதிக்கப்படுகின்றன. மற்றும் ஒருவன் பல நூல்களைக் கற்ற மேதையாகவிருப்பினும், உலகத்தோடு பொருந்திய ஒழுகுதலைக் கல்லாதவன் அறிவில்லாதவனாகிறான் எனக் கூறப்படுவதால், அறிவின் மிக்கார், உலகம் எங்கெந்த முறையில் செயலாற்றுகிறதோ அந்தந்த முறையைப் பின்பற்றி, மக்களினத்தைத்தழுவி ஒற்றுமையுடன் வாழ்க்கை நடாத்துதலே அறிவுடைமையாகுமென்பது மேற்கூறியுள்ள பாக்களின் பொருள்களால் விளங்குகிறது. இது,

"பகைசேரு மெண்ணன்கு பற்கொண்டே நன்று
வகை சேர் சுவையருந்து மாபோற் றொகைசேர்
பகைவரிட மெய்யன்பு பாவித் தவராற்
சுகமுறு தனல்லோர் தொழில்" என்ற பாவானும்

விளக்கமாகிறது. எனவே, உலக நடைமுறைக்கு மாறுபட்டுச் செயல்புரிபவன் காரியசித்தி பெறுவதில்லையென்பது, இப்பாக்களின் எதிர்மறைப் பொருளான அருத்தாபத்தியானும் தெரியவருகிறது.

இனி, கீதையிலுள்ள இரு சுலோகங்கள் வருமாறு:

ஸ்ரீ: 3—25.

ஸக்தா கர்மண்ய வித்வாம்ஸோ யதாகுர்வந்தி பாரத
குர்யாத் வித்வாம்ஸ்ததா ஸக்தச்சிகீர்ஷுர் லோகசங்க்ரஹம்

ஸ்ரீ: 3—26.

நபுத்திபேதம் ஜனயே தஜ்ஞானும் கர்மஸங்கினும்
ஜோஷயேத் ஸர்வ கர்மாணி வித்வான்யுக்த: சமாசரன்

(பொருள்) பாரதா! கர்மத்தில் பற்றுள்ள பாமரர் எவ்வாறு கர்மத்தைச் செய்கிறார்களோ, அவ்வாறே ஞானியும் உலகை நல்வழிப்படுத்த விரும்பியும் பலனை விரும்பாமல் கருமம்புரிதல் வேண்டும். ஞானியானவன், கர்மத்தில் பற்றுள்ள அவிவேகிகளுக்கு புத்திமாருட்டத்தை உண்டாக்க்குதல் கூடாது. அறிவாளி சம புத்தியுடன் கூடினவனாய், எல்லாக் கருமங்களையும் தான் நன்றாய் அனுஷ்டித்துப் பிறரையும் அக்கருமங்களில் கூட்டிவைக்கவேண்டும்.

கர்மத்தில் பற்றுவிட்ட ஆத்ம ஞானிகள், இவ்வுலகில் ஒரு கருமத்தைச் செய்து அதன்பலனை அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையில்லாதவர்களாயிருக்கிறார்கள். என்றாலும், பாமரமக்களை நல்வழிப்படுத்துவதற்கு வேண்டியும், தாங்கள் முன்மாதிரியாகக் கர்மங்களைச் செய்துகாட்டக் கடமைப் பட்டுள்ளார்கள். மேலும் உலக சுகங்களை விரும்பாத மெய்யறிவுடையார், கர்மங்களைச் செய்து முன்னேற்ற மடையவிரும்புகின்ற பாமரமக்களுக்கு, கர்மத்தைக் காட்டிலும் வேறு ஞானசாதனமிருப்பதாகத் தோற்றுவித்து அவர்களுக்கு புத்திமாருட்டத்தை உண்டாக்குதல் கூடாது. அவ்வாறு செய்யின், அஞ்ஞானிகள் ஆத்மஞானமும் அடையாமல் கர்மபலனும் கிடைக்கப்பெறமல், இரண்டுங் கெட்டவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

ஆகையால் ஞானிகள், இப்படிப்பட்ட அவிவேகிகள் கெட்டுப்போகாமலிருத்தற் பொருட்டு, கர்மத்தில்பற்றுள்ள

அவர்கள், கர்மங்களையாவது சரிவரச் செய்து பலனடைவதற்காகத் தாங்களும் கர்மங்களைச் செய்தும், செய்வித்துக் காட்டியும் அவர்களை முன்னேற்றமடையச் செய்தல் வேண்டும் என்பது பொருள். — இராமாநுஜர்.

**457. மனநலம் மன்னுயிர்க் காக்க மினநலம்
எல்லாப் புகழுந் தரும்.**

(பொ-ள்): நிலைபெற்ற வுயிர்கட்கு மனத்தது நன்மை செல்வத்தைக் கொடுக்கும்; இனத்தினது நன்மை, அதனோடு எல்லாப் புகழையுங்கொடுக்கும்.

பொருந்திய உயிர்கட்கு மனத்தின்நன்மை மேலானது; அவற்றுடன் தான் சேர்ந்துள்ள இனத்தின் நன்மையும் சிறப்பாகும். — பரிமேலழகர்.

(வி-ரை): மனநலம், மன்னுயிர்க்கு ஆக்கம் தரும்-மனத்தின் நன்மையானது உடம்போடுபொருந்திய உயிர்க்கு இன்பத்தை நல்கும் எனவும், மனநலத்தின் காரணமாகிய இனநலம்-நன்மக்களின் கூட்டுறவு எல்லாவிதமான புகழையுங்கொடுக்கும் என்பதூஉம் பொருளாகும். மனநலம், காரியமும்; இனநலம், காரணமுமாகும் என்ற பொருள் 'சிற்றினஞ் சேராமை' என்ற இவ்வதிகாரப் பெயர் மாத்திரமே விளக்குகிறது அன்றியும், "மனந்தூயார்க்கெச்ச நன்றாகும்" எனவும், "மனநலத்தினாகு மறுமை" என்றபாக்களும் இதையே வற்புறுத்துகின்றன. இது, "நல்லாரிணக்கமும், நின்பூசை நேசமும் ஞானமுமே யல்லாது வேறு நிலையுளதோ?" எனப் பட்டினத்தாரும்; "அறக்குறைவை நிறைவாக்கும் சம்பத்தாக்கும், ஆபத்தைச் சுபமாக்கும் அசுபந்தன்னைச் சிறக்குமுயர்ந்தவர் கூட்ட மென்னுங் கங்கைச்சீத நீராடினர்க்குச் செந்தீ வேள்வி யிறக்கரிய தவந்தானந்தீர்த்தம் வேண்டா!" வென வாதிஷ்டமும்; "நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார் குணங்களுரைப்பதுவும் நன்றே யவரோடிணங்கியிருப்பதுவும் நன்று" என்ற ஔவையார் வாக்கும் சிறந்த உதாரணங்களாகும்.

இனி, இக் குறட்பாவில் பல வேதாந்த சித்தாந்தக் கருத்துக்களை உட்கொண்டிருப்பதால், மன நலத்தின் இயல்பும், அதனால் உண்டாகும் நன்மைகளையும் மற்றுள்ள உதாரணங்களாலும் விளக்கமாக ஆராய்ந்துணரவேண்டியது நம் கடமையாகும்.

'மன்னுயிர்க்கு ஆக்கம்' என்ற வாக்கியம், 'உயிர் இன்பத்தைப் பெறுவது' என்பது பொருளாயினும், உயிரால் தரிக்கப்படுவது உடம்பாகலின், 'உடம்பும் ஆரோக்கியத்தை அடைகின்றது' என்பதை 'மன்னுயிர்' என்ற பதம் குறிப்பாலுணர்த்துகிறது. ஆகவே, மன நலத்தால் உயிர் இன்பத்தில் திளைப்பதும், உயிர் இன்பத்தால் உடம்பும் ஆரோக்கியத்தைப்பெற்று — 'நோயற்ற வாழ்வு பெற்றுக் குறைவற்ற செல்வத்துடன் வாழ்வதைவிடச் சிறந்த செல்வம் பொருந்திய நல்வாழ்க்கை வேறு இல்லை' யென்பதாஉம் இக்குறட்பாவால் விளக்கமாகின்றது.

ஆகில், மனநலம் பெறுதற்கு உள்ளத்தில் நேர்மையான எண்ணங்களை எண்ணவேண்டும். "எண்ணத்தின் தொகுதியே மனதாக வடிவெடுக்கிறது" என்றும்; "இந்தியங்களுக்கிராசன் இதய மாமதி னெண்ணங்கள்" என்று "கைவல்ய நவநீதம்" என்ற நூலிலும், கூறுகின்றன. அவ்வாறு தூய எண்ணங்கள் மனதில் தோன்றுவதற்கு புலனடக்கமே முக்கிய காரணமாகும். ஆயின், புலனடக்கம் அமைவது மிக அரிது என்பதை நூல்கள் கூறுகின்றன. இது,

"மெய், வாய், கண், மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவாவினைக் கைவாய்
கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடுபெறும்" என்று 'நாலடியா'ரிலும்

"மெய்வாய்விழி நாசியொடுஞ் செவியாம் ஐவாய்வழி செல்லும் அவாவினையே ஒழிவாய், ஒழிவாய்" எனக் 'கந்தரனுபூதி'யிலும்,

"சிறக்கும் பதந்தருவார் திருவேங்கடச் செல்வர்செய்ய
நிறக்கும் பதந்தொழுதுய்ய வெண்ணீர் நெறியிற்பிழைத்து
மறக்கும் பதந்தியும்சேலும் அசுணமும் வண்டினமும்
பறக்கும் பதங்கமும்போல் ஐவராற்கெடும் பாதகரே"

என 'வேங்கடத்தந்தாதி'யிலும் கூறப்படுவதால், 'புலனடக்கமில்லாமையாலேயே மக்களுக்கு எல்லாவிதக் கேடுகளும் உண்டாகிவிடுகிறது' என்பது புலனாகிறது. அடுத்து, அதிக வலிமைபெற்ற புலனடக்கம் எவ்வகையால் உண்டாகுமெனின், சிறந்த நூலாராய்ச்சியாலான அறிவினாலும், தெய்வத்தின் அருளாலுமே புலனடக்கத்தைப் பெறவேண்டுமென்று எல்லா நூல்களும் கூறுகின்றன. இது, ஈசாவாஸ்ய உபநிடதம்: – 16வது மந்திரத்தில் 'இந்திரியங்களை நல்ல மார்க்கத்தில் செலுத்தும் பொருட்டு, சூரியன் மத்தியில் பிரகாச ரூபமாக விளங்கும் பரமாத்மாவை, தியானத்தால் வேண்டிக்கொள்ள வேண்டும்" என்ற விதி, சங்கரபாஷ்யத்தில் காணப்படுகிறது.

இனி, மனதில் தீய எண்ணங்கள் தோன்றுமாயின் உடம்பில் நோய் உண்டாகிறதெனவும், அவ்வுடம்பில் பொருந்தியுள்ள உயிரும் – அக்கினி சம்பந்தத்தால் குளிர்ந்த இயல்புள்ளநீர், சூட்டின் சம்பந்தத்தை அடைவதுபோன்று சார்ந்த தன் வண்ணமாந்தன்மையுடைய உயிரும், துன்பத்தின் சம்பந்தத்தை அடைந்து விடுகிறதெனவும், பிரமாண நூல்கள் விளக்குகின்றன.

ஆகையால், எந்த நிலையிலும், நல்ல எண்ணத்திலும், நல்லோர் கூட்டத்திலும் ஈடுபட்டு சமாதானசித்தத்தில் மனதை நிலைப்படுத்தினால், அதுவே 'உயர்ந்த வாழ்க்கையின் சாதனமாகும்' என்ற பொருள்பட,—

"சுத்தமுற மனந்தெளியி லுடலிலே யானந்தந்தோன்று
நிற்கு
மெத்துமதி யுதித்தக்கால் உலகெல்லாம் நன்றாக விளங்
கிடாதோ

சத்துவமா மனந்தெளியிற் பிராணவாயுவு மொழுங்கிற் சரித்துலாவு
முய்த்துள வன்னமுமொழுங்கிற் சீரணிக்கு மதனுனே யொன்றுந்தோன்று"
என்ற ஞானவாசிஷ்டத்தின் உபதேசத்தாலும் இக்குறட்பாவின் 'மனநலத்தின் மாண்பு' விளக்கப்படுகின்றது.

இனி, 'மனத்தின் நன்மையே மேலானது' என்பதற்குக் கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:—

கீ: 7—16

மன:ப்ரசாத: ஸௌம்யத்வம் மௌனமாத்ம விநிக்ரஹ:
பாவஸம் சுத்திரித்யே தத்தபோ மானஸமுச்யதே.

(பொருள்): மனத்தின் தெளிவு, 'அன்புடைமை, மௌனம், தன்னடக்கம், பரிசுத்தமான நோக்கம்' என்ற இவைகள், 'மனத்தார் செய்யும் தவம்' என்று கூறப்படும்.

மனம் குழப்பமில்லாமல் சந்தோஷமாக அமைதியாயிருத்தல் மனப்பிரசாதம். நல்ல எண்ணத்துடனும், தீய எண்ணத்தைச் சிந்திக்காமலும், இடைவிடாது ஈஸ்வர சிந்தனையி லாழ்ந்திருப்பதும் 'மௌனம்' எனப்படும். சிந்தையடக்கத்தால் வாயடக்கமும் மெய்யடக்கமும் தானே வந்துவிடும். விவகார வேளையிலும் இந்த உணர்ச்சி தூயதாயிருக்கவேண்டும். — சு. சித்பவாநந்தா.

505. பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.

(பொ-ள்): பிறப்புக் குணம் அறிவென்பனவற்றான் மக்களெய்தும் பெருமைக்கும், மற்றைச் சிறுமைக்கும் உரைகல்லாவது தாந்தாஞ்செய்யும் கருமமே; பிறிதில்லை.

மக்களது பெருமையுஞ் சிறுமையுந் தப்பாமலறியலுறுவார்க்குப் பிறகருவிகளு முளவாயினும், முடிந்த கருவி 'செய'லென்பது தேற்றேகாரத்தாற்பெற்றாம்.—பரிமேலழகர்

(வி-ரை): உலகில், மக்கள் மேன்மை யடைவதற்கும் கீழ்மை யடைவதற்கும், அறிவுடைமையும் அறிவின்மையுமே காரணமாகிறது. அறிவுடை ஒருவன், அறவொழுக்கத்துடன் நல்ல காரியங்களைச் செய்து, எல்லாவிதமான பெருமையையும் இன்பத்தையும் பெறுகிறான். அறிவிலி ஒருவன், தன் மனம் போனவாறு அறவொழுக்கத்துக்கு மாறுபாடான தவறுகளைச் செய்து கீழ்மை யடைவதுடன, நீங்காத துன்பத்தையும் உண்டுபண்ணிக்கொள்கிறான். ஆகவே, ஒருவன் அடையும் இன்பத்துக்கும், அல்லது துன்பத்துக்கும், அவ்வாறே பெருமைக்கும், மற்றைச் சிறுமைக்கும் காரணமாயுள்ளது. அறிவும் அறியாமையுமேயாகும். இதையே, "அறிவுடையார் எல்லாமுடையார், அறிவிலார் என்னுடையரேனுமிலர்" என்ற 43)-வது குறளினும் கூறப்படுகிறது. மற்றும், மக்களால் மனம், வாக்கு, உடம்பு' ஆகிய முக்கரணங்களாலும், எப்பொழுதும் தொழில் செய்துகொண்டே இருக்கிறார்கள் அவர்கள், அத்தொழில்களால் உண்டாகும் இன்பமோ அல்லது துன்பமோ அடைந்தே தீரவேண்டியவர்களாகிறார்கள்.

ஏனெனில், தொழில் செய்யாமல் ஒருகண நேரமும் சும்மா இருக்க முடியாது. இது உடம்பை எடுக்கச்செய்த 'இயற்கையின்செயல்' என பிரமாணநூல்கள் கூறுகின்றன.

இதற்கு உதாரணமாக, கீதை 3-அ; 5-வது சுலோகத்திலும் காணப்படுகிறது. மற்றும், அறிவுடை ஒருவன் நன்மையான வினைகளைச் செய்து பெருமையை அடையும்பொழுது, நன்மை செய்யும் விதம் அறியாத அறிவிலி ஒருவன், நன்மை செய்யாவிடினும் வெறுமனே இருப்பதில்லை. அவனும் உலகில் ஏதோவொருவினையைச் செய்துகொண்டே இருக்கிறான். அத்தொழில் அவனுக்குத் தீமையாய்முடிந்து விடுகிறது. இதற்குச் சான்றாக, "ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும் தாம்புக் கழுந்துமளறு"— பேதையானவன் ஒரு பிறப்பில்செய்த வினையால், எழுபிறப்பிலும் தீராத நிரயத் துன்பத்தைத் தேடிக்கொள்கிறான் — என்பதாக 835-வது குறளிலும், மற்றும் "அறிவிலார் தாந்தம்மைப்

பீழிக்கும் பீழை செறுவார்க்கும் செய்தலரிது"— அறிவில்லாதார் தாங்கள் செய்துகொள்ளும் காரியங்களால் தாமே தம்மை வருத்திக்கொள்ளும் துன்பங்களை, 'தமது பகைவர்களாலும் செய்தல் அரிது' என 843-வது குறளில் கூறுவதாலும், அறிவுடையார் செய்யும் நற்காரியங்களால் இம்மையில் பெருமையும் மறுமையில் பேரின்ப இலாபத்தையும் அடைகிறார்கள் என்பதூஉம், அறிவில்லாதார் தாங்கள் செய்யும் தீய காரியங்களால் இம்மையில் துன்பத்தையும் மறுமையில் நிரயத்தையும் அடைகிறார்கள் என்பதூஉம் மேற்கூறிய தெய்வப் புலவரின் பாக்களால் அறிகிறோம். அன்றியும்,

"நன்னெறிக் கட்டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானு — நிலையினின்
மென்மே லுயர்த்திடச் செய்வா னுந்தன்னை
தலையாகச் செய்வானுந் தான்"

என்ற நாலடியார் பாவும் இதற்குச் சான்றாகும்.

இனி, கீதையிலுள்ள இரு சுலோகங்கள் வருமாறு:—

கீ: 6—5—

உத்தரேதாத் மனாத் மானம் நாத்மானம வசாதயேத்
ஆத்மைவ ஹ்யாத்மனோ பந்துராத் மைவரிபுராத்மன:

கீ: 6—6—

பந்துராத் மாத்மனஸ் தஸ்யயேனாத் மைவாத்மனாஜித:
அனாத் மனஸ்து சத்ருத்வே வர்த்தே தாத்மைவ சத்ருவத்

(பொருள்): தன்னைத் தன்னாலே உயர்த்திக்கொள்க; தன்னைக் கெடுத்துக்கொள்ளலாது. ஏனெனில், தானே தனக்கு நண்பனாகவும், தானே தனக்குப் பகைவன்போலவும் செய்துகொள்ளுகிறான். மற்றும், தன்னைத்தான் வென்றவனுக்குத் தானே உறவினன்; தன்னை வெல்லாதவனுக்குத் தானே பகைவன் போலப் பகையாம்.

சமுசார பந்தமாகிய பெருங்கடலில் மூழ்கிக் கிடப்பவர்கள், அக்கடலினின்றும் தங்களைத் தாங்களே கரையேற்றிக்கொள்ளல் வேண்டும். அதாவது யோக ஞான சாதனங்களிலும், சாது சங்கப் பழக்கங்களினாலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளல் வேண்டும். ஒருவன், மோக்ஷம் அல்லது நரகத்தையும், இன்பம் அல்லது துன்பத்தையும், பெருமை அல்லது சிறுமையும் அடைவதற்குத் தன் சுய முயற்சியே காரணமாவதால், தானே தனக்கு நண்பனாகவும் தானே தனக்குப் பகைவனாகவும் செய்துகொள்ளுகிறான். மேலும், எவன் தேகேந்திரியாதிகளை வென்று, யோக ஞான சாதனங்களில் முயன்று தன்னை முத்தி நிலைக்குத் தகுதியுள்ளவனாகச் செய்து கொள்ளுகிறானோ, அவன் தனக்குத் தானே நண்பனாகிறான் மற்று, எவன் தன் இந்திரியங்களை வெல்ல முடியாமல் தன்னைக் கீழ்நிலைக்கு ஆளாக்கி விடுகிறானோ, அவன் தனக்குத்தானே பகைவனாகிறான். அதாவது, வெளியிலுள்ள பகைவன் தனக்கு எவ்வாறு தீமையைச் செய்வானோ, அவ்வாறு தானே தனக்குத் தீமை செய்துகொள்ளுகிறான். — சங்கரர்.

(குறிப்பு): மேற்கூறிய சுலோகங்களில் 'தானே தனக்குப் பகைவனாகவும், தானே தனக்கு நண்பனாகவும் செய்து கொள்ளுகிறான்' என்ற நிச்சயம் கூறப்படுகின்றன. ஆகவே, தன்னை உயர்த்துவது வேறொரு நண்பனுமல்ல; தன்னைக் கெடுப்பது வேறொரு பகைவனுமல்ல, தானே தனக்குப் பெருமையை யுண்டாக்குபவனும், தானே தனக்குச் சிறுமையை உண்டாக்கிக் கொள்பவனும் ஆகின்றான் என்பது புலனாகிறது.

605. நெடுநீர் மறவி மடிதுயி லான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

(பொ-ள்): மடியும் விரைந்து செய்வதனை நீட்டித்துச் செய்யுமியல்பும் மறப்பும் துயிலுமாகிய, இந்நான்கும் இறக்கு மியல்பினை யுடையார் விரும்பி யேறும் மரக்கலமாகும்.

"கால நீட்டத்தையுடைய செயல் முதல் மூன்றும் தாமத குணத்திற்றோன்றி உடனிகழ்வனவாகலின், மடியோடு ஒருங்கெண்ணப்பட்டன. இறக்குமியல்பு நாளுலத்தல். இவை, துன்புறு நீரார்க்கு இன்புறுத்துவதுபோன்று காட்டி, அவர் விரும்பிக்கொண்ட வழித் துன்பத்திடை வீழ்த்தலின், நாளுலந்தார்க்கு ஆக்கம் பயப்பது போன்று காட்டி அவர் விரும்பியேறிய வழிக் கடலிடை வீழ்த்துங் கலத்தினை யொக்குமென்னும் உவமைக் குறிப்புக் 'காமக்கல' னென்னுஞ் சொல்லாற் பெறப்பட்டது." —பரிமேலழகர்.

'காமக்கலன்' என்பதற்கு, 'விரும்பிப் பூணுமாபரணமென்றுரைத்தார்—மணக்குடவர்.

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:

கீ: 18–28.

அயுக்த: ப்ராக்ருத: ஸ்தப்த்த: சடோ நைஷ்க்ருதிகோ஽லஸ:
விஷாதீதீர்க்கஸூத்ரீ ச கர்த்தா தாமஸ உச்யதே.

(பொருள்:-) நிலைபெறாத மனமுடையவனும், நல்லொழுக்கமில்லாதவனும், வஞ்சகனும், தீய காரியத்தில் முயல்பவன் அல்லது பழிகாரனும், சோம்பேறியும், தன்னம்பிக்கையிழந்தவனும், காலம் நீடிப்பவனும் ஆகிய செயலில் உள்ளவன் 'தாமஸன்' என்று சொல்லப்படுகிறான்.

அடக்கமும், ஒடுக்கமும், சாதனமும் இல்லாத மனமுடையவன் 'அயுக்தன்' என்று கூறப்படுகிறான். அறிவு வளர்ச்சியடையப் பெறாமல் பாமரனாகவுள்ளவன் 'பிராகிருதன்' ஆகிறான். வணங்கவேண்டியவிடத்து வணங்காதிருப்பவன், கருவமுடையவன் அல்லது முரடனாகிறான். ஒன்றைச் செய்ய வல்லமையிருந்தும் அவற்றை மறைத்துவைத்துக் கொள்பவன், வஞ்சகனாகிறான். மக்களிடையில் வேண்டுமென்றே பகைமையை உண்டு பண்ணுபவன், பழிகாரனாகிறான். செய்யவேண்டிய கடமைகள் யாதொன்றையும் செய்யாமல் இருப்பவன் சோம்பேறியாகிறான். சதா துன்

பத்திலேயே அழுந்தியிருப்பவன் தன்னம்பிக்கையை யிழந்தவனாகிறான். துன்பப் படுமவனிடத்துள்ள பேராற்றல்களெல்லாம் வீணே கழிந்து மறைந்துவிடுகின்றன.

ஒரு நாளில் முடிக்கவேண்டிய வேலையைக் காலம் நீட்டிக்கொண்டு போகிறவன், நெடு நீர்மையுடையவன் அல்லது வீணே காலத்தை நீட்டி மக்கட் சமுதாயத்தில் கடைப்பட்டவன் ஆகிறான் ...

இவ்வுபதேசம், துன்பத்தால் மனக் கலக்கமடைந்த அர்ஜுனன் பொருட்டு எழுந்ததாயினும், மக்களாய்ப்பிறந்த ஒவ்வொருவருக்கும் மேற்குறித்த குணங்கள் அவர்களின் வாழ்க்கையின்பத்தைக் குன்றச் செய்வதால், ஒவ்வொருவருக்கும் இவ்வுபதேசம் பொருந்துமென்பதை யூகித்து அறிய வேண்டியது எல்லோருடைய கடமையாகும்.

—சு. சித்பவாநந்தா.

(குறிப்பு):— தெய்வப்புலவர், 605-வது குறட்பாவில் மக்களுக்குக் கேடுவிளைவிக்கும் தன்மையுள்ள குணங்களை நான்காகக் கூறினார். அதே இயல்புடன் கூடிய குணங்களைப் பின்னும் நான்கினைச் சேர்த்து, கீதையில் எட்டுவகைப் படுத்திக் கீதாசிரியர் கூறியிருப்பதும் பொருத்தமானதே யாகும்.

**616. முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.**

(பொ-ள்): ஒருவன் மாட்டுளதாய முயற்சி, செல்வத்தை வளர்க்கும்; அம்முயற்சி யில்லாமை வறுமையை அடைவித்து விடும். —பரிமேலழகர்

(வி-ரை): "முயற்சி திருவினையாக்கும்" என்ற குறட்பாவானது, பல சிறப்புப் பொருட்களை உள்ளடக்கி நிற்கும் ஓர் வாக்கியமாகும். அதன் இலக்கணத்தை விரிவாக ஆராய்ந்தறிய வேண்டியது நம் கடமையாகும்.

'முயற்சி' என்பது, சோம்பலின்றிப் பல அரிய செயல்களைச் செய்து முடிக்கும் திறமையாகும். ஆனால், அம்முயற்சி தீய தன்மையிலும், நல்ல தன்மையிலும் மக்களால் கையாளப்படுகிறது. ஆயினும், இங்கு 'திருவினை உண்டாக்கும் முயற்சி' என்பதனால், தீயமுயற்சிகளாகிய, 'திருடுதல், சூதாடுதல், கள்ளுண்ணல், விபசாரம் புரிதல், வஞ்சனை செய்தல்' போன்ற இன்ன பிறவுமாகிய தீய செயல்களை விடுத்து, நற்பலனை உண்டாக்கும் நன் முயற்சியைக் குறிப்பிடுவதை, அருத்தாபத்தியளவையால் அறியலாம்.

மற்றும், முயற்சியானது, செல்வத்தைக் கொடுக்கும்; இலக்குமியின் அருளையும் உண்டாக்கும். இதற்கு மாறுபாடாகிய சோம்பலானது, வறுமையை உண்டாக்கும்; இலக்குமியின் 'மூத்தாளும்' அவனிடத்தில் குடிபுகுவள். இக்கருத்தை தெய்வப்புலவர், இதற்கடுத்துவரும் பாவிலேயே "மடியுளான் மா'முகடி' என்ப — மடியிலான் தாளுளாள் தாமரையினாள்" எனக்கூறி முடித்தார். மேலும் முயற்சியானது, மக்களுக்கு எல்லா நன்மைகளையும் உண்டாக்கும் ஓர் 'கற்பகத்தரு'வுக்குச் சமானமாகும். மனிதனை மனிதனாக வாழச்செய்வதும் அதுவே! இதை "முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்" என்ற பழமொழியாலும் அறியலாம்.

அன்றியும், முயற்சியுடையவர்கள், செல்வப் பெருக்கும், இலக்குமி கடாட்சமும், வசீகரமும், நோயின்மையும், செயலாற்றும் வன்மையையும் பெற்று மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார்கள். சோம்பலுடையார், நோய்வாய்ப்பட்டும், உலக வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்கத் தகுதியின்றியும், யாதொரு செயலையும் செய்துமுடிக்கச் சக்தியற்றவர்களாயும் மகிழ்ச்சியின்றிக் காணப்படுகிறார்கள்.

மேலும் ஒவ்வொருவரும் முயற்சிசெய்தே வாழவேண்டும் என்பது அறநூல்களின் நீதியாகுமெனவும், அந்நியர் உழைப்பைக்கொண்டு ஒருவன் உயிர் வாழ்வது 'பாப வாழ்க்கை' யெனவும், அது தெய்வ சம்மதமல்லவெனவும்

பல நூல்களில் பல சான்றுகளுடன் கூறப்படுகின்றன. இவ்வுண்மையை 'ஈசாவாஸ்ய உபநிடத்'தத்தில் "ஈசாவாஸ்யம்...." என்ற முதல் மந்திரத்தின் இறுதியில் வரும், "கஸ்யஸ்வித் தனம் மாக்ருத" என்ற மூன்று பதங்களில் கூறப்படுகிறது. அதன் பொருள்: "எவனும் தனதல்லாத அந்நியர் பொருளை, எக்காரணத்தைக் கொண்டும் விரும்பாமலும், அனுபவிக்காமலும், முயற்சியால் உழைத்து உயிர் வாழவேண்டும்" என்பதாக ராமானுஜர் வியாக்யானம் கூறுகிறார்.

ஆனால், நமது நாட்டிலோ, பெரும்பாலும் தாம் உழைக்காமலேயே பிறருடைய உழைப்பால் உயிர் வாழ்வதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள மக்கள் பலர் இருப்பதால்தான், நம்நாடு இன்று பலதுறைகளிலும் முன்னேற்றமின்றி, வறுமை மிகுந்து, மக்கள் 'பசிப்பிணியால் வாடும் நிலைக்கு' வந்துள்ளது என்பதை நாம் மறக்கலாகாது.

ஆதலால், அறிவுடைப் பெருமக்கள் யாவரும், முயற்சியால் பொருள் தேடுவதுடன் அறவோர்க்களித்தும், அழகிய தண்ணளியுடைய உத்தமர்கட்கு உதவியும், தவத்தின் மிக்க புண்ணியசீலர்களை வழிபட்டும், வந்த விருந்தினரை உபசரித்தும் புகழ்பட வாழ்வதே 'வாழ்வாங்குவாழும் தெய்விக வாழ்க்கை'யாகுமென்பது, தெய்வப்புலவர் கூறியுள்ள மேற்குறித்த பாவால் விளங்குகிறது.

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு.

கீ: 3—8—

நியதம் குரு கர்மத்வம் கர்ம ஜ்யாயோஹ்யகர்மண:
சரீரயாத்ராபி ச தே ந ப்ரஸித்த்யேதகர்மண:

(பொருள்): நீ, விதிக்கப்பட்டுள்ள கடமையைச் செய். கருமம் செய்யாமையினும் கருமம் செய்தல் சிறந்தது. கருமம் செய்யாத நிலையில், உனக்கு உடலை நடத்துதலும் கூட முடியாமற்போகும்.

'நித்தியகர்மம்' என்பது, எவன் எந்தத்தொழிலை மேற் கொண்டுள்ளானோ, அது அவனுக்கு நித்ய கர்மமாகும். உண்ணல், உறங்கல், நீராடல் போன்றவைகள் எல்லா மக்களுக்கும் நித்ய கர்மமாகும். இனி வேதத்தில், எந் தெந்த அதிகாரிகளுக்கு எந்தெந்தக் கர்மங்கள் விதிக்கப் பட்டுள்ளனவோ, அவைகளைப் பலன் கருதாமல் செய்வதும் அவர்களுக்கு நித்திய கர்மங்களாகும். மற்றும் ஒவ்வொரு வனும் தான் நியாயமாய் சம்பாதித்துள்ள திரவியங்களை, சற்கருமப் பிரவிர்த்தியில் செலவு செய்து தானும் அனுபவிப் பதினால் சித்தசுத்தியும், சித்த சுத்தியினால் ஞானமும் உண் டாகிறது. இவ்வாறு சற்கருமங்கள் செய்வதினால் ஞான முண்டாகிறபடியால், அதற்குரிய கருமம் 'சிரேஷ்ட' மென்று கூறப்பட்டது. ஞானாதிகாரியுங்கூட, ஞான நிஷ்டைக்கனுகூலமான தேகம் நிலைத்திருப்பதின்பொருட்டு, அத்தியாவசியமான கர்மங்களைச் செய்யவேண்டியவ னாகிறான். ஆகையால், கர்மமானது ஞானத்திற்கு முந்திய சாதனமாயிருப்பதால், கர்மஞ்செய்தலே மேலென்று சொல்லப்பட்டது. —இராமானுஜர்.

(குறிப்பு): தெய்வப்புலவர் மேலே கூறிய 616-வது குறட்பா, மக்களின் நல்வாழ்க்கைக்கும், மேன்மையடை வதற்கும் சிறந்த உபதேசமாகும். இதை வற்புறுத்தியே ஸ்ரீ கண்ணபிரானும் இந்த சுலோகத்தால் வலியுறுத்திக் கூறு வதும், மக்களைத் தூண்டியெழுப்பும் சிறந்த அறிவுரை யாகும்.

**619. தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.**

(பொ-ள்): முயன்றவினை ஊழ்வினையால் கருதிய பய னைத் தாராதாயினும் முயற்சி செய்தற்கிடனாகிய உடம்பு வருத்திய வருத்தத்தின் கூலியளவுதரும்; பாழாகாது.

தெய்வத்தானாயவழித் தன்னளவின் மிக்க பயனைத் தரு மென்பதும், இல்லையேல் பாட்டுக்குத்தகுந்த கூலியாவது

கிடைக்குமாகலானும், தெய்வம் நோக்கியிராது; முயற்சிக்க வேண்டும் என்பது கருத்து. — பரிமேலழகர்.

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:—

கீ: 2—40—

நேஹாபிக்ரம நாஸோऽஸ்தி ப்ரத்யவாயோ நவித்யதே
ஸ்வல்ப்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதேம ஹதோபயாத்

(பொருள்): இதில் முயற்சி வீணாதல் இல்லை. எதிர்மாறான பலனும் உண்டாவதில்லை. இந்த தர்மத்தின் சிறிதும்கூட, பெரிய பயத்தினின்றும் காப்பாற்றுகிறது.

ஒருவன் பயிர்த்தொழில் செய்தலில் – சில சமயங்களில் அப்பயிர்கள் கெட்டு விடுவதால் விவசாயிகள் பட்டபாடு வீணாதல்போலும்–நோய் நீங்குவதற்கு வைத்தியன் மருந்து கொடுக்கிறான். அம்மருந்தே சில தவறுதல்களால் நோயை வளர்ப்பதுபோலும், நிட்காம கர்மத்தில் செய்யும் முயற்சி ஒருபோதும் வீணாதலும் விபரீத பலனும் உண்டாவதில்லை. அது இறப்பு பிறப்பென்னும் பெரிய பயத்தை நீக்குகிறது.

குறிப்பு:— இதில் தெய்வப்புலவர்–இம்மை யின்பத்துக்குரிய முயற்சியில் மக்களைத் தூண்டுதல் செய்கிறார். கீதாசிரியராகிய கண்ணபிரான் மறுமை யின்பத்துக்காகிய முயற்சியில் ஏவுகிறார். இந்த இருவித முயற்சிகளும் மக்களுக்கு நன்மைக்கே காரணமாகிறது என்பது விளங்குகிறது.

636. **மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்**
யாவுள முன்னிற் பவை.

(பொ-ள்): இயற்கையாகிய நுண்ணறிவோடு செயற்கையாகிய நூலறிவும் உடையராயினார்க்கு மிக்க சூழ்ச்சிகளாய் முன்னிற்பவை யாவை உள? முன்னிற்றல் மாற்றார் சூழ்ச்சியாயின தஞ்சூழ்ச்சியால் அழியாது நிற்றல்.

தங்கள் நுண்ணறிவுடன் நூலறிவுப் பிரமாணமும் உள்ளவர்கள் பகைவர்கள் சூழ்வனவற்றைத் தாமறிந்து நீக்கியும், அவரறிந்தழியாதவாறு தாம் சூழ்வரென்பது கருத்து.

—பரிமேலழகர்.

(வி-ரை): உயர் பிறப்பாகிய மக்கட் பிறவியினர்களுக்கு 'நுட்பபுத்தி, மந்தபுத்தி' என இருவிதத் தன்மையுடன் அறிவு அமைந்துள்ளன. அதிலும், 'நுட்பம், அதிநுட்பம்; மந்தம், அதிமந்தம்' என உட்பிரிவுகளும் உண்டு. அதில், நுட்ப அறிவு படைத்தவர்களுக்கு, எதையும் விரைவில் அறிந்துகொள்ளும் தன்மையுண்டு. விஞ்ஞான ஆராய்ச்சி, தத்துவஞான ஆராய்ச்சி முதலிய ஆராய்ச்சிகள், நுட்ப அறிவு படைத்தவர்களுக்கே சாத்தியமாகிறது. மற்றும், எந்த உயரிய தொழிலுக்கும் மதிநுட்பம் உடையவர்களையே உலகம் விரும்புகிறது; தேடுகிறது. ஆனால் மதிநுட்பத்தோடு நில்லாமல் தெய்வப்புலவர், 'நூற்பிரமாணமும் உடையராயிருத்தல் வேண்டும்' என்ற பொருளில், "மதிநுட்பம் நூலோடுடையார்க்கு" எனக்கூறினர். இது முன்னோர்களின் அனுபவ சாத்தியமான கொள்கையேயாகும்.

இவ்வுயரிய நியமமானது, இக்காலத்தும் முற்காலத்தும் எக்காலத்தும், 'நூற்பிரமாணத்தோடு பொருந்திய வாழ்க்கையே மாந்தர்க்குச் சிறப்பை நல்கு' மெனவும், 'நூற்பிரமாணத்துக்கு மாறுபட்ட வாழ்க்கை, நிலையான சிறப்பை நல்கா' தெனவும், எல்லா நூற்களிலும் வற்புறுத்திக் கூறப்படுகின்றன. இது,-

"கல்லார் பலர்கூடிக்காதலித்து வாழ்கினுநூல்
வல்லானொருவனையே மானுவரோ-அல்லாரு
எண்ணிலாவான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலாவாமோ விளம்பு"

என்ற பாவில் வானில் பல விண்மீன்களிருப்பினும் ஒரு பூரணச் சந்திரனுக்கு ஈடாகாதது போலவும்,

"இருவிழிகள் வான்முகத்தி லிருந்தாலும் வானிரவி
யெழுந்தாலன்றிக்
கருதரிய பல்பொருளுங் காண்டலரிதா முலகிற் கண்
போல் யார்க்கும்
பெருகிய செல்வங்கீர்த்தி பெற்றுலு நூற்கேள்வி
பயில்வார்க்கன்றி
இருவினை புண்ணிய பாவமிம்மை மறுமையும் வீடும்
தெரியாவன்றே"

என்ற இவ்விருத்தப்பாவால், கண்களிரண்டும் முகத்தில் சரியானமுறையில் இருந்தும், கதிரவன் இல்லையேல் ஒரு பொருளையும் காணமுடியாததுபோல — செல்வம், கீர்த்தி முதலிய சம்பத்துக்கள் நிறைந்திருப்பினும், நூற்கேள்வி யாகிய கதிரவனின்றேல், 'அவர்கள் இருட்டில் வாழ்பவர் களுக்குச் சமமாவார்கள்' என்ற உவமை தெரிகிறது.

ஆகவே, உலகில்நல்வாழ்க்கைவாழ்வதற்கும் மறுமைப் பேறடைவதற்கும், விதிவிலக்குணர்ந்து அறநெறி வழுவாது உயிர்க்குறுதிபயக்கும் சன்மார்க்கமான செயல்களை நிச்ச யித்துக் கடைப்பிடிப்பதற்கும், 'நூற்பிரமாணத்தைத் தாயக மாகக் கொண்ட நுண்ணறிவுடையோர்க்கே சாலும்' என்ற துணிவுபற்றி, "அதிநுட்பம் யாவுளமுன்னிற்பவை" எனக் கூறினர்.

மற்றும், நூலறிவுடையோர் கூடிவாழ்வதையே 'தேவ போக இன்பத்தினும் மேலான'தென்ற பொருள்பட,

"தவலருந்தொல் கேள்வித் தன்மையுடையார்
இகலிலரெஃ குடையார் தம்முட் குழீஇ
நகலினினிதாயிற் காண்பாயகல் வானத்
தும்பருறைவார் பதி" என்ற நாலடியார் வெண்பா

விலும், அறியப்படுகிறது.

இனி, கீதையிலுள்ள இரு சுலோகங்கள் வருமாறு:

கீ: 16-23.

யஃ சாஸ்த்ரவிதி முத்ஸ்ருஜ்ய வர்த்ததே காமகாரத:
நஸ ஸித்தி மவாப்னோதி நஸுகம் நபராங்கதிம்

கீ: 16-24.

தஸ்மாச்சா ஸ்த்ரம் ப்ரமாணம்தே கார்யாகார்யவ்யவஸ்திதௌ
ஜ்ஞாத்வாசாஸ்த்ர விதானோக்தம் கர்மகர்த்து மிஹார்ஹஸி

(பொருள்) எவன் சாஸ்திர விதியை விட்டு ஆசை வாய்ப்பட்டுத் தொழில்புரிகிறானோ, அவன்சித்தியை அடைவதில்லை; இன்பத்தையடைவதில்லை; உயர்ந்த நற்கதியை அடைவதில்லை. ஆகையால் ஒருவன் செய்யத்தக்கசெயலையும் செய்யத்தகாத செயலையும் நிச்சயிப்பதில், சாஸ்திரமே பிரமாணமாகிறது. பவ சாகரத்தினின்றும் விலகுவதற்கு சாஸ்திர விதியையுணர்ந்து வினையாற்றுவதற்கு நீ உரியவனாகிறாய்,

(குறிப்பு:) நூற்பிரமாணத்துக்கு மாறுபடாமல், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தொழில்களை நேர்மையாக நடத்திவருவார்களாயின், உலகில் யாதொரு பகைமையும் மனோ வேற்றுமையுமின்றி சமாதான வாழ்வுபெற்று சுகத்தையடைவார்க ளென்பது தெளிவாகிறது. முதல் சுலோகம் எதிர்மறைமுகத்தாலும், அடுத்த சுலோகம் விதிமுகத்தாலும், நூற்பிரமாணமே மக்கள் நல்ல தொழில்களைச் செய்து வாழ்வதற்கு உற்ற நற்றுணையாமென்பதை இவ்விரு சுலோகங்களும் வற்புறுத்திக் கூறப்படுதல் புலனாகிறது.

669. துன்பமுற வரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.

(பொ-ள்): ஒருவினையைச் செய்யுமிடத்து முதற்கண் மெய்ம் முயற்சியாற்றமக்குத் துன்பம் மிக வருமாயினும், அது நோக்கித் தளராது முடிவில் இன்பந்தரும் நலமான. வினைகளைத் திட்பமுடையராகச் செய்க.

(வி-ரை): ஒருவன் தன் வாழ்நாளில் தனக்குப் பிற் காலத்தில் இன்பம் விளைவிக்கும் நற்காரியங்களைச் செய்து கொள்ளவேண்டுமெனவும், அவ்வினைகளை யாற்றுங்கால் அதற்கிடையூராகப் பல துன்பங்களும் எதிர்ப்புகளும் வந் தாலும் அவைகளைப் பொருட்படுத்தாது துணிந்துசெய்தல் வேண்டுமெனவும், "செய்க" என வியங்கோள் வாக்கிய முகத்தால், தெய்வப்புலவர் மக்களை உற்சாகப்படுத்திச் செயல்புரியத் தூண்டுகிறார்.

மேற்கூறியவாறு வள்ளுவர் ஆணைப்படி தனக்குப் பிற்காலத்தில் இன்பமளிக்கும் நற்காரியங்களைச் சாதிக்க வேண்டின் — அறிவு, ஆற்றல், ஆண்மை முதலிய தீரத்துவ மான இயல்புகள் அமைதல்வேண்டும். அஃதின்றிய கோழைத் தனமுடையவனால் யாதொரு நன்மையான செய லையும் தனக்குச் செய்துகொள்ள முடியாது. இதனை, "செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் செயற்கரிய செய் கலாதார்" என, 26-வது குறட்பாவாலும் கூறினார்.

இவ்வாறு செயற்கரிய செயல்களைப் பல துன்பங்களுக் கிடையில் செய்து முடித்தவர்களின் வீரச் செயலுக்கு உதா ரணமாக:— இராமகாவியத்தில், அனுமன் கடல் கடந்து மிக்க பலசாலிகளான இராக்கதக் குழுவில் பிணிப்புண்டு வருந்திய சீதையின் இருப்பைக்கண்டு மீண்டுவந்ததும், அவ் வாறே அண்ணல் காந்தியடிகளாரும் அந்நியர் ஆட்சியில் பிணிப்புண்டு வருந்திய நம் இந்தியாவைச் சுதந்திர நாடாக் கியதுமே இக்குறட்பாவுக்கு ஈடு இணையற்ற சான்றாகிறது. இதன் இலக்கணத்தை குமரகுருபரரும்,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்" —என்ற "நீதிநெறி" வெண் பாவாலும் விளக்குதல் காண்க.

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:—

கீ: 18—37—

யத்ததக்ரே விஷமிவ பரிணாமேऽம்ருதோபமம்
தத்ஸுகம் ஸாத்விகம் ப்ரோக்தமாத்ம புத்திப்ரஸாதஜம்.

(பொருள்): எது ஒன்று முதலில் விஷம்போலும், முடிவில் அமிர்தத்துக்கொப்பாகவும், ஆத்மாவில் நிலைபெற்ற புத்தியின் தெளிவில் தோன்றுவதாகவும் உள்ளதோ, அந்த சுகம் 'சாத்விகமானது' என்று சொல்லப்படுகிறது. பாரமார்த்திக வாழ்க்கை முதலில் துன்பம் நிறைந்ததாகத் தென்படுகிறது; முடிவில் அது, ஒப்புயர்வற்ற சித்சுக இன்பமாக பிறவிப்பயனை அடைவதற்கு எதுவாகிறது என்பது சித்திக்கின்றது.

850. உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.

(பொ-ள்): யர்ந்தோர் பலரும் உண்டென்பதோர் பொருளைத் தன் புல்லறிவானில்லை யென்று சொல்லுவான்; மகனென்று கருதப்படான்; வையத்துக் காணப்படுவதோர் பேயென்று கருதப்படும்.

சான்றோர் உண்டென்று நிச்சயித்துக் கூறும் தெய்வக் கொள்கை, இருவினை, இம்மை மறுமை முதலியவைகளின் தன்மைகளை 'இல்லை'யென்று மறுத்து, தாங்கள் வேண்டியவாறு கூறலால், ஒப்பும் வடிவால் ஒவ்வாமையு முடைமையிற்றன் யாக்கை கரந்து மக்கள் யாக்கையிற்றோன்றுதல் வல்ல 'அலகை'யென்றுங் கூறினர். —பரிமேலழகர்.

(வி-ரை): இக்குறட்பா 'புல்லறிவாண்மை' என்ற அதிகாரத்தின் பத்தாவது குறளாகும். இதற்கு முன்னுள்ள ஒன்பது குறள்களில் புல்லறிவாளர்களின் இயல்புகளைப் பலவாறாக விளக்கிக்கூறி, அதன் கருத்துக்களையெல்லாம் சேர்த்து, 'அவர்கள் மக்கள் தோற்றம் உடையவராயினும், அவர்கள் 'பேய்'க்குச் சமானமானவர்கள்' என முடிவு கூறினர்.

அவர் அப்படிக் கூறியதின் காரணத்தைப் பரிமேலழக ரும் விளக்கிக் கூறினர். அவற்றின் சாரமாவது :

நமது முன்னோர்கள் பரம்பரையாக 'உண்மை'யென்று கருதியும், ஞானனுபவமுள்ள சான்றோர்களின் உண்மை வாக்கியங்களான தெய்வங் கொள்கை, மறுபிறப்புண்மை, பாவ புண்ணியங்களாலாகிய இருவினைப்பயன், ஆகிய இவையும், இதுபோன்றுள்ள பிறகொள்கைகளையும் 'இல்லை' யென மறுத்து, தங்களுக்குத் தோன்றியவாறு மக்களின் யுக்திக்கும், அனுபவத்திற்கும் பொருத்தமற்ற முறையில் வேண்டியவாறு பிடிவாதமாகக் கூறுவதால் 'வையத்து அல கையா வைக்கப்படும்' எனக் கூறியது பொருத்தமேயெனப் பரிமேலழகரும் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

நிற்க, இக்குறட்பாவில் தெய்வப்புலவர் கூறியுள்ள "அலகை என்ற பேய் உண்டா இல்லையா?" என்ற வாத மானது, தற்கால விஞ்ஞான உலகில் பகுத்தறிவு பெற்ற வர்களாகவுள்ள மக்களால் ஆராயப்பட்டு வருவதைப் பல இடங்களில் காண்கிறோம். சிலர், 'பேய் உண்டெ'ன்று ஒப்புகிறார்கள். சிலர், 'பேய் பிசாசு என்பது வெறும் கட்டுக்கதை' யெனவும், அது 'பாமர மக்களின் மன மயக்கமே'யாம் எனவும் நிச்சயிக்கிறார்கள். ஆயினும், தெய்வப்புலவர் அலகையின் பெயரைத் தம் அருள்வாக்கால் கூறினுரதலின், அதன் இயல்பைச் சிறிது அறியவேண்டு வதும் நம் கடமையாகும்.

'அலகை'யென்ற பேயின் காரணமாக நம் நாட்டில் நடைபெற்றுவரும் சம்பவங்களைக் கூர்ந்து நோக்கின், அது சில பொழுதில் மக்களுக்கு வேடிக்கையாகக் காணப்படு கிறது! மற்றும் சில செயல்களினல் உண்மையாகவும் தோற்றமளிக்கின்றது! அன்றியும் நம் தமிழ் இலக்கிய நூல் களிலும் அலகையின் பரியாயப் பெயர்களைப் பலவிதமாகக் கூறப்பட்டுள்ளன. மற்றும், நக்கீரர், குமரகுருபரர், அருணகிரிநாதர், பட்டினத்தடிகள் போன்ற பல பெரும் புலவர்களும், அலகை உண்டென்பதைப் பற்றிய வரலாறு

களைக் கூறியுள்ளார்கள். ஞானவாஸிஷ்டம், கேனோப நிடதம் முதலிய வேதாந்த நூல்களிலும், பேயைப்பற்றிய பல கதைகள் சொல்லப்படுகின்றன.

ஆனல், இங்கு தெய்வப்புலவர் உலக வழக்குப்பற்றியோ அல்லது நூல் வழக்குப்பற்றியோ "அலகையாவைக் கப்படும்" என்று கூறியிருக்கவேண்டுமெனத் தெரிகின்றது! இதன் முடிவை புலமைமிக்க தமிழறிஞர்களின் ஆராய்ச்சிக்கே விட்டுவிடுவோமாக.

இனி கீதையிலுள்ள நான்கு சுலோகங்கள் வருமாறு:-

கீ: 16—8 –

அஸத்யமப்ரதிஷ்டந்தே ஜகதாஹுரனீச்வரம்
அபரஸ்பரஸம்பூதம் கிமன்யத்காம ஹைதுகம்

கீ: 16—9—

ஏதாந் த்ருஷ்டிமவஷ்டப்ய நஷ்டாத்மாநோऽல்பபுத்தய:
ப்ரபவந்த்யுக்ரகர்மாண: க்ஷயாய ஜகதோऽஹிதா:

கீ: 16—10—

காமமாச்ரித்ய துஷ்பூரம் தம்பமானமதான்விதா:
மோஹாத் க்ருஹீத்வாऽஸத்க்ராஹான் ப்ரவர்த்தந்தேऽசுசிவ்ரதா:

கீ: 16—16—

அனேகசித்தவிப்ராந்தா மோஹஜாலஸமாவ்ருதா:
ப்ரஸக்தா: காமபோகேஷு பதந்தி நரகேऽசுசௌ

(பொருள்): உலகம் உண்மை இல்லாதது! தர்மாதர்மங்களின் நிச்சயத்தை நிலைப்படுத்தாதது! காமத்தையே காரணமாக உடையது! ஆண் பெண் சேர்க்கையாலாகியது; வேறொன்றும் இல்லை எனக்கூறுகிறார்கள்.

அற்பமான புத்தியுடைய இவர்கள், இந்நோக்கத்தைப் பிடித்துக்கொண்டு, ஆன்ம மார்க்கத்தை இழந்தவர்களாய்,

கொடுந்தொழில் புரிபவர்களாய், உலகிற்குச் சத்துருக்களாய் நாசத்தின்பொருட்டு வந்துதிக்கின்றனர்.

பூர்த்தி செய்யமுடியாத காமத்தை கைப்பிடித்து, இடம்பம், தற்பெருமை, மதம் இவைகளுடன் கூடியவர்களாய், மதிமயக்கத்தால் கெட்ட எண்ணங்களை மேற்கொண்டு, அசுத்தமான விரதங்களுடையவர்களாய் தொழில் புரிகின்றனர்.

பல நினைப்பால் உள்ளம் திகைப்புற்று, மோகமாகிய வலையில் அகப்பட்டு, காம நுகர்ச்சிகளில் ஆழ்ந்த பற்றுள்ளவர்களாய் அசுத்தமான நரகில் விழுவர்.

(குறிப்பு): 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற பிரமாண வாக்கியத்தையும், எவ்வுலகிற்கும் ஈஸ்வரனாகியும், எல்லாம் நடத்துவதற்குக் கர்த்தாவாகியும் உள்ள ஒரு பரமாத்மா உண்டென்பதை நம்பாமல், தாமே எல்லாம் செய்ததாயும், செய்கிறதாயும், செய்வதாயும், எல்லா வல்லமையும் தம்மிடமே இருக்கின்றதாயும், எண்ணிக் கடவுளை நிந்திப்பவர்கள் கொடிய நரகத்தை அடைகின்றார்கள் என்பது பொருள்.

969. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

(பொ-ள்): தன் மயிர்க் கூட்டத்தினின்று ஒரு மயிர் நீங்கினும் உயிர் வாழாத கவரிமாவை யொப்பார், உயிர் நீக்கத்தான் மானமெய்து மெல்லைவரின், அம்மானத்தைச் சகியாது இறப்பர்.

உயிரும் மானமும் உடன் நில்லாமைக்கண், பின்னும் போவதாய உயிரை நீத்து, என்றும் நிற்பதாய மானத்தைக் காப்பாற்றுவார்கள் என்பதாம். உவமை அது அவர்க்கு இயல் பென்பது விளக்கி நின்றது.

—பரிமேலழகர்.

(வி-ரை): உலகில் மக்களால் உயர்வாகக் கருதப்படும் பொருள்களிலெல்லாம் மிக உயர்ந்த பொருளாகக் கருதப்படுவது, ஒவ்வொருவனின் உயிராகும். எவனும் தன் உயிரை இழக்கச் சம்மதியான். இது எல்லா மக்களுடைய பொது இயல்பாகும். இதற்கு அடுத்தபடியாக மதிக்கப்படுவது, தனம், மனைவி, புத்திரன் இம்மூன்றும் மக்களின் அபிமானத்துக்கு உரியது. இம்மூன்றின்மேலுள்ள ஆசைப் பிணைப்பால், 'மனிதன் கட்டுண்டு கிடைக்கிறான். என, நூல்கள் கூறுகின்றன. இம்மூன்று ஆசைகளையும் 'உயிருக்கு அடுத்தபடியாக உள்ளன' என்று, சிலர் கருதுகிறார்கள். சிலர் இம்மூன்றையும், உயிருக்கும் மேம்பட்டதாகவும் கருதுகிறார்கள். இவர்கள் தாங்கள்தேடிய பொருளுக்கு நாசம் வரும்போது, சகியாமல் தங்கள் உயிரையே இழந்து விடுகிறார்கள்.

உதாரணமாக: இம்மூன்று அபிமானங்களில் ஒன்றாகிய புத்திரன் பிரிவுக்கு ஆற்றாது 'தசரதன் உயிர் இழந்தான்' என்ற இராம காதையே இதற்குச் சான்றாகும். மற்றும், பொருளின்மீது அதிக அபிமானம் கொண்டவர்கள் தங்கள் பொருளுக்கு நாசம் வரும்போது, தங்கள் உயிரையே வலிய மாய்த்துக்கொள்ளுகிறார்கள். மற்றும், தனக்குப் பிரியமான பெண்களை அடைவதற்காக, ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு 'கொலை' வாயிலாகத் தங்கள் உயிரையே கடைசியில் தத்தம் செய்தவர்களின் சரிதைகளைப் பல நூல்களிலும் காண்கிறோம். இது சாதாரண மக்களின் பொது இயல்பாகும்.

இனி சிறப்புடைய மாந்தர்களின் இயல்பு யாதெனில், இவர்கள், அறவொழுக்கமும், உலக மக்களின் நன்மையைக் கருதுவதுமான, உயர்ந்த லட்சிய நோக்குக்கொண்ட சிறந்த உத்தமர்களும் தியாகிகளும் ஆவர். இவர்களின் வரலாறுகளைத்தான் காவியங்களாகவும், சரித்திரங்களாகவும் நாடகங்களாகவும், 'முத்தமிழ் வாயிலாக நம் முன்னோர்கள் பலநூல்கள் இயற்றியுள்ளார்கள்' என்பது தெரியவருகிறது.

அவற்றுள், "அரிச்சந்திரன்" சரிதை முக்கியமானது. 'தன் உயிரைவிடச் சத்தியமே தனக்கு மேலானது' எனத் தன் வாழ்க்கையில் காட்டியுள்ளான். அதற்கு உதாரணமாக இரு கவிகள் வருமாறு.

"புலையனும் விரும்பாத இப்புன்புலால் யாக்கை
நிலையெனு மகிழ்ந்துயிரினும் நெடிதுதறச் சிறந்த
தலைமையாகிய சத்தியம் தவறுதல் தரியேன்
நிலையுணர்ந்த நீயெமக்கிது கழறுதல் நெறியோ" என்றும்,

"பதியிழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த
நிதியிழந்தனம் இனிநமக் குளதென நினைக்கும்
கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலே மென்றான்
மதியிழந்து தன்வாயிழுந் தருந்தவன் மறைந்தான்"

என்பதில், தன் உயிரைவிடவும், அவ்வுயிருக்குக் கிடைக்கக் கூடிய பரகதியை விடவும், 'சத்தியமே மேலானது' என்பதை இக்கவிகளால் நாம் உணரலாம்.

இதில் காணும் கவரிமானின் உபமானத்தையும் நாம் கண்டுணரத்தக்கதாகும். 'மானமுடையார் கவரிமானை ஒத்தவர்கள்' என, தெய்வப்புலவர் உபமானம் காட்டுகிறார், இதை வற்புறுத்தியே கம்பரும் 'மந்திரப்படல'த்தில் '.... அரிய நூலுங்கற்றவர், மானம்நோக்கிற் கவரிமா வனைய நீரார்" என்று கூறியதும், இக்குறட்பாவுக்குச் சான்றாகிறது. இவ்வுபமானத்தின் உட்கருத்தாவது, 'கவரிமான்' என்பது, ஒரு சிறந்த இயல்புடைய மிருகம். அது வடநாட்டில் இருப்பதாகச் சிலர் கருதுகிறார்கள். அதன் சிறப்பியல்பு யாதெனில், அதன் வாலில் பல நூற்றுக் கணக்கான மயிர்கள் அடர்ந்துள்ள 'மயிர்க்கற்றை' அதற்குண்டு. அதில் ஒருமயிர் இழந்தாலும், அது உயிர்வாழ விரும்புவதில்லை; உடனே இறந்து விடுகிறது! அது தன் மயிர் கற்றையிலுள்ள ஒரு மயிரைத் தன் உயிரைவிட மேலெனக் கருதி உள்ளது. இது,

"மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே
தானம் அழியாமை தானடங்கி வாழ்வினிதே
ஊன மொன்றின்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க்கெல்லா மினிது" என "இனியவை நாற்பது" என்ற நூலும் சான்று கூறுகிறது.

ஆதலால், உலகில் தன்மானம் பலபொருந்தி வாழ்க்கை நடாத்தும் உத்தமர்கள், 'ஒரு மானத்தை இழக்க நேரிட்டாலும் உயிரை நீத்து விடுவார்கள்' என்று தெய்வப்புலவர் கூறியதின் ஆழ்ந்த உட்கருத்தையும் முன்னோர்கள் வாழ்க்கை நடாத்திய சிறப்பியல்பும் இப்பாவில் ஆழ்ந்து கவனித்தற்குரியதாகும்.

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:—

கீ: 2—34—

**அகீர்த்திஞ்சாபி பூதாநி கதயிஷ்யந்தி தே௳வ்யயாம்
ஸம்பாவிதஸ்ய சாகீர்த்திர் மரணாத திரிச்யதே.**

(பொருள்): அர்ஜுனா! இந்த தர்ம யுத்தத்தைச் செய்யாமல் பின்வாங்கினால் உலகத்திலுள்ளோர் உன்னுடைய என்றும் அழியாத பழியைப் பேசுவார்கள். நல்ல புகழ் பெற்ற உனக்கு, அது மரணத்தைக் காட்டிலும் அதிகமாகும்.

எப்படியாவது உயிர் வாழ்ந்திருக்க வேண்டுமென்ற விருப்பம் விலங்கினத்திற்சேர்ந்தது. வீரன் ஒருவனுக்கோ, நன்கு உயிர் வாழவும் தெரியும்; வேண்டிய விடத்து உயிரை வழங்கவும் தெரியும். அப்படி உயிரை மகிழ்ச்சியாக முறையுடன் கொடுத்தால், அவன் புகழ் பரவுகிறது. உதாரணமாக:—எதிரி ஒருவனைக் காலால் உதைக்கையில், அவன் காலைத் தொட்டு வணங்கி அவனை உயிர்பிச்சை கேட்பது எவ்வளவு இழிவோ, அதிலும் பல மடங்கு தாழ்ந்தது, பழிக்கு ஆளாகி மானமிழந்து உயிர்வாழ்ந்திருத்தல்.

—சு. சித்பவாநந்தா.

978. பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து.

(பொ-ள்): பெருமையுடையார் அச் செல்வமுடைய ஞான்றும் தருக்கின்றி அமைந்தொழுகுவர். மற்றுச் சிறுமையுடையார், அப்பெருமை அவர்க்கு இல்லாத காலத்தும், தம்மை வியந்து பெருமையாகப் பேசுவர்.

—பரிமேலழகர்.

இதற்கு, 'தம்மைப் பணிந்து பேசுபவர்கள் உயர்ந்தோரது தன்மையை அடைவர். தம்மைப் புகழ்ந்து பேசுபவர்கள் இழிந்தோராவார்' என, உலகியலை வியந்து கூறினர்.

—மணக்குடவர்.

இதற்கு உதாரணமாக:-

"சொல்லருஞ் சூற் பசும்பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற் றலைநிமிர்ந்து தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்க்குமால்"—

இச் செய்யுள், நெற்கதிரின் விளைச்சலின் தன்மையில் மாறுதலடைவதையே கீழ் மக்களுக்கும் மேல் மக்களுக்கும் உவமை காட்டுகிறது. அவ்வாறெனின், நெற்பயிர் வளர்ந்து கருக்கட்டுகிறது. பின்பு அது திரண்டு பசும்பாம்புபோன்று தோற்றமளித்துக் கதிர் விடுகிறது. அப்பொழுது அது நிமிர்ந்து நிற்கிறது. இது, கீழ்மக்களுக்கு உதாரணம்! பின்பு, நிமிர்ந்து நின்ற அக்கதிரானது பால்க்கட்டி மணி பிடித்தவுடன், தலை குனிந்து கீழேசாய்ந்து நிலத்தில்விழுந்து வணங்குவது போலாகிவிடுகிறது. இந் நிலையைக் கல்வியறிவு மிகுந்த மேலோர்களுக்கு உவமையாகக் காட்டப்படுவதால், கீழ்மக்கள் செருக்கால் தங்களை நிமிர்ந்துகாட்டுவார்களென்பதும், மேன்மக்கள் தங்கள் கல்வியறிவால் யாவரிடத்தும் பணிந்துநடப்பார்களென்பதும் இவ்வுபமானத்தால் விளங்குகிறது.

இனி, கீதையிலுள்ள இரு சுலோகங்கள் வருமாறு:- முதலாவதாக, "பணியுமா மென்றும் பெருமை" என்பதற்கு ஒப்புவமை வருமாறு:-

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருவாறு:—

கீ: 16-3.

தேஜ: க்ஷமா த்ருதி: சௌசமத்ரோஹோ நாதிமானிதா
பவந்தி ஸம்பதம் தைவீமபி ஜாதஸ்ய பாரத

(பொருள்:) தைரியம், பிறர் குற்றம் பொறுத்தல், தளராமை, சுத்தம், வஞ்சனை செய்யாமை, செருக்கின்மை— எனுமிவையெலாம், தெய்வசம்பத்திற் பிறந்தவனுக்கு இயல்பாகின்றன.

சுயவர்களுக் கிடையில் பயப்படாதிருத்தல் தேஜஸ் அல்லது தைரியமாம். பிறர் செய்த தீங்குகளுக்காக அவர்களைத் தண்டிக்கவல்லவனாயிருந்தும், அவர்களை மன்னித்து விட்டு அதை மறந்துவிடுவது 'க்ஷமை' என்று பெயர் பெறுகிறது. மனதின் கண் அமைந்துள்ள திருதி அல்லது உறுதியானது உடலுக்கும் இந்திரியங்களுக்கும் உண்டாகின்ற சோர்வை, நீக்குகிறது. மனம், மொழி, மெய்—ஆகிய இம் மூன்றும் பரிசுத்தமாயிருத்தல் சௌசம் அல்லது தூய்மையாம். எண்ணம் சுத்தமாயிருந்தால் சொல்லும் தானே சுத்தியடைகிறது. 'பிறர்க்குத் தீங்கு செய்யவேண்டும்' என்ற எண்ணம் உண்டாகாதிருந்தால், அது அத்ரோகம் அல்லது வஞ்சகமின்மையாகிறது. 'பிறர் தன்னை மிக மதிக்க வேண்டும்' என்று நினைப்பது செருக்கு! அச்சமின்மையிலிருந்து செருக்கின்மை ஈருக இவையாவும் தெய்வ சம்பத்துக்களாகின்றன. —சு. சித்பவாநந்தா.

இரண்டாவதாக "சிறுமை அணியுமாந் தன்னை வியந்து" என்பதின் ஒப்புவமையை கவனிப்பாம்:

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:—

கீ: 16—17—

ஆத்மஸம்பாவிதா: ஸ்தப்த்தா தனமானமதான் விதா:
யஜந்தே நாமயஜ்ஞைஸ்தே தம்பேனாவிதி பூர்வகம்.

(பொருள்): தம்மையே மெச்சிக்கொள்பவராய், பூசைக்குரிய — வணங்கத்தகுந்த பெரியோரிடத்தும் வணக்கமில்லாதவராய், செல்வச் செருக்கும் மதமும் உள்ளவர்களாய், யாகத்தின் விதிவழுவி ஆடம்பரத்துக்கென்றே கர்மங்கள் செய்கிறார்கள்.

"இக்காலத்தில் பலர் கோயில்கள் கட்டுவிப்பதும், விழாக்கள் கொண்டாடுவதும், அபிஷேகங்கள் செய்வதும் இத்தகைய தன்மையுடையவர்களாயிருக்கின்றனர். தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளுதல் ஒன்றே அதன் கருத்தாகும்."
—சு. சித்பவாநந்தா.

999. நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்.

(பொ-ள்): பண்பின்மையான் ஒருவரோடுங்கலந்து அளவளாவி வாழமாட்டாதார்க்கு, மிகவும் பெரிய உலகம் இருளில்லாத பகற்பொழுதினும் இருளின்கட்கிடந்ததாம்.

எல்லாரோடுங் கலந்தறியப் பெருமையின், பண்பிலார்க்கு உலகியல் தெரியாதென்பார், உலகமிருளின்கட் பட்டதென்றார்.
—பரிமேலழகர்.

இதற்கு ஸ்ரீ கண்ணபிரான் இவ்வுலகமானது சிலருக்கு பகல் இரவாகவும், இரவு பகலாகவும் காணப்படுகிறது என்பதன் காரணங்களை உபமானங்காட்டி ஒரு சுலோகத்தால் விளக்குகிறார்.

இனி, கீதையிலுள்ள ஒரு சுலோகம் வருமாறு:—

கீ: 2—69.—

யாநிசா ஸர்வபூதானாம் தஸ்யாம் ஜாகர்த்தி ஸம்யமீ
யஸ்யாம் ஜாக்ரதி பூதானி ஸா நிசா பச்யதோ முனே:

(பொருள்): *எல்லாப் பிராணிகளுக்கும் எது இரவோ அதில் மனமடங்கிய முனிவன் விழிப்புடையவனாய் இருக்கிறான். எதில் பிராணிகள் விழிப்புடையனவோ, அது உண்மையைக் காணும் முனிவனுக்கு இரவு.*

"உலகம், மக்களுக்குப் பகலாயிருக்கும்போது, புலி, ஆந்தை போன்றவைகளுக்கு கண் நன்றாகத் தெரிவதில்லை. அது இரவுபோன்று அவைகளுக்கு ஆகின்றது. அவைகளுக்குப் பகல்போன்று, கண் இரவில் தெரிகிறது. மற்ற பிராணிகளுக்கு அது இரவு. திருடனுக்கும், சூதாடுபவனுக்கும் அந்தத் தொழில் பகல்போன்று விளங்கும். மற்றவர்க்கு அது இரவுபோன்று வெறுப்பாய் இருக்கும்.

இந்திரியங்களை வென்ற யோகிக்கு உலக விவகாரங்கள் இருள்போன்று மறைந்து கிடக்கின்றன. பரமாத்துவ தத்துவ உண்மை, அவனுக்குப் பகல்போன்று நன்கு விளங்குகின்றது.

போகிக்கு உலக இன்பம், பகல் தத்துவமுணர்ந்த யோகவானுக்கு, அது இரவு. தத்துவஞான யோகிக்கு, வீட்டுவுளின் உண்மை, பகல். போகிக்கு, அது இரவு.

—சு. சித்பவானந்தா.

சீவன் முக்தர்களுக்கு உலக விவகாரங்கள், 'சொப்பனத்திற்கு ஒப்பானது' என்பது கருத்து.

குறளும் கீதையும் என்பதின் ஆராய்ச்சி முற்றும்.

சுபம்.

பிழை திருத்தம்

பக்கம்	வரிசை	பிழை	திருத்தம்

தோற்றுவாய்.

பக்கம்	வரிசை	பிழை	திருத்தம்
6	1	தவராத	தவறாத
6	30	கொற்றனன்	கொன்றனன்
7	3	விரும்பது	விரும்பாது
9	7	ஞானங்க்	ஞானங்
9	10	யுணந்து	யுணர்ந்து
10	21	உபநிடம்	உபநிடதம்
13	19	விவேகாந்தரும்	விவேகாநந்தரும்

குறளும், கீதையும்.

பக்கம்	வரிசை	பிழை	திருத்தம்
4	21	(திருமந்திரத்திலும்)	(சிவஞானதீபத்திலும்)
12	9	பொருத்துக்கொள்	பொறுத்துக்கொள்
	30	விடுகின்றனதெனவும்	விடுகின்றனவெனவும்
23	31	சக்தியுடையவுர்களை	சக்தியுடையவர்களை
29	18	உண்யையாகும்	உண்மையாகும்
35	21	சத்யத்தையே	சத்தியத்தையே
37	17	என்ற	என்று
38	23	நேர்மாராக	நேர்மாறாக
56	6	மெய்ப்பொருளானாகிய	பொய்ப்பொருளானாகிய
61	22	கயிரோ	கயிறோ
62	15	சாஸ்த்திரத்துடத்தும்	சாஸ்த்திரத்திடத்தும்

68	23	காரணமாய்	காரணமாய
68	29	அவ்வாறுணதற்கு	அவ்வாறுணர்தற்கு
76	28	நுளைந்து	நுழைந்து
88	6	குறிகோளை	குறிக்கோளை
101	9	ஆரோக்கியதை	ஆரோக்கியத்தை
103	14	மனத்தார்	மனத்தாற்
104	12	அறிவடையார்	அறிவுடையார்
105	25	கொள்ளலாது	கொள்ளலாகாது
107	7	விருப்பி	விரும்பி
122	6	நெடிதுதறச்	நெடிதுறச்
125	24	நினைப்பது	நினைப்பது
126	11	யிருக்கின்றன	யிருக்கின்றனர்
127	6	விழுப்புடையனவோ	விழிப்புடையனவோ
127	24	சொப்பணத்திற்கு	சொப்பனத்திற்கு